Free Circulation Germany- England

மணி: 71 - ஓசை: 296 மே. May. 2021

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

27TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A

Orientalisch
Textilien & Schmuck
30 ஆவது ஆண்டு நிறைவு
என்றும் எம்முடன் தொடர்பில் இருங்கள்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

## சிதையப்போகும் செம்மணி



Dr.IN





## முதுகுக்குப் பின்னே பேசும் முகங்கள்



## திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழல்

## அரசியல் களம்

கொழும்பிலிருந்து ஆர்.பாரதி

# நான் வில்லனாக இருந்த சில கணங்கள்

## சுகம் கேட்டு சுகம் கேட்டது



சில மாதங்களாக எனது தேடல்கள் நான் வாழும் நாட்டையும் தாண்டி தமிழ்வாழும் இடம் எங்கும் வியாபித்து உள்ளது. இந்தத் தேடல் முன்பும் இருந்தது தான். ஆனால் தற்போது எனது தளம் தாய்மண்ணில் ஆழவேர் ஊன்றி உள்ளதால் என் வீட்டு முற்றத்தில் இருந்து நிலவைப்பார்க்கும் அழகையும் மகிழ்வை அது தருகின்றது.

எதனைத்தேடுகிறோமோ அது நம் கண்ணுக்கு தெரிவதுபோல. ஒரு சிறப்பான கட்டுரை என் கண்ணுக்குள் சிக்கியது. முதல் பந்தி வாசிக்கும்போதே எனக்கும், வார்த்தைகளுக்கும் ஒரு நெருக்கம் வந்தது. அலங்காரமோ அலாரிப்புகளோ எதுவும் இல்லை, அந்நியப்படதா ஒரு எழுத்து. அப்படியான எழுத்துக்குரியவர்களைத் தேடுவது என் பணி.

தேடினால் கிடைக்கும், கிடைக்காது என்று முடிவுக்கு வந்தாலும் மனம் முடிவுக்கு வரவில்லை என்றால் நிச்சயம் கிடைக்கும். எனக்கு படைப்பாளியின் பெயர் முகவரி யாவும் கிடைத்தது.

ஒரு ஒத்த கோட்டில் பயணிக்கும் எழுத்தாளனின் படைப்புக்குள் மூழ்கும்போது, காதலுக்கு மட்டும் தான் அந்த மகிழ்ச்சி தரும் சக்தி உண்டு என்ற எண்ணம் தவிடு பொடியாகிவிடும். படைப்பாளிகள் யாவரும் காதலர்கள் அல்ல, ஆனால் தமிழின் காதலுக்குரியவர்கள். இப்போது படைப்பாளி ஆணோ அல்லது பெண்ணோ என்ற பால்நிலை கடந்த நிலையில் இருந்தேன். எனக்கு வட்சப் வசப்பட்டது.

உங்கள் எழுத்தை வாசித்தேன். யதார்த்தமான மொழிப்பிரயோகம், ஒரு தாயின் கடிதத்தில் எப்படி செயற்கை வாசம் எதுவும் இல்லையோ, அதுபோல் உங்கள் கட்டுரைகள் அமைந்து இருந்தது. சிலவற்றைப்படித்தேன் சிலவற்றை சுவாசித்தேன். [ இன்று சுத்தமான காற்று கிடைப்பது அரிது எனவே நன்றாகவே சுவாசித்தேன்.]

எனது பத்திரிகையில் உங்கள் படைப்புகளை வரவேற்கின்றேன். முடிந்தால் தொடர்பு கொள்ளவும்.



மாதவி
(யேர்மனி)

2 நீலக்கோடுகள் பக்கென்று படர்ந்தது. பலர் பார்த்ததிற்கான அந்த வெளிப்பாடு தெரியாமல் மறைத்தும் வைத்திருப்பார்கள். ஆனால் நான் தேடிய படைப்பாளி திறந்தமனதுக்குரியவர்.

எனக்கு ஒரு அவசர புத்தி. அது எனக்கு தெரியும், இருந்தாலும் பார்த்தேன். கடைசியாக பார்த்த நேரம் மேலே 10.18 என்று இருந்தது. அடுத்து ஒரு வரி எழுதினேன். ஒரு வரியில் எழுத விருப்பமா? இல்லையா? ஒரு பதில் தரவும் என்று குறிப்பிட்டேன். 4 மணிநேரம் ஆகிவிட்டது பதில் இல்லை. இது காதலுக்கான தூதோ! துரத்தலோ! இல்லை. ஒரு படைப்பாளியை என் இலக்கியப் பயணத்துடன் இணைத்துக்கொள்வதற்கான மிரட்டல் அல்லாத ஒருவகை விரட்டல்.

துணிச்சலான யதார்தமான எழுத்துக்கு சொந்தக்காரரார் அந்த படைப்பாளி, இது எனது கணிப்பு. ஆனால் அது இப்போ கரையத்தொடங்கியது. என்ன வேலையோ அவசரமோ! நான் பொறுமை காத்திருக்கலாம். நேரம் ஆக ஆக, நான் சதாரண மனிதனின் நிலையில் இருந்து கீழ் நோக்கி சென்று கொண்டு இருந்தேன்.

ஒருவரை பாராட்டுவது இன்று மிக அரிது. அதிலும் அவர்களை உள்வாங்கி பிறருக்கும் இனங்காட்ட முயல்வது இன்று முயல்கொம்பான காலம். நான் ஒரு பைத்தியக்காரன். எனது கலை, எனது படைப்பு, என்று என்நேரத்தை செலவு செய்யாமல், பிறருக்காக எனது வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவு செய்துவிட்டேன். திரும்பி பார்த்தால் எனக்கான நாட்கள் எண்ணபடும் நேரம் நெருங்கிவிட்டதை உணர்கின்றேன்.

நான் வில்லங்கமான வில்லனா! இல்லை நல்லவனா? என்ற கேள்விக்கே இடமின்றி வில்லனாகி விடுகின்றேன்.

தொலைபேசியை தூக்கி ஒரு இடத்தில் வைத்துவிட்டு என் வேலையைத் தொடங்கினேன்.

இருந்தாலும் இவர்கள் எல்லாம் எழுத்தாளர்கள். பகுதிநேர படைப்பாளிகள். நேரம் காலம் பார்த்துதான் அவர்களுடன் உரையாடவேண்டும். ஒரு வரி எழுத நேரம் இல்லை! என்பவர்களை நான் நம்பமாட்டேன். அவர்களுக்கு அதில் அக்கறை இல்லை, என்றே எடுத்துக்கொள்வேன். என் கோபமும் சாபமும் என்னுள் தணியவில்லை.

டிங் என்று ஒரு ஒலி! இந்த வில்லனுக்கு கேட்டது. நான்கு மணி நேரத்தின்பின் நான் விரும்பிய படைப்பாளியிடம் இருந்து வொய்ஸ் மசேச் வந்திருந்தது.

எனக்கு எழுத்து சுவாசம் போன்றது. எழுத்துக்குபின்தான் எனக்கு உணவு உறக்கம் எல்லாம். எனக்கு திருமணமாகி 6 வருடங்கள் 3 குழந்தைகள். ஐந்து வருடங்களின் பின்பு இப்போது மீண்டும் எழுதத் தொடங்கியுள்ளேன். என் எழுத்தும் செயலும் ஒன்று. உங்கள் வேண்டுதலைக் கேட்டு பூரித்துப்போனேன்.


இந்த மகிழ்வான தருணத்தை பகிர்ந்து கொள்ள, முதலில் எனது மாமியிடம் ஓடினேன். கால் படியில் தடக்குப்பட்டு வீழ்ந்துவிட்டேன். தலையில் பலத்த அடி. நான்கு இழை போட்டுக்கொண்டு இப்போ தான் வீடு வந்து இளைக்க இளைக்க கதைக்கிறேன். என் மாமி காலில் இறக்கை முழைத்ததுபோல் கண்டபடி பறந்து இருப்பாய் படி கிடி எதுவும் தெரிந்திருக்காது. உனக்கு எழுத்து மீது உள்ள காதல், எதிலும் இல்லை. ஓய்வு எடு என்கிறா. மண்டை எனக்கு

28 ஆம் பக்கம் பார்க்க...






வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 296



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333
e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# முதலமைச்சர் பதவிக்காக ஆரம்பமாகியுள்ள போட்டி

கொழும்பிலிருந்து
ஆர்.பாரதி

மாகாண சபைகளுக்கான தேர்தல் எப்போது நடைபெறும் என்பது தொடர்பில் இதுவரையில் அறிவிக்கப்படாத போதிலும் வடக்கு கிழக்கு முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பது குறித்து தமிழ் அரசியல் கட்சிகள் இடையே முரண்பாடுகளும் சர்ச்சைகளும் உருவாகியிருக்கின்றது. தேசியக் கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்திருக்கும் நிலையில், நடைபெறக் கூடிய மாகாணசபைத் தேர்தல் ஒன்று எந்த ஒரு தமிழ் கட்சியும் வடக்கிலோ கிழக்கிலோ அறுதிப் பெரும்பான்மை பெற முடியாது என்ற நிலைமை காணப்படுகின்றது. இதற்கு மத்தியிலும் தமிழ் கட்சிகளிடையே உருவாகியிருக்கின்ற மாகாண சபைகள் பலமானதாக அமையுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

மாகாண சபைத் தேர்தல்கள் எப்போது நடைபெறும் என்பது கேள்விக்குரிய ஒன்றாகவே இருக்கிறது. தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பது குறித்து உருவாகியிருக்கும் சர்ச்சையை தேர்தலை ஒத்தி வைப்பதற்கான உபாயமாக அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் தற்போதைய மாகாண சபை தேர்தல் முறை குறித்து திருத்தம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டிய தேவை காணப்படுகிறது. குறிப்பிட்ட திருத்தத்தை கொண்டு வந்து தேர்தலை நடத்துவதற்கு எப்படியும் எட்டு மாதங்களாவது தேவைப்படும். அப்படிப் பார்க்கும் போதும் மாகாண சபைகளுக்கான தேர்தல் இந்த வருடத்தில் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன.

இருந்தபோதிலும் தமிழ் கட்சிகள் மாகாண சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு வியூகங்களை வகுப்பதற்கு ஆரம்பித்துவிட்டன. கடந்த பொதுத்தேர்தலின் போது தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தோல்வி அடைந்ததும் அதற்கு பிரதான காரணங்களில் ஒன்று. தேர்தல் தோல்வியின் பின்னர் பத்து கட்சிகளை இணைத்து கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சியை மாவை சேனாதிராஜா முன்னெடுத்திருந்தார். 10 கட்சிகளை அவர் அரவணைக்க முற்பட்டது வரப்போகும் மாகாண சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு தான். கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற அனைத்து தரப்பினரையும் இதன்மூலம் அரவணைத்து முதலமைச்சர் பதவியை கைப்பற்றி விட முடியும் என்ற கனவுடன் மாவை சேனாதிராஜா காய்களை நகர்த்தினார்.

தமிழரசு கட்சியின் ஒரு தரப்பினர் மாவை சேனாதிராஜா இந்த கருத்துக்கு




ஆதரவாக இருக்கின்ற போதிலும் கூட மற்றொரு தரப்பினர் மாவை முதலமைச்சராக வருவதை விரும்பவில்லை. குறிப்பாக சுமந்திரன் ஸ்ரீதரன் போன்றவர்கள் மாவை சேனாதிராஜா முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவது தங்களுடைய அரசியலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கருதுகிறார்கள் அதனால் அதற்கு முட்டுக்கட்டை போடுவதற்கான முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இதனைவிட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் இந்த 10 கட்சிகளின் கூட்டமைப்பு விரும்பவில்லை. கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கட்சிகளை இணைத்து புதியதொரு கூட்டணியை நீங்கள் அமைக்கத் தேவையில்லை. அவர்கள் விரும்பினால் மீண்டும் கூட்டமைப்புடன் இணைந்து கொள்ளட்டும் என்பதுதான் மாவைக்கு சம்பந்தன் கொடுத்த பதிலாக இருந்தது.

பத்து கட்சிகளும் புதிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கினால் அதன் தலைமைப்பதவி மாவை சேனாதிராஜாவிடம் போக கூடிய வாய்ப்புகள் இருக்கின்றது. அது தன்னுடைய தலைமை பதவிக்கு ஆப்பு வைத்து விடும் என்றார் கருத்து சம்பந்தனிடம் இருக்கலாம். அதே போல் கூட்டமைப்பின் தலைமை பதவியில் கண் வைத்து செயற்படும் ஸ்ரீதரன் – சுமந்திரன் கூட்டணியை பொறுத்த வரையிலும் மாமா இந்த நகர்வு தமக்கு ஆபத்தானது என்ற கருத்தையே கொண்டிருக்கிறார்கள். 10 கட்சிகளின் கூட்டத்தில் இவர்கள் கலந்துகொண்டு இருந்தாலும் கூட அது பலமடைவதை அவர்கள் விரும்பவில்லை.

இந்தப் பின்னணியில் 10 கட்சி கூட்டமைப்பு என்பது செயலிழந்து போன ஒரு நிலைமை தான் கடந்த இரண்டு மாதங்களாக காணப்படுகின்றது. பத்துக் கட்சிகளையும் இணைத்து பேரவை ஒன்று அமைக்கப் போவதாக மாவை சேனாதிராஜா முன்னர் அறிவித்திருந்த போதிலும் கூட பின்னர் அந்த அறிவிப்பில் இருந்து அவர் பெருமளவுக்கு விலகிக் கொண்டு விட்டார். அது சாத்தியமல்ல என்பது அவருக்கு பின்னர் தான் புரிந்தது. இருந்தபோதிலும் முதலமைச்சர் பதவிக்கான வாய்ப்பை விட்டுக் கொடுப்பதற்கு அவர் தயாராக இல்லை. அதற்கான நகர்வுகளை தனக்கு ஆதரவான சி.வி.கே.சிவஞானம் போன்றவர்கள் மூலமாக அவர் முன்னெடுத்து வருவதைக் காணமுடிகின்றது.

இந்தப் பத்துக் கட்சி கூட்டணியில் இருந்து முதலில் வெளியேறியவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தான். கொள்கை ரீதியாக சில காரணங்களை அவர் இதற்காக முன்வைத்தார். விக்னேஸ்வரன் கூட இதில் உண்மையில் அக்கறையாக கலந்து கொண்டவர் அல்ல. பெரும்பாலும் கட்சித்

28 ஆம் பக்கம் பார்க்க...



கே.எஸ்.சுதாகர்
(மெல்போன்– அவுஸ்திரேலியா)




# சுண்டங்காய் மான்மியம்

ஊரில் சரிவான பள்ளமான காணிகளுக்கு கிராக்கி அதிகமில்லை. இங்கே அவற்றுக்குத்தான் மவுசு அதிகம். வியூ பார்க்கலாமாம். மஞ்சு அப்படிப் பட்டதொரு காணியை வாங்கி அழகானதொரு வீடு கட்டினாள். முன்புறத்தை சமதரையாக்கி பூக்கண்டுகள் வைத்தாள். பின்புறம் தாயார் தேவாவின் இராச்சியம். ஜன்னலிற்குள்ளால் எட்டிப் பறிக்கக்கூடியமாதிரி கறிவேப்பிலைக் கண்டுகளும், சரிவுகளில் சுண்டங்காய் முதற்கொண்டு பூசணிக்காய் வரை பயிரிட்டிருந்தார் அவர்.

சனிக்கிழமை அதிகாலை. முன்புறத்தில் சாடிகளுக்குள் கள்ளி மரங்களை நட்டு, அதற்குள் பவளக்கற்களைப் போட்டபடி நின்றிருந்தாள் மஞ்சு.

எதிர்வீட்டில் வாட்டசாட்டமான இளைஞன் ஒருவன், தன்னுடைய ரெஸ்லா காரைத் துடைத்துக் கொண்டிருந்தான்.

வீட்டிற்கு வரும் உறவினர் நண்பர்களுக்கு, எல்லா மரக்கறிகளைப் பற்றியும் விலாவாரியாக வகுப்பு எடுக்கும் தேவா, சுண்டங்காய் பற்றி மூச்சு விடமாட்டார். ஏனென்றால் சுண்டங்காய் உடலிலுள்ள கிருகிகளைக் கொல்லுமாம் கொழுப்பைக் கரைக்குமாம் ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துமாம் நீரிழிவுநோயிற்கும் நல்லதாம். ஆராவது சுண்டங்காயோ அல்லது மரமோ கேட்டால், வாயைச் சுழித்துக்கொண்டு கையை விரிப்பார். எல்லாச் சுண்டங்காய்களையும் தானே சாப்பிட்டு, இந்த உலகில் நீடூழிகாலம் தானே வாழவேண்டும் என்பது அவர் பெருவிருப்பு.

வீட்டிற்கு முன்னால் பெரு வெடிப்பு நிகழ்ந்ததுமாப் போல் ஒரு சத்தம் கேட்டது. மஞ்சு பதுங்கியபடி ஒளிந்து நின்று பார்த்தாள். ரெஸ்லா கார் மீது இன்னொரு கார் மோதி நின்றது. ரெஸ்லாக் காரைத் துடைத்துக் கொண்டிருந்த இளைஞன் தனது காரைச் சுற்றிச்சுற்றி ஓட, வந்தவன் கலைத்துக் கலைத்து அவனை வாளால் வெட்டினான். வயிற்றுக்குள்ளிருந்து குடல் வெளியே வர, அதையும் தூக்கிப் பிடித்துக்கொண்டு வீட்டிற்குள் ஓடினான் அவன்.

சுண்டங்காய் மரத்தில் கையை வைக்கப்போன தேவா, சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு மரங்களையும் முறித்துக்கொண்டு சரிவு நிலம் வழியே சுருண்டார்.

நெஞ்சம் பதறக் கத்திக்கொண்டு உள்ளே வந்த மஞ்சு, அம்மாவைக் காணாது திகைத்தாள். வேலியோரம் முனகும் சத்தம் கேட்டது. மூன்று சுண்டங்காய் மரங்களை வேரோடு முறித்துக்கொண்டு, வீட்டை வியூ பார்த்தபடி விழுந்து கிடந்தார் தேவா.

முன்வீட்டில் அம்புலன்ஸ் வந்து இளைஞனை ஏற்றிக்கொண்டு போனபின்னர், அங்கே விடுப்புப் பார்க்க வந்தவர்களைக் கெஞ்சி மன்றாடி தேவாவை சரிவு வழியே தூக்கி வந்து காரில் ஏற்றினார்கள். தேவாவிற்கு பின்வீட்டு நாய் கடித்த காயமும், அவர்கள்வீட்டு வேலியோரம் கிடந்த பிசுங்கான் வெட்டிய காயமும் இருந்தன. தவிர உடலெல்லாம் முள்ளம்பன்றி சிலிர்த்தாற்போல் ஏகப்பட்ட சுண்டங்காய்மர முள்ளுகள். அவருக்கு நீரிழிவுநோய் இருந்ததால் வைத்தியசாலைக்கு உடனே விரைந்தார்கள். முன்வீட்டுக்காரன் ஒருகிழமையில் வீடு வந்து சேர்ந்துவிட்டான். தேவா வைத்தியசாலையில் ஒருமாதம்வரை தங்க வேண்டியிருந்தது.



வந்ததும், என்னடி பிள்ளை... குடலைத் தூக்கிப் பிடிச்சுக் கொண்டு ஓடினான் எண்டாய்... அவன் இப்ப குதியங்குத்த எக்சசைஸ் செய்யுறான் என்றார் தேவா.

அம்மா... உங்களுக்கு நீரிழிவுரைப் வண் அம்மா... உங்களுக்குக் காயம் வந்தா லேசிலை மாறாதம்மா.. இந்தச் சுண்டைக்காய் விஷயம் கூட உங்களுக்குத் தெரியேல்லையே!

சுண்டங்காய் என்றவுடன் தேவாவிற்கு வீட்டின் பின்புறம் போகக் கால்கள் துறுதுறுத்தன. சுண்டங்காய் வருத்தங்களுக்கு திறமான சாமான் தான். ஆனா மரத்தின்ரை முள்ளு நரகத்தின்ரை முள்ளு மனதிற்குள் புறுபுறுத்தார்.

ஒரு வருஷத்துக்குக் கவனமா இருக்கவேணும் எண்டு டொக்ரர் சொல்லியிருக்கிறார். இல்லாட்டிக் கால் கழட்ட வேண்டி வருமாம் என்றாள் மஞ்சு.

# 'கடுகுக்கதை'
## உண்மையும் பொய்யாகி



ஐயாவும் எவ்வளவோ
சொல்லிப்பார்த்தார்.

அம்மம்மா ஐயாவை லேசில
விடுறதாயில்லை.

பிரச்சனை இதுதான் -
'இரவு படுக்கேக்கை'

ஓடின சுவர் மணிக்கூடு,
சாமம் மூன்று மணிக்கு

'நிண்டிட்டுது' என்று ஐயா
அம்மம்மாவிடம்

சொல்லியிருக்கிறார்.
உடனே அம்மம்மா,

'ஏனப்பா நீங்கள் மூன்று மணிக்கு
எழும்பின்னீங்கள்'

என்று கேட்டிருக்கிறார்.
அதுக்கு ஐயா,

'தான் இப்ப ஆறு மணிக்குத்தான்
எழும்பினனான்' என்றிருக்கிறார்.
'மூன்று மணிக்கு
எழும்பாட்டி எப்படி மணிக்கூடு
சாமம் மூன்று மணிக்கு நிண்டது
என்று சொல்லுறியள்,

என்னை ஏமாத்தலாம் என்று
நினைக்காதேங்கோ',

இது அம்மம்மாவின் குரல்
உச்சக் கோபத்தில்.

ஐயாவைப் பார்க்கப்
பாவமாயிருந்தது - இருந்தும்

இதை எப்படித்தான் அவர்
புரியவைக்கப் போறார்

என்ற ஆர்வக்கோளாறில் நான்!

தமிழினி பாலசுந்தரி (நியூஸ்லாந்து)



# அரசியலில் யேர்மனியின் காவிய நாயகி அஞ்சலோ அம்மையார்



## தனக்கு முன்னைய தலைவர்களை ஒரு போதும் இகழ்ந்ததோ!, திட்டியதோ கிடையாது



விமல் சொக்கநாதன் (இங்கிலாந்து)

யேர்மனி என்ற நாடு. அந்த எண்பது மில்லியன் பொதுமக்களை கடந்த 18 ஆண்டுகளாக தலைமை தாங்கி வழி நடத்தி வந்தவர் ஆட்சித்தலைவி, காவிய நாயகி அஞ்சலா மேர்க்கல் அம்மையார். ஐரோப்பிய கண்ட நாடுகளில் உறுதியான பொருளாதார வளம் மிக்க யேர்மனி நாட்டின் அதி அற்புதமான இந்த ஆட்சித்தலைவியின் அர்ப்பணிப்பு மிக்க சேவையைப் பாராட்டி நன்றி உணர்வு மிக்க யேர்மனியின் குடி மக்கள் தெருவில், வீடுகளில், மாடிகளில் என்று எல்லா இடங்களிலும் இணைந்து கடந்த மாசிமாதம் முதலாம் திகதி 6 நிமிட நேரம் தொடர்ச்சியாக கரகோஷம் எழுப்பி தமது நன்றி மலர்களை கண்ணீருடன் சமர்ப்பித்தார்கள்.

அஞ்சலா அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் பொதுமக்கள் எவருமே அவர் மீது எதுவித குற்றச்சாட்டுக்களும் எழுப்பியது கிடையாது. தன் குடும்பத்து உறவினர்கள் எவருக்குமே அவர் அரசாங்கப்பதவி வழங்கியது கிடையாது. ஜேர்மன் அரசின் எந்தச் சாதனைக்கும் தாமே பொறுப்பு என்று அவர் உரிமை பாராட்டியது கிடையாது தமது ஆட்சிக்கு முன் தலைமைப் பொறுப்பு வகித்த ஆட்சித்தலைவரை. அஞ்சலோ அம்மையார் ஒரு போதும் இகழ்ந்ததோ திட்டியதோ கிடையாது.

கட்சியின் தலைமைப் பதவியை இவர் கடந்த வாரம் கையளித்த போது முன்னரை விட மிக உயர்வான இடத்திலேயே ஜேர்மனி நாடு இப்போது இருப்பது குறிப்பிடத்தக்கது. அஞ்சலோ அம்மைடியார் அணியும் ஆடைகளை நீங்கள் தொலைக் காட்சியிலும் புகைப்படங்களிலும் பார்த்திருப்பீரக்ள். பிரிட்டனின் மேனாள் ஆட்சித்தலைவி மார்கிரட் தட்சர் அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் அவரைப் போல மிக நவ நாகரிகமாக ஆடைகளை எவரும் அணிந்ததில்லை .

பிரதமர் மார்கிரட்டின் ஆடைகளை அமெரிக்க அரசியலின் முன்னணி அமைச்சர்கள் சின்னத்திரையின் புகழ்பெற்ற நடிகைகள், வெள்ளித்திரை நடிகைகள் பெருமளவில் பின்பற்றத் தொடங்கினார்கள். ‘அஞ்சலாவின் ஆடைகள்ஏன்இவ்வளவு மிகமிகசாதாரணமா னவையாக இருக்கின்றன ’ என்று ஒரு ஜேர்மன் செய்தியாளர் கேட்டபோது அஞ்சலா அம்மையார் வழங்கிய பதில்;





‘நான் ஒரு அரச ஊழியர் . விதம் விதமாக புதிய ஆடைகளை அணிய நான் ஒன்றும் FASHION MODEL அல்லவே.. இன்னொரு சந்தர்ப்பத்தில் ‘உங்கள் வீட்டைத் துடைத்து, பெருக்கி, சமையல் உதவிக்கு பெண்கள் யாரும் இருக்கிறார்களா..?’ என்று நிருபர் ஒருவர் கேட்ட போது அஞ்சலா அம்மையார் வழங்கிய பதில் இல்லவே இல்லை என் வீட்டில் பணியாட்கள் யாருமே இல்லை எனக்கு அவர்கள் தேவையில்லை. என் கணவரும் நானுமே தினமும் வீட்டு வேலைகளை செய்து வருகிறோம்’. வியப்படைந்த நிருபர் மேலும் இப்படி கேட்டார் ‘உங்கள் வீட்டின் அழுக்கான உடைகளை துவைபப்து நீங்களா..? அல்லது உங்கள் கணவரா..?’ இதற்கு அஞ்சலா அம்மையாரன் பதில்: ‘துணிகளை தெரிவு செய்து எடுத்து வைப்பது நான் ஆனால் வொஷிங் மெஷினை இயக்குவது என் கணவர் தான். பெரும்பாலும் இரவு நேரத்தில் தான் அவர் அதனை இயக்குவார். இதற்கு காரணம் இரவு நேரங்களில் மின்சாரத்தின் மூலம் பயன்படுத்தும் சாதனங்களின் மீது அழுத்தம் குறைவு. இதை விட முக்கியம் துணி துவைக்கும் இயந்திரம் எழுப்பும் பெரிய ஒலி பக்கத்து வீட்டார்களின் தூக்கத்தை குழப்பி அவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாமலிருப்பதற்கு பார்த்துக் கொள்கிறோம்’.

மிகவும் சாமான்யமான வீட்டில் தான் அஞ்சலா அம்மையார் இன்னும் வாழ்ந்து வருகிறார். பக்கத்து வீட்டுக்காரருடன் பகிர்ந்து கொள்ளப்படும் பொதுவான ஒரு சுவர் நடுவில் இருக்கும்,. இவர் பதவிக்கு வரும் முன்னர் மேற்கு ஜேர்மனி என்றும் வசதிகள் குன்றிய கிழக்கு யேர்மனி என்றும் பனிப்போர் காலத்தில் இரண்டு யேர்மனிகள் இருந்தன.

தாம் வசதிகள் குறைந்த கிழக்கு யேர்மனியிலிருந்து வந்தவர் என்பதை அஞ்சலா அம்மையார் ஒருபோதும் மறந்தது கிடையாது. இதனால் தானோ என்னவோ பள பளக்கும் கார், அரண்மனை போன்ற இருப்பிடம் சொந்த விமானம் என்று எதுவுமே அவருக்கு இருக்கவில்லை. ஆட்சித்தலைவியாக முன்னர் அவர் வாழ்ந்த வீட்டிலேயே தொடர்ந்தும் வாழ்ந்து வருகிறார். ஒரு நீச்சல் குளமோ, வனப்பு மிகுந்த பூந்தோட்டங்களோ அங்கு கிடையாது. ஐரோப்பாவின் மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கட்டிய எழுப்பியதில் பெரும் பங்கு இவருக்குண்டு. எவரும் கைக் கூப்பி தொழக்கூடிய பண்புகள் நிறைந்த தலைவி மேர்கெல்லை கௌரவிக்க யேர்மனிய மக்கள் ஆறு நிமிடங்கள் வரை கரகோஷம் செய்ததில் ஆச்சரியம் எதுவுமே இல்லை. நாட்கள் கடந்தாலும் இச்செய்தி ஆறு நிமிடம் அல்ல! ஆண்டாண்டு காலம் அவை நினைவில் இருக்கும்.






Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171 | Mob:No:0179 1484 892 | e.mail:siva@hotmail.de

# பத்மஸ்ரீ 'சின்னக் கலைவாணர்' விவேக்
# நம் மனங்களிலும் மரங்களிலும் வாழ்வார்

நடிகர் விவேக் குடும்பத்தினருடன் வீட்டில் பேசிக் கொண்டிருக்கும் போது மயங்கி விழுந்தார். இதையடுத்து வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு தீவிர சிகிச்சை பெற்று வந்தார்.

அதிகாலை காலமானார் இதையடுத்து அவரது இதயத்தின் செயல்பாடு குறைந்ததால், இதயத்தை முழுமையாக செயல்பட வைக்க எக்மோ கருவி பொருத்தி சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் நேற்று செய்தி வெளிவந்த நிலையில். இன்று 17.04.2021 அதிகாலை 4.35 மணிக்கு நடிகர் விவேக் காலமானார்.



சின்னக் கலைவாணர் என அழைக்கப்படும் விவேக் அவர்கள், 1961 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் நாள் இந்தியாவின் தமிழ் நாடு மாநிலத்திலுள்ள மதுரையில் பிறந்தார். இவருடைய முழு பெயர் விவேகானந்தன் ஆகும்.

### “இன்னைக்கு செத்தா நாளைக்கு பால்”

1987 ஆம் ஆண்டு, இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தர் மூலம் ‘மனதில் உறுதிவேண்டும்’ என்ற திரைப் படத்தின் மூலம், தமிழ் சினிமா துறையில் கால்பதித்த விவேக் அவர்கள், அத்திரைப் படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத்தை ஏற்று நடித்தார். அதன் பிறகு, 1989 ஆம் ஆண்டு வெளிவந்த கே.பாலச்சந்தரின் ‘புது புது அர்த்தங்கள்’ திரைப்படத்தில், இவர் பேசிய ‘இன்னைக்கு செத்தா நாளைக்கு பால்’ என்ற வசனம் இவரைப் பிரபலப்படுத்தியது.;. இதுவரை 200க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். ரஜினி, விஜய், அஜித், மாதவன், தனுஷ், சூர்யா, விக்ரம், ஜெயம் ரவி என டாப் ஹீரோக்கள் பலருடன் இணைந்து நடித்துள்ளார் நடிகர் விவேக்.

அப்துல் கலாம் மீது மிகுந்த பற்றுக் கொண்ட நடிகர் விவேக் சுற்றுச்சூழல் ஆர்வலராகவும் திகழ்ந்தார். அப்துல் கலாம் அவர்கள் சொன்ன பாதையில் தமிழ்நாட்டில் ஒரு கோடி மரம் நடப்புறப்பட்ட அவர் 37 இலட்சம் மரங்களை நட்டு முடித்தார். இவரது இறுதி ஊர்வலம் நடந்தபோது ஆயிரக்கணக்கான மரக்கன்றுகளை அன்றையதினம் எடுத்துச்சென்று நட்டனர். நம் மனங்களிலும் மரங்களிலும் விவேக் வாழ்வார்.

---

# வாகனேரி குளம் இல்லையேல் எங்களது வாழ்க்கையே இல்லை!

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வாகனேரி, முள்ளிவட்டவான், பொத்தானை, குளத்துமடு கிராம மக்கள் குடிநீர் மற்றும் யானை பிரச்சனை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றனர். தற்போது கிராம மக்களுக்கு குடிப்பதற்கு மற்றும் குளிப்பதற்கு நீர் இன்மையால் வாகனேரி குளத்தினை நாடி வருகின்றனர். ஆனால் குளத்திலும் நீர் குறைவாகவே காணப்படுவதுடன், இந்த நீர் வேளான்மை செய்கைக்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

இதனால் மக்கள் குளத்தில் அருகில் பூவல் மூலம் தண்ணீரை வடித்து எடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளதாக மக்கள் தெரிவிப்பதுடன், குளத்தில் நீர் எடுக்கும் போது யானைகள் வருவதால் பயத்தில் தண்ணீர் எடுக்கமால் செல்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.யானையின் வருகையால் எங்களது உறவுகளின் சிலரை ஒவ்வொரு





வாழையூர்
**ந.குகதர்சன்**
(இலங்கை)

வருடமும் இழந்து வருகின்றோம்.

வாகனேரி குளத்தினை நம்பி 2500 குடும்பங்களுக்கு மேல் வாழ்கின்றார்கள். 8500 ஏக்கர் வேளான்மையினை தமிழ் மற்றும் முஸ்லிம் விவசாயிகளால் செய்யப்படுகின்றது. அவர்களின் நிலைமையும் கவலைக்கிடமாக காணப்படுகின்றது.

ஆயிரக்கணக்கான கால் நடைகள், உயிரினங்களும் இக்குளத்துக்கு பகலிலும், இரவிலும் நீர் பருக வருகின்றது. இக் குளத்தை நம்பி வாழும் விவசாயிகள் வரட்சியால் ஒரு போதும் பாதிக்கப்பட வாய்ப்பு இல்லை. ஆனால் இக்குளத்தை புனரமைப்பு செய்வதாக தெரிவித்தார்கள். இன்னும் அதுவும் இடம்பெறவில்லை.

வாகனேரி குளத்தினை நம்பியே நாங்கள் எங்களது ஜீவனோபாய தொழிலை மேற்கொண்டு வருகின்றோம். வாகனேரி குளம் இல்லையேல் எங்களது வாழ்க்கையே இல்லை என்ற நிலைமையில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.




மே தின வாழ்த்துக்கள்

# திருமணம் செய்துகொள்ளாமல் சேர்ந்து வாழல்



## Living Together

சில வருடங்களுக்கு வெளியாகி இளைஞர்களின் மனதை பெரிதும் கொள்ளை கொண்ட திரைப்படம் தான் மணிரத்தினத்தின் ‘ஓகே காதல் கண்மணி’. ‘திருமணம் செய்துகொள்ளாமல் சேர்ந்து வாழல்’ என்ற எங்களுடைய கலாசாரத்திற்க்கு அவ்வளவாய் நெருக்கமில்லாத ஓர் விடயம் பற்றி சொல்ல முயன்ற திரைப்படம் .கற்கால மனிதர்கள் ‘நாகரீகத்தின் அடையாளமில்லை ’ என்று துறந்த ‘லிவிங் டுகெதர்’ [சேர்ந்து வாழல்] கலாசாரம், இன்று நாகரீகவளர்ச்சியின் அடையாளமாக இளைய தலைமுறையினரால் பெரிதும் விரும்பப்படுவதுதான் வேதனைக்குறிய விடயம் .ஒருவருடைய வாழ்வில் மிக இனிமையானதும், மங்களகரமானதும், மறக்க முடியாததுமான விடயம்தான் திருமணம். மனிதராக பிறந்த ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்று அனைத்து மத சாஸ்திரங்களும் தெரிவிக்கின்றன. திருமணம் என்பது அர்த்தமுள்ள வாழ்க்கையின் ஆரம்பம் எனலாம். திருமணம் என்பது இருவர் மனமொத்து மகிழ்ச்சியாக வாழ்ந்து குழந்தைகள் பெற்று, மகிழ்ச்சியை இன்னும் அதிகரிக்கச் செய்வது. இந்த மகிழ்ச்சி என்பது பணமோ, புகழோ , அழகோ, படிப்போ, நல்ல குணமோ, வீரமோ, காமமோ ஏதோ ஒன்றை அடிப்படையாக கொண்டிருக்கலாம். ஆனால் திருமணம் என்றாலே இன்றைய இளைஞர்கள் மிகவும் யோசிக்கின்றனர். இன்று திருமணம் என்றாலே நீண்டகால மகிழ்ச்சி தரும் விடயம் என்பதைவிட , பயங்கரமாக செலவு வைத்து நீண்டகால கடனுக்காக உழைக்க வைக்கும் நிகழ்ச்சி என்றே பார்க்கப்படுகிறது .

திருமணம் செய்து கொண்டவர்களும், உனக்கு என்னப்பா நீ சுதந்திரப் பறவை, நான் குடும்பஸ்தன் என்று சலிப்புடன் வசனம் பேசுகிறார்கள். இளம் பருவத்தினர் இருபாலரிடமும் திருமணத்தைப் பற்றி எதிர்மாறான கருத்துக்களே இன்றைய காலகடத்தில் அதிகமாக இருக்கிறது. அதாவது திருமணத்தை கூடுதல் சுமையாகவும், கவலையாகவும் கருதும் எண்ணம் அவர்களிடம் உள்ளது என்பதுதான் மறுக்கவியலாத உண்மை. எந்தொவொரு விடயத்திலும் பொறுப்பேற்றுக் கொள்வதற்க்கான அச்சம் இன்று சிலரிடம். திருமணம் செய்து குடும்பம் நடத்த ஆகும் செலவுகள் மட்டுமல்ல, அப்படி ஒரு பொறுப்பை மேற்கொள்ள வேண்டும் எனும் எண்ணமே ஒரு பதற்றத்தை கிலியைத் தூண்டுகிறது. இது எப்படி வெளிப்படுகிறது என்றால் பலகாதல் ஜோடியினர் தம்மிடம் போதுமான



சேமிப்பு இல்லை என்று சாக்கு சொல்லியே திருமணத்தை தள்ளிப் போடுகிறார்கள். திருமணத்தை ஏதோ கோடிக்கணக்காய்முதலீடு செய்து ஒரு தொழிற்சாலை நிறுவுவது போல் பார்க்கிறார்கள். இதன் விளைவாக நமக்கு எதிலும் ஒட்டாமல் ஒட்டியிருக்கத் தோன்றுகிறது. சேர்ந்துவாழும் உறவு இந்த அணுகுமுறையின் ஒரு நோய்க்குறி என்றும் பார்க்கலாம். இப்படி திருமணத்துக்கு மறுப்புத் தெரிவிக்கும் பலர் ‘லிவிங் இன் டுகெதர்’ உறவுக்கு சம்மதிக்கிறார்களாம். குடும்பம் குறித்த சுமைகள் ஏது மற்று, குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமன்று, இருவரின் தேவைகளை மட்டும் நிறைவேற்றிக்கொண்டு தேவைப்படாவிட்டால் பிரிந்துவிடலாம் என்ற மனோபாவத்துக்கு மேலைத்தேயர்களைப் போன்றே எம்மவர்களும் வந்துவிட்டார்கள் என்றால் அதுதான் உண்மை.



பிரியா இராமநாதன்
(இலங்கை)

நிம்மதியில்லாத மணவாழ்க்கை மற்ற விடயங்களிலும் கவனத்தை கெடுத்துவிடும் என்ற மனோபாவத்துடனேயே மேலை நாடுகளில் லிவிங் டுகெதர் முறைமை கடைபிடிக்கப்படுகிறது. ஒரு ஆணும் பெண்ணுமாய் சந்தித்துப் பழகியதில் இருவருக்கும் ஒத்த அலைவரிசை இருப்பதாக கருதினால், சிறந்த ‘கம்பானியனாக’ இருப்பார் என்று ஒருவர் மீது ஒருவருக்கு நம்பிக்கை ஏற்ப்பட்டால் அங்கே அவர்கள் சேர்ந்து வாழ ஆரம்பிக்கிறார்கள். இன்று ஒத்த கருத்துடையவர்களாக,ஒரே ரசனை கொண்டவர்களாக இருக்கும் அவர்களது சிந்தனை பின்னாளில் மாற்றமடைந்தால் இருவரும் பரஸ்பரம் பிரிந்து செல்வதற்கு திருமணம் என்ற கமிட்மென்ட் தடையாக இருக்ககூடாது என்பதில் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். ஆனால்... நாம்?! அநேகமாக வீட்டில் சிறந்த வாழ்க்கைத் துணை ஒன்றினைத் தேடித்தரும் வரையில் தங்கள் உடற் பசியை தீர்த்துக் கொள்ளும் பொருட்டும் இணைந்து வாழ ஆரம்பித்து விடுகின்றனர் எங்களில் பலர். இதற்க்குப் பெயர் ‘லிவிங் டுகேதரா’ அல்லது ‘ஸ்லீப்பிங் டுகேதரா’ என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம்.

மேலை நாடுகளில், குழந்தைகளுக்கு 13 வயதிலிருந்து செக்ஸ் கல்வி கற்றுத் தரப்படுகிறது. அந்தச் சூழலில் இன்னொருவருடன் வாழத் துவங்குமுன் எதிர்காலத்தைப் பற்றி சரியான ஒப்பந்தத்துக்கு வந்த பின்பே அவர்கள் முடிவெடுக்கிறார்கள். அதே போல அங்கே your children and my children are playing with our children என்பது சகஜம். இந்த அளவுக்கு குழந்தை வளர்ப்பும் பக்குவமும் நம் நாட்டில் வந்துவிட்டதா என்றால் இல்லை என்றே சொல்லலாம்.

திருமணம் செய்துகொள்ளாமல், கணவன் மனைவியாகவும் இல்லாமல் மனதுக்குப் பிடித்த ஆணும் பெண்ணும் ஒரு வீட்டுக்குள் சேர்ந்துவாழும் முறை இன்று இந்தியா இலங்கை போன்ற நாடுகளிலும் மெல்ல மெல்ல ஊடுருவி விஸ்வரூபம் எடுக்க ஆரம்பித்திருக்கிறது எனலாம்.

10 ஆம் பக்கம் பார்க்க...





கவிதா லட்சுமி
(நோர்வே)

# ஏன் இந்தப்பறவை தொலைவிற்குப் பறந்து போகிறது

வானத்தின் திசை மருங்கில்
என்னதான் இருக்கக்கூடும்

முற்றத்து மரங்களும்
தொங்கும் கிளையில் மரக்கூடும்
தானியம், காற்று, நீர்,
பூக்குமிந்த அழகிய தோட்டம்
கண்டுமகிழ மனம் கொடுத்தும்
தொலைவிற்குப் போகிறதே

செவ்வான உச்சி
வெட்டவெளிப் பாதை
கிழக்குமலைத் தொடர்கள்
சாம்பலிட்ட மேகங்கள்
இறகு உதிர் எதிர்க்காற்று
கைக்கெட்டாச் சூரியன்

எதைத் தேடியோ
போகிற பறவை!

எங்கு போனால்
என்ன?ம்

கூடின்றிப் பறவைகொள்ளும்
கலை செய்வேன்
இலைகள் உரசிக்கொள்ளும்
தருணங்களைக்கூட
கவனிக்கமறந்த
இருத்தல் உனது!

உன் வாழ்வனுபவத்தில்
நீ காணாத கடவுள்கள்
வானையும் காற்றையும்
மண்ணையும்
உராய்ந்து,
ஆத்மாவைத் தணலாக்கி,
உயிர்களை எரிக்கிறது!

நீ காணாத கடவுளை
சூரியனுக்கு அப்பால்
கண்டெடுக்கும்
உன் தேடல்தான்
நிரந்தர அமைதியைத் தரும்
எனும் அனுமானம்
இயல்பான உணர்வுகளையும்
மரணிக்கச் செய்கிறது!

பெருங்கடவுள்களைக் காணும்
பயணங்கள்
சிறுதெய்வங்களைக்
கொல்கிறது.



# பிரியமான அதீதம்

ரூபன் சிவராஜா
(நோர்வே)

பெருங்காற்று
மென்சாரல்
கடும் குளிர்
அடர் பனி
கோடை வெயில்
கொட்டும் மழை
வழமையாகச் சென்றுவரும்
பாதைதான்
இது

சடைத்த கிளைகளும்
பசுமை படிந்த இலைகளும்
நிறங்களணிந்த பூக்களும்
இங்குதான் நின்றன

பழுத்த மரங்கள்
வெற்று மரங்கள்
பனிபடிந்த மரங்கள்
என
காலடித் தடங்களெல்லாம்
சுழற்சிமுறையில்
மாற்றங்கள்

தோற்றப் பொலிவுகள்,
தோற்றத் தேய்வுகள்!

பிரியமான
கணங்களின்
வெளியிலெல்லாம்

ஒளியின் அடர்த்தியிலும்
இருளின் நிறத்தினுள்ளும்
மாற்றங்களின் அதீதம்

வழமைபோலத்தான்
இன்றும்
நடந்துகொண்டிருக்கிறேன்
எதுவுமே
நிகழாதது போல

**ஜேர்மன் வாழ் எழுத்தாளர்களுக்கு வேண்டுகோள்**

விரைவில் வெளிவரவுள்ள

**‘படைப்பாளர்கள்’**

என்னும் நூலில் உங்கள் நூல் விபரம் மற்றும் ஆக்கதாரர்களின் விபரங்களையும் பதிவு செய்ய வேண்டும் என்ற முனைப்பில் ஈடுபட்டுள்ளோம்.

உங்கள் நூலாக்க விபரங்களைப் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு (ebook) ஆகவும் நூல் உருவில் வெளியிடப்படும்.
மேலதிக விபரங்களுக்கு
(germantamilwriter@outlook.com)

சு.பாக்கியநாதன்
0152 10378556
பி.எஸ்.இராஜகருணா
0176 31740702
க.சுப்பிரமணியம்
0176 74528044



Dr.IN



# பிரசவத்துக்குப் பிறகு அதிகரிக்கும் உடல்நிறை!

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

பொதுவாக கர்ப்பகாலத்தில்தான் எடை அதிகரிக்கும். குழந்தை பிறந்த பின்னர் சற்று எடை குறையவே செய்யும். ஆனாலும் குழந்தைப் பராமரிப்பிலும் தாய்ப்பால் ஊட்டுவதிலும் தமது பெரும்பாலான நேரத்தைக் கழிக்கும் தாய்மாரின் எடையானது அதிகரிப்பது அவதானிக்கப்படுகிறது.

பிரசவத்துக்குப் பின்னான இந்த எடை அதிகரிப்பானது பொதுவாகக் காணப்பட்டாலும், இளவயதுடைய தாய்மாரைவிட சற்று வயது கூடிய தாய்மாரிடம் அதிகமாகக் காணப்படுகிறது.


இந்த எடை அதிகரிப்பானது கர்ப்பம் தரித்ததாலும் குழந்தை பிறந்ததாலும் உடலில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படுவது அல்ல, மாறாக மகப்பேற்றினால் அந்த பெண்ணின் வாழ்க்கை முறைகளில் ஏற்படும் மாற்றங்களினாலேயே பெரும்பாலும் ஏற்படுகிறது என சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கர்ப்பம் தரித்தல், மகப்பேறு, பாலூட்டல், குழந்தைப் பராமரிப்பு ஆகியவற்றில் முழுமையாக ஈடுபட்டிருக்கும் ஒருவர் அந்த காலகட்டத்தில் தனது வாழ்வின் 2–3 வருடங்களை இழந்திருப்பதை மறந்துவிடுகிறார். இந்த வயது அதிகரித்தலும் பெண்களின் எடை அதிகரிப்புக்கு மற்றொரு மறைமுக காரணமாக அமைகிறது.

பொதுவாகத் தாய்மார் தங்கள் குழந்தைகளின் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்களே அன்றி தங்களைப் பற்றிச் சிந்திப்பது குறைவு. இதனால் சமையல், தனது உணவு மற்றும் உடற் பயிற்சி போன்றவற்றில் அக்கறை செலுத்துவதில்லை. இவையே அடிப்படைக் காரணங்களாகக் கருதப்படுகிறது.

இவற்றில், தவறான உணவுப் பழக்கங்களே முக்கிய காரணம் எனச் சொல்லலாம். உதாரணத்திற்கு சொல்வதானால் குழந்தையின் கோப்பையில் மிஞ்சும் உணவை வீணாக எறியாமல் தனது வாயில் போட்டுவிடும் தாய்மார் அதிகம். இதனால் மேலதிக கலோரிகள் உடலில் சேர்ந்து கொழுப்பாக மாறி எடை அதிகரிக்கும். வேலைக் களைப்பினாலும் நேர நெருக்கடிகளாலும் நேரத்திற்கு உணவை உட்கொள்வது தப்பிவிடுகிறது. பசியையும் களைப்பையும் போக்க அடிக்கடி தேநீர், சத்துமாவைகள் அல்லது இனிப்பான பானங்களை குடிக்கிறார்கள். இவை கலோரிக் குண்டுகள். ஏடையை அதிகரிக்கும்.

அத்துடன் தனக்கென போசாக்கான உணவைத் தயாரிப்பதற்கு நேரமின்றி கடைகளில் வாங்கும் தீனிகளை உண்பதும் காரணமாகலாம். பொதுவாக அத்தகைய கடைத் தீனிகள் ஆரோக்கியமற்றதாக, இனிப்பும் கொழும்பும் கூடியதாக இருப்பதால் எடை அதிகரிப்பு நேர்கிறது. குழந்தை பராமரிப்பிற்காக நீண்ட நேரங்களுக்கு குழந்தையுடன் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்க நேர்வதால் உடல் உழைப்போ உடற் பயிற்சியோ அற்றுப்போகிறது. இதனால் கலோரிகள் எரியாமல் உடலில் தேங்கி நிற்பதும் எடையை அதிகரிக்கச் செய்கின்றன.



மகப்பேற்றின் பின் குழந்தையைப் பராமரிப்பதால் தாய்மாரின் தூக்கம் குறைகிறது. உடலியல் ரீதியாக தினமும் தனது உடலுக்கு தேவையான தூக்கத்தைப் பெறுவது முடியாமற் போய்விடுகிறது. தூக்கம் குறைவதும் எடை அதிகரிப்பிற்கு காரணமாகிறது என தரவுகள் கூறுகின்றன. இரவில் ஐந்து மணிநேரம் அல்லது அதற்கு குறைவாகவே தூங்கும் மகப்பேற்றுக்குப் பின்னான பெண்களின் எடை அதிகரிப்பதற்கான சாத்தியமானது ஏனைய பெண்களை விட மூன்று மடங்கு அதிகம் என ஒரு ஆய்வு கூறுவது இதற்குச் சான்றாகிறது.

எடை அதிகரிப்பால் அவர்களின் உடல் வனப்பு குறைகிறது என்பதற்கு அப்பால் அவர்களது ஆரோக்கியமும் குறைகிறது என்பதால் நிச்சயம் அக்கறை எடுக்க வேண்டிய விடயமாகிறது. ஏடை அதிகரிப்பானது ஏதிர்காலத்தில் நீரிழிவு, கொலஸ்டரோல், பிரஸர், முழங்கால் உட்பட மூட்டு தேய்வுகள் போன்ற பல பிரச்சனைகளுக்கு அடிப்படையாக இருக்கிறது.

கர்ப்ப காலத்திலும் மகப்பேற்றிற்கு பின்னான காலங்களிலும் தைரொயிட் சுரப்பியின் செயற்பாட்டில் சிலருக்கு குறைபாடு ஏற்படுவதுண்டு. அவ்வாறு



தைரொயிட் ஹோர்மோன் அளவு குறைந்தாலும் எடை அதிகரிக்கலாம். மருத்துவ ஆலோசனையுடன் வுளூர் என்ற கருதிப் பரிசோதனை செய்வதன் மூலம் அது காரணமா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

எனவே மகப் பேற்றின் பின்னர் பெண்கள் தனது குழந்தையை பராமரிப்பதற்கு நேரம் ஒதுக்குவது போலவே தனது ஆரோக்கியத்திலும் அக்கறை செலுத்துவது அவசியமாகிறது. இதற்கு கணவரும் குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களும் அவருக்கு ஒத்தாசை செய்து அவரது வேலைப் பளுவைக் குறைப்பது அவசியமாகிறது.



## திருமணம் செய்துகொள்ளாமல்

# சேர்ந்து வாழல்



07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

கால மாற்றத்துக்கு ஏற்ப கலாசார மாற்றமும் ஏற்ப்படுவதால் லிவ்விங் டுகேதரில் சிக்கி வெளிவர இயலாது தவிப்பதென்னவோ அதிகம் பெண்களாய்த்தான் இருக்கமுடியும். நம்பியவன் ஏமாற்றிவிட்டான் என்ற நிலையில் அதைத் தாங்கிக்கொள்ளும் பக்குவம் இல்லாது சம்பாதிக்கும் பெண்களே விரக்தியடைந்து தற்கொலையும் செய்துகொள்கிறார்கள். காதல், பாலுறவு, திருமணம் போன்றவற்றில் ஏமாறும்போது சமூக ரீதியாக ஆண்களைவிட அதிகம் பாதிப்படைவது பெண்கள்தான்! மாவட்டத்துக்கு ஒன்று,மாகாணத்துக்கு ஒன்று என்ற ரீதியில் பெண்களோடு பழகி மைனராக சுற்றிய ஒரு ஆண், எந்தவித பிரச்சினையும் இல்லாமல் [கூச்சமும் இல்லாமல்] ஊரார் மெச்ச முறைப்படி ஒரு திருமணத்தை செய்துகொள்ள முடியும்! ஆனால், பெண்களின் நிலை அப்படியல்ல... ஒரு பெண் ஒரு காதலில் தோல்வியடைந்தாலே, அவளை ஏற்றுகொள்ள இன்னொரு குடும்பம் நிறைய யோசிக்கும். முதல் காதல் முறிந்து இன்னொரு காதலை.. மற்றொரு காதலைத் தேடினாலேயே சில சமயங்களில் அவளுக்கு ஆட்டக்காரி / நடத்தை சரியில்லாதவள் என்று பட்டம் கட்டிவிடும்! எனவேதான் பெண்களைப் பாதுகாக்கும்வகையில் எங்களுடைய மேன்மையான திருமண ஒப்பந்தங்களும் சட்டங்களும் தேவைப்படுகின்றன. ஒருத்திக்கு ஒருவன்தான் இருக்கவேண்டும், ஆனால் அந்த ஒருவனுக்கு எத்தனை ஒருத்தி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப்போகலாம் என்ற சமூக மனோநிலையில், சமூகம் விதித்திருக்கும் கட்டுப்பாடுகளை மீறி சுதந்திரமாக காதல் என்ற பெயரில் அதீத நம்பிக்கயுடம் ஒரு ஆணுடன் பழகுவதை ஏற்றுகொள்வதில் ஏன் மூத்த தலைமுறை அதிகம் தடுமாறுகிறது / புத்திசொல்ல எத்தனிக்கிறது என்பதை புரிந்துகொள்ளவேண்டியுள்ளது. [நட்புக்கும் காதலுக்கும் இடையேயான வித்தியாசம் தெரியாமல் ‘காய்’ நகர்த்தும் இளையவர்கள் அதிகரித்திருக்கும் நிலையில் ] பரஸ்பர நம்பிக்கை என்ற ஒன்றின் அடிப்படையிலேயே எல்லா உறவுகளும் கட்டியெழுப்பப்படுகிறது இல்லையா ? இந்த நம்பிக்கையில் குலைவு ஏற்படுகையில் பட்டென்று கைவிடுதல் என்ற முறையினை அத்தனை சுலபத்தில் பெண்களால் எடுக்க இயலுமாய் இருக்குமா ? இந்த உறவில் இருந்து ஒரு ஆண் பிரிந்துசெல்லும்பட்சத்தில் , குழந்தையை முன்னிறுத்தி குறிப்பிட்ட அந்த ஆண்மீது உரிமை கோரவோ, சொத்துரிமை கோரவோ சட்டரீதியில் இதுவரை [இலங்கையில் ] இடமில்லை.

வயதுக்கு வந்து ஒரு ஆணும் பெண்ணும் திருமணமாகாமல் சேர்ந்து வாழ்வது ,அவர்களின் உரிமை . அதை சட்டப்படி குற்றம் என்று ஏற்றுக்கொள்ள இயலாது.புராணத்தில் கிருஷ்ணனுக்கும் ராதாவுக்கும் இருந்த உறவுமுறை ஏறக்குறைய இதேபோன்றதுதான் , அதற்க்காக அவர்களை நாம் குற்றம் புரிந்தவர்களாக கூறிவிட முடியுமா ?‘இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதியொருவரது கூற்று இது.. கலாசாரப் பின்னணியுடன்,நிறுவன மயப்படுத்தப்பட்ட குடும்பம் என்ற அமைப்புக்குள் வாழும் கீழைத்தேய நாடுகளில் , யதார்த்தத்தில் இது எந்த அளவு சாத்தியப்படும் ? குறைகளுக்காக மனிதர்களை விட்டுப் பிரிவதென்றால், யாரும் யாருடனும் நட்புடன்கூட இருக்கவியலாது,.

எங்கள் நாட்டினது ஆணிவேரே, எங்களது பாரம்பரியமும், கலாசாரமும், குறிப்பாக குடும்பம் என்கிற அழகான அர்த்தமுடைய கட்டமைப்பும்தான்.நமுடைய மாண்பை அடுத்த தலைமுறையினருக்கு பொறுப்புடன் கடத்திகொண்டிருக்கும் அமைப்புதான் குடும்பம்! எங்களுடைய வாழ்வியலைக் கற்றுக்கொடுக்கும் பள்ளிதான் வலுவான குடும்ப அமைப்புகள். இந்த அமைப்பு இருவர் ஒப்புக்கொண்டு,



உறவுகளின் துணையோடு திருமணம் செய்துகொள்ளும்போதுதான் அது தழைக்கும். ஆனால், எங்கள் இருவருக்கும் சில காரணங்களால் சேர்ந்து வாழப் பிடித்திருக்கிறது, அதனால் சேர்ந்து வாழ்கிறோம்’ என்கிற இந்த லிவிங் இன் டுகேதரில் ஒருவருக்கொருவர் நேர்மையாக, நம்பிக்கையாக இருப்பதற்க்கான வாய்ப்புக்கள் எந்த அளவு சாத்தியப்படகூடும் ? ‘என்றைக்காவது ஒருநாள் பிரிந்துவிடப் போகிறவர்கள்தானே நாம்’ என்கிற உறவில் , ஆழமான அன்பு, காதல் எப்படி வரும்? பிணைப்பும் நேர்மையும் இல்லாத உறவில் ஆண்கள் வரம்பின்றி எந்த எல்லைக்கும் போகக் கூடுமே. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கலாசாரம் நம்முடையதாக இருக்கும்போதே , இரண்டு மூன்று மனைவிகளை, சின்ன வீடுகளை, கள்ள உறவுகளை வைத்துக்கொள்ளும்போது, வரையறை ஏதுமற்ற இந்த லிவிங் டுகெதர் கலாசாரம் நமக்குள் சரிப்படுமா? பாட்டி, தாத்தா, சித்தப்பா, பெரியப்பா, மாமா , மாமி என்று உறவுகள் சூழ வாழ்வதுதான் எங்கள் கலாசாரத்தின் பெருமையல்லவா? ஆனால், ‘சேர்ந்து வாழும்’ கலாசாரத்தில் அவள் அவனுக்கு மனைவியுமில்லை, அவன் அவளுக்கு கணவனும் இல்லை என்ற நிலையில், மற்ற உறவுகள் அங்கே எப்படி சாத்தியப்படும் ?

இந்த முறைமையினால் ஆண்களுக்கு வேண்டுமானால் கொண்டாட்டமாக இருக்ககூடும் . ஆறு மாதத்திற்கு ஒருத்தியுடன் சந்தோசமாக குடும்பம் நடத்தலாம். ஆனால்,பெண்களின் நிலை ? இரண்டாவதாக ஒரு ஆணுடன் வேண்டுமானால் சேர்ந்து வாழ முயற்சிப்பார்கள். அதுவும் தோல்வியடைந்தால், தனியாக வாழத் தொடங்கிவிடுவார்கள். போதாக்குறைக்கு குழந்தைகள் எழுதப்படா விதியாக தாயிடமே விடப்படும். அவர்களும் குழந்தைகளை வளர்த்துக்கொண்டு தம்முடைய மிச்ச காலத்தையும் ஒட்டிவிடுவார்கள் .

எனவேதான் சட்ட ரீதியிலான முறையிலும் சமயம் மற்றும் குடும்ப சமூக அங்கீகாரத்துடன் ஆண் பெண் ஜோடி இணைந்து வாழ்வதற்கு திருமணம் புரிவது கீழைத்தேய நாடுகளில் அவசியமாக இருக்கிறது. மேலைத் தேயவர்களிடம் இருந்து நேரம்தவறாமை, கடமை தவறாமை, கடமையைச் செய்ய லஞ்சம் வாங்காமை என்று எத்தனையோ நல்ல விடயங்களை பெற்றுக்கொள்ள முன்வராத நாம், அவர்களிடமிருந்து இந்த ‘லிவிங் இன் டுகெதர்’ முறைமையினை மட்டும் பின்பற்ற நினைப்பது அப்பட்டமான சுயநலத்தைத்தான் குறிக்கிறது. கொள்ளிக்கட்டையை எடுத்து தலையை சொறிந்துகொள்ள எத்தனிக்கின்றோம் என்றால் அது மிகையில்லை!







ஆனந்தராணி பாலேந்திரா (UK)

# ‘கண்ணாடி வார்ப்புகள்’ - 1978

**08-01-1978** அன்று பாலேந்திரா நெறிப்படுத்தி நான் நடித்த ‘நட்சத்திரவாசி’ நாடகம் மேடையேறிய கையுடனேயே பாலேந்திரா மற்றுமொரு நாடகப் பிரதியுடன் நான் வசித்த கொக்குவில் வீட்டில் என்னைச் சந்தித்தார். அந்த நாடகம்தான் ‘கண்ணாடி வார்ப்புகள்’. நான் ஏற்கனவே பாலேந்திரா நெறிப்படுத்திய ‘மழை’, ‘நட்சத்திரவாசி’ நாடகங்களில் நடித்திருந்ததால் பாலேந்திராவின் நாடகத் தேர்வு, நாடகங்களின் தரம், அதனை பாலேந்திரா மேடைக்குக் கொண்டுவந்த விதம் எல்லாம் எனக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. எனவே நிச்சயமாக ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகமும் ஒரு சிறந்த நாடகமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றியது. பல சவால்கள், எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் தொடர்ந்து நடிக்க வேண்டும் என்ற எனது ஆர்வத்திற்கு எனது பெற்றோர் எப்போதும் ஆதரவாகவே இருந்தார்கள். எனவே எந்த நாடகங்களில் நடிப்பது என்ற முடிவையும் இப்போது நானே சுதந்திரமாக எடுக்க ஆரம்பித்தேன்.

நாடகத்தின் கதையை பாலேந்திரா சுருக்கமாக எனக்குக் கூறினார். அப்போதுதான் இந்த நாடகத்தில் அம்மா – மகள் என இரண்டு பெண் பாத்திரங்கள் இருப்பது தெரிந்தது. என்னை மகள் பாத்திரத்தில் நடிக்கக் கேட்டார். பாலேந்திரா நெறியாள்கை செய்த முன்னைய நாடகங்களில் ஒரேயொரு பெண் பாத்திரம். அதனை நான் ஏற்று நடித்தேன். பெண் பாத்திரத்தில் பெரும்பாலும் ஆண்களே நடித்துக்கொண்டிருந்த காலம் அது. ஒரு பெண் நடிகையைக் கண்டு பிடிப்பதே கஷ்டமான காலத்தில் இப்போது இரண்டு பெண்கள். அதுவும் யாழ்ப்பாணத்தில். யார் அந்த மற்றப் பெண் என்று கேட்டேன். இன்னும் கண்டு பிடிக்கவில்லை. கூடிய விரைவில் கண்டு பிடித்துவிடுவேன் என்று சொன்னார்.

பாலேந்திராவுடன் 45 வருடகாலம் நாடகத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு புதிய நாடகத் தயாரிப்பின்போதும் பாத்திரங்களுக்குப் பொருத்தமான நடிகர்களை அவர் கண்டுபிடிக்கும் விதம் அலாதியானது. அவர்களின் சிறு அசைவுகளில்கூட இவர்கள் இன்ன பாத்திரத்திற்குப் பொருத்தமானவர்கள் என்று கண்டுபிடித்து விடுவார். நடிக்கக் கேட்டதும், ஒருவர்கூட மறுப்புச் சொல்லாத விதமாக அவர்களுடன் கதைப்பது பாலேந்திராவின் தனித்துவம் என்றே சொல்லுவேன்.

**‘கண்ணாடி வார்ப்புகள்’;** கதை எமக்கு நெருங்கிய கதையாக இருந்தது. ஏற்கனவே பாலேந்திரா ‘மழை’, ‘நட்சத்திரவாசி’ நாடகங்களை எவ்வாறு தேர்ந்தெடுத்தார் என்பது பற்றி எனக்கு சொல்லியிருக்கிறார். சிறுவயதிலேயே எனக்கிருந்த வாசிப்புப் பழக்கத்தினால் தனிய நடிப்பது மட்டுமல்ல, நாடகாசிரியர், நாடகப் பின்னணி போன்றவற்றைத் தெரிந்து கொள்ளும் ஆர்வமும் எனக்கு இருந்தது.



பாலேந்திராவிடம் எங்கே இந்த நாடகத்தைக் கண்டுபிடித்தீர்கள் என்று கேட்டேன். இந்த நாடகத்தின் ஆங்கிலப் பிரதியை யாழ். பொதுசன நூலகத்தில் இருந்து எடுத்து வாசித்தபோது தனக்கு மிகவும் பிடித்துக் கொண்டதாகச் சொன்னார். தன்னுடைய வாழ்வோடு நெருக்கமாக இருப்பதாகவும், அதனால் இந்த நாடகத்தை எப்படியாவது தமிழில் தயாரிக்க வேண்டுமென்று விரும்பியாழ். பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் தனது தங்கை மல்லிகாவுடன் சேர்ந்து தமிழாக்கம் செய்துள்ளதாகச் சொன்னார். ஒரு மொழிபெயர்ப்பு என்று கூறமுடியாத அளவிற்கு நாடகப் பிரதி மிக அருமையாக இருந்தது. கவித்துவம் மிக்கதாகவும் இருந்தது. மல்லிகா தற்போது பேராதனை பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகம் உலகப் புகழ் பெற்ற அமெரிக்க நாடகாசிரியர் ரென்னஸி வில்லியம்ஸ் 1940களில் எழுதிய ‘The Glass Menagerie’ என்ற நாடகத்தின் மொழிபெயர்ப்பாகும். இந்த நாடகம் அவரது வாழ்க்கை அனுபவம் என்று சொல்லப்படுகிறது.

இந்த நாடகத்தில் நான்கு பாத்திரங்கள். அம்மா –அமென்டா, மகள் –லோரா, மகன் –ரொம், விருந்தாளி– ஜிம். கணவர் தூரப் பிரயாணத்தில் காதல் கொண்டு வேலையையும் விட்டு, குடும்பத்தையும் கைவிட்டுப் போன பின்னர், தனது இரு பிள்ளைகளையும் வளர்ப்பதற்கு பாடுபடும் அம்மா. உடல் ஊனம் காரணமாக தாழ்வுமனப்பான்மை கொண்டு வெளியுலகைக் கண்டு அஞ்சும் மகள். எழுத்தாளனாக இருந்தும் குடும்பத்திற்காக தனக்கு விருப்பமில்லாமல் சப்பாத்துக் கொம்பனியில் வேலை செய்யும் மகன். இவர்கள் வீட்டிற்கு வரும், மகனுடன் ஒன்றாக வேலை பார்க்கும் விருந்தாளி. இந்த நால்வருக்கிடையில் ஏற்படும் உணர்ச்சி மோதல் நாடகமாக விரிகிறது.

மகள் லோராவை கல்லூரிக்குப் படிக்க அனுப்பி அந்த முயற்சி தோல்வி கண்டவுடன் லோராவிற்குத் திருமணம் செய்யும் தீர்மானத்துடன் மகன் ரொம்மிடம் அவருக்குத் தெரிந்த யாரையாவது பார்க்கும்படி அடிக்கடி நச்சரிக்கிறார் அம்மா. ஏற்கனவே தாயுடன் பல விடயங்களில் முரண்பட்டுக்கொண்ட ரொம் தாயின் வற்புறுத்தல் தாங்காமல் தன்னுடன் சப்பாத்துக் கொம்பனியில் வேலை பார்க்கும் ஜிம் என்ற இளைஞனை வீட்டுக்கு விருந்துக்கு அழைக்கிறார்.

விருந்துக்கான ஏற்பாடுகளை வெகு அமர்க்களமாகச் செய்து வைத்திருக்கிறார் அம்மா. தான் பெண் பார்க்கத்தான் போகிறேன் என்பது விருந்தாளி ஜிம்மிற்குத் தெரியாது. ரொம் அவருக்கு இது பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஜிம் எல்லோருடனும் கலகலப்பாகப் பழகும் சுபாவம் உள்ளவர். லோராவுடன் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர். படிக்கும் காலத்தில் மிகப் பிரபலமாக இருந்த ஜிம் மீது லோராவிற்கு ஒரு ஈர்ப்பு இருந்தது. சாப்பாட்டிற்குப் பின்னர் ஜிம்மும் லோராவும் தனியே இருந்து கதைத்துக் கொண்டிருக்கும் போது லோராவை அடையாளம் கண்டு கொண்ட ஜிம் அவருடைய தாழ்வுச்சிக்கலைப் போக்கும் வகையில் அவருடன் நெருங்கி உரையாடுகிறார். ■

மிகுதி அடுத்த இதழில்...





ஜீட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)



# கர்ணன்: கேள்வியும் பதிலும்

கர்ணன் திரைப்படம் பார்த்து விட்டீர்களா? இல்லை இனித் தான் பார்க்க போகுறீர்களா? எதுவாக இருந்தாலும், கர்ணன் திரைப்படம் பற்றிய ஒரு பரீட்சைக்கு நீங்கள் தயாரா?

**01.** கர்ணன் படத்தில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது?

- அ. **மாரி செல்வராஜின் இயக்கம்**
- ஆ. **சந்தோஷ் நாராயணனின் இசை**
- இ. **தேனி ஈஸ்வரின் ஒளிப்பதிவு**
- ஈ. **மேற்கூறிய யாவும்**

**02.** கர்ணன் படத்தில் உங்களுக்கு மிகவும் பிடித்த காட்சி எது?

- அ. **பொலிஸ் நிலைய தாக்குதல்**
- ஆ. **தட்டான் தட்டான் பாடல் காட்சி**
- இ. **க்ளைமாக்ஸ்**
- ஈ. **தனுஷ் - தாத்தா காட்சிகள்**

**03.** கர்ணன் படத்தில் மிகவும் திறமையாக நடித்திருப்பது யார்?

- அ. **கர்ணனாக தனுஷ்**
- ஆ. **ஏமராஜாவாக லால்**
- இ. **குட்டி பாத்திரங்களில் கிராம மக்கள்**
- ஈ. **மேற்கூறிய யாவும்**

**04.** கர்ணன் படத்தில் வரும் குறியீடுகளில் உங்களுக்கு எந்த குறியீடு புரிந்தது?

- அ. **முகமூடி அணிந்த சிறுமி**
- ஆ. **முன்னங்கால்கள் கட்டப்பட்ட கழுதை**
- இ. **கோழிக் குஞ்சை கொத்தும் பருந்து**
- ஈ. **ஒன்றும் விளங்கேல்லயடாப்பா**

**05.** கர்ணன் படப் பாடல்களில் உங்களுக்கு மிகவும் பிடித்தது?

- அ. **வுட்ராதீங்க யப்போ**
- ஆ. **தட்டான் தட்டான்**
- இ. **கண்டா வரச் சொல்லுங்க**
- ஈ. **மஞ்சனத்தி புராணம்**

**06.** கர்ணன் படம் முழுமையாக யாருக்கு புரிய அதிக வாய்ப்புள்ளது?

- அ. **மட்ஸ் மண்டைக்காரன்கள்**
- ஆ. **மொக்கு கொமர்ஸ்காரன்கள்**
- இ. **பயோ பிஸ்தாக்கள்**
- ஈ. **மேற்கூறிய எல்லோரும்**

**07.** கர்ணன் படம் பற்றிய விமர்சனம் எழுத திறமான ஆள் யார்?

- அ. **மைந்தன் சிவா**
- ஆ. **கோபி மாஸ்டர்**
- இ. **திருச்செந்தூரன்**
- ஈ. **எழுத்தாளர் ஜேகே**

**08.** கர்ணன் பட பாத்திர பெயர்களில் உங்களுக்கு மிகவும் பிடித்தது?

- அ. **மஞ்சனத்தி**
- ஆ. **வடமலையன்**
- இ. **ஏமராஜா**
- ஈ. **கண்ணபிரான்**

**09.** கர்ணன் படத்தை ஒரே வரியில் வர்ணிப்பது எப்படி?

- அ. **தமிழ் திரையுலகின் புதிய பரிமாணம்**
- ஆ. **ஆஹா.. ஓஹோ...அருமை..அற்புதம்**
- இ. **படத்தை பார்க்காமல் வுட்ராதீங்க யப்போ**
- ஈ. **மேற்கூறிய யாவும்**

கேள்விகளிற்கான விடையை அறிய, பாருங்கள் பாருங்கள் பார்த்து மகிழுங்கள்.. கர்ணன். வெற்றிநடை போடுகிறான்.. கர்ணன்..







# கொரோனா விதிகளை மீறினார் நோர்வே பிரதமருக்கு அபராதம்



நோர்வே நாட்டு பிரதமருக்கு கொரோனா கட்டுப்பாடுகளை மீறிய தற்கான 1 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.


நோர்வே நாட்டு பிரதமர் எர்னா சொல்பேர்க் [Erna Solberg] கடந்த பெப்ரவரி மாதம் தனது 60 ஆவது பிறந்த நாளை கொண்டாடினார்.

கொரோனா பாதிப்பு காரணமாக 10 இற்கும் மேற்பட்டோர் விழாக்களில் பங்கேற்க அனுமதி இல்லை என அறிவிக்கப்பட்டிருந்த போதும் கட்டுப்பாடுகளை மீறி தனது குடும்ப உறுப்பினர்கள் 13 இற்கும் மேற்பட்டோருடன் பிறந்த நாளைக் கொண்டாடியதாக அவர் மீது புகார் எழுந்தது.

இதனையடுத்து கொரோனாக் கட்டுப்பாடுகளை மீறியதாக பிரதமர் எர்னா சொல்பேர்க் விற்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.இந்த அபராதம் ஒட்டுமொத்த உலகத்திலும் விதிமுறைகளை மீறும் மக்கள் சார்பாக அவர் கொடுத்ததாகவும் கொள்ளலாம் அல்லவா?

K.K.L.
Textilien Schmuck Haushaltsware
Rheinische str.56 44137 Dormund Tel: 0231 96 98 6610


விநாயகா ஜோதிட நிலையம்
பண்டித் துர்க்கா பிரசாத்
உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்....!
Tel: +49 1512 95 88 372 +49 1521 33 58 655
PRABA SUPERMARKT
Hindenburgstraße 212, 41061 Mönchengladbach



யேர்மனி வூப்பெற்றால் ஸ்ரீ நவதுர்க்கா அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் 2021
கொடி: 07.05.2021 தேர்:15.05.2021
யேர்மனி வூப்பெற்றால் ஸ்ரீ நவதுர்க்கா அம்பாள் ஆலய வருடாந்த மகாவுற்சவம் அம்பாள் அருளால் சிறப்பாக நடைபெறும். தற்போது Covid19 காரணமாக மே மாதம் 7ம் திகதி முதல் 15 திகதி வரை யேர்மனி அரசு அந்த நேரத்தில் விதிக்கும் ஒழுங்கு விதிமுறைகளைப் பின்பற்றி நடப்போம் என்பதனையும் கருத்தில் கொள்வோம்.
Hünefeld Str 63b 42282-Wuppertal
Tel: 479 60 17

# மாதவிடாய் என்றும் பாராது மன்றுள் இழுத்து வரப்பட்ட மாதரசி மன்றாடுகிறாள்




தன்னைத் தோற்ற பின் என்னைத் தோற்றாரா ? இல்லை என்னை தோற்ற பின் தன்னைத் தோற்றாரா ? தன்னைத் தோற்ற பின் என்னை நல்கும் உரிமை இல்லை. கௌரவ வேந்தர் சபைதன் னில்–அறங்கண் டவர் யாவரும் இல்லையோ?– சாத்திரஞ் செத்துக் கிடக்குமோ? அறமாட்சியைக் கொன்று களிப்ப ரோ?யாவற்றையும் தெளிவுற கேட்டு வா என தெளிந்த சிந்தையுடன் தன்னை சபைக்கு அழைக்க வந்த பாகனிடம் கேள்விகள் தொடுக்கி றாள் பாஞ்சாலி.

வரமறுத்த மென்கொடியை வஞ்ச கத்தால் வாட்டிட விரைகிறான் அண் ணன் சொல் வேதம் என வேகமாய் செயல்படும் தம்பி. தீமையில் அண் ணனை வென்றவனும் , கள்ளும் ஈரக் கறியும் விரும்புவனுமான புலி போல் உடல் கொண்ட புத்தியில்லா புலையன் துச்சாதனன் நீண்ட துய ரில் நிலை குலைந்திருந்த நேரிழை ழியை நெருங்குகிறான்.

நீ வந்த செய்தி விரைவிலே சொல் லி நீங்குக தம்பி என அச்சத்தை வென்றவளாய் எதிர் கொள்கிறாள்.

பாகனிடம் நீ கேட்ட கேள்விக ளுக்கு விடை தர நான் இங்கு வர வில்லை ‘ஆடி விலைப்பட்ட தாதி நீ–உன்னை ஆள்பவன் அண்ணன் சுயோதனன்’ என்று இன்சொல்லா ளிடம் ஈனச் சொல் பேசுகிறான்.

அண்ணனின் மனைவியை சூதில் வசமாக்கல் மன்னர் குலத்து மரபில்லை என்கிறாள் , பொற்சபை யில் என்னை அழைத்தல் இயல் பில்லை என்கிறாள் அத்தனைக்கும் மேலாக மாதவிடாய் என்பதால் ஓராடையில் இருக்கின்றேன் என உடலும் உள்ளமும் வலிக்க உரைக் கிறாள்.

ம்ம்ம் அணங்கின் அலறல்கள் ஆணாதிக்க அரக்கர்களுக்கு ஆனந்த களி தரும் அல்ப சுகங்கள் தானே.

கக்கக் கவென்று கனைத்தே பாஞ் சாலி கூந்தலினைக் கையினாற் பற்றி சபைக்கு இழுத்துச் செல்கிறான். வழி நெடுக நின்றோர் யாவரும் ஐயோ என அலறிப் பாதி உயிரோடு செல் லும் பாஞ்சாலியின் பரிதாபத்தை இரு கண்கொண்டு பார்த்து நிற்கின்றனன் ஆனால் ....பெட்டைப் புலம்பல் அது , எக்காலத்திலும் பயனில்லை.

கெட்ட சபைதனில் விட்டெறியப் பட்டாள். மழையென விம்மியழுதாள். அம்மி மிதித்து மணம் செய்த பாண்ட வரை மின்னல் போல் கண்களால் சுட்டெரித்தாள்

‘‘மங்கியதோர் புன்மதியாய்!
மன்னர் சபைதனிலே
என்னைப் பிடித்திழுத்தே ஏச்சுக்கள்
சொல்லுகிறாய்,
நின்னை யெவரும்நிறுத்
தடாஎன்பதிலர்,
பேயரசு செய்தால்,பிணந்தின்னும்
சாத்திரங்கள்!
மாய முணராத மன்னவனைச் சூதாட
வற்புறுத்திக் கேட்டதுதான்
வஞ்சனையோ? நேர்மையோ?’’

என நீதி கேட்டு கொந்தளிக்கிறாள். சூதாடி இழந்தவள் வாதாடி ஒரு பயன் இல்லை . அனாதையாய் கிடந் தது நீதி.

பெண்டிர் தமையுடையீர் பெண்க ளுடன் பிறந்தீர்!

பெண் பாவமன்றோ? பெரியவசை கொள்வீரோ?

தாய்மையையும், பெண்மை யின் மென்மையையும் உணரா தோரும், ஆணுக்குப் பெண் நிகர் என உதட்டிலும், பெண் அடிமைத் தனத்தை உள்ளத்திலும் கொண்டு காவடியாடுவோர் காதில் படுமா பெண்ணின் கதறல் ?

‘‘மார்பிலே துணியைத் தாங்கும்
வழக்கங் கீழடியார்க்கில்லை
சீரிய மகளு மல்லள்;
ஐவரைக் கலந்த தேவி
யாரடா பணியாள்!வாராய்
பாண்டவர் மார்பி லேந்தும்
சீரையுங் களைவாய் தையல்
சேலையுங் களைவாய்’என்றான்.

பிச்சேறியவனை போல துச்சாதனன்
துகிலினை உரிகிறான்
இரு கரத்தால் உடல் மறைகின்றாள்
பதைபதைத்து உடல் நடுங்குகிறாள்
இங்கும் அங்கும் என ஓடுகிறாள்
உடலும் உள்ளமும் களைத்து
சோர்கிறாள்
உட்ஜோதியுள் கலந்தாள்
உலகை மறந்தாள்.

தான் என்ற நிலை இழந்து, முழுவதும் சரணடையும் போது நம்மை ஆளும் சக்தி துணை வரு கிறது. இங்கு கண்ணன் வண்ண வண்ண சேலைகளை வாரி



வாரி தருகிறான். பெண்ணவள் மானம் காக்கப்படுகிறது. மன்றாடி மன்றாடி மடிந்து போன மங்கை யவள் மானம் காக்கப்பட்ட பின் மீண்டும் அச்சபையை பார்க்கிறாள். பார்வை மாறுகிறது. அறம் பிழைத்தோர்க்கு தக்க தண் டனை இழைக்க விளைகிறாள். பெண்ணறத்தினை காத்திடாத ஆண்மக்கள் வீரம் அழிகிறது. சிறு யுத்தம் அல்ல பாரத போர் நிகழ் கிறது.

தேவி திரௌபதி சொல்வாள்–‘ஓம்,
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்
பாவி துச்சாதனன் செந்நீர்,–அந்தப்
பாழ்த்துரி யோதனன்
ஆக்கை இரத்தம்,
மேவி இரண்டுங் கலந்து–குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன் யான்–இது
செய்யு முன்னே முடியே’
னென் றுரைத்தாள்.

எனக் கூறி அரங்கின் நடுவில் அனல் விழியோடு அமைதியாய் நின்றேன். முற்றிலும்பாஞ்சாலி யாக மாறிப்போய் மேடையில் நின்ற என்னை இயல்ப்புக்கு இழுத்து வந் தது சபையோரது வான் பிளக்கும் கரவொலி.

மெல்ல விழித்து பார்த்தேன் , சற்றே திருப்தியும் கொண்டேன். காரணம் நீண்ட கரவொலியை எழுப்பியோர் பலர் சபையில் இருந்த ஆண் இலக் கியவாதிகள்.

இன்னமும் பெண்ணறத்தினை பேணும் ஆண்மக்கள் இருப்பதாலும், இன்னமும் கண்ணம்மா எனக் கொண்டாடும் பாரதிகள் இருப்ப தாலும், இன்னமும் இரண்டு இமை போல் காதலை காத்து நிற்கும் காதலர் கள் இருப்பதாலும் இப்புவி மீதினில் எத்தனை கோடி இன்பம் கொட்டிக்கி டக்கிறது.

பாரதியின் பாஞ்சாலி சபதத்தை 90 நிமிட தனி நபர் நாட்டிய நாடக மாக மேடையேற்றினேன். அணிசேர் கலைஞர்களாக

22 ஆம் பக்கம் பார்க்க...




Sari1 Fashion House
எம்மிடம் தங்க நகைகள் மற்றும் மேலதிக சேவைகளும் உண்டு
Sari 1
* ஓடர் நகைகள்
* திருத்த வேலைகள்
* காது மூக்குத்தி குத்துதல்
* பழைய நகைகளுக்கு பதிலாக சிங்கப்பூர் புதிய நகைகள் மாற்றி கொடுக்கப்படும்
தரமான ஆடைகளை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
Taunusstr. 49
(1. Etage) 60329
Frankfurt am Main
(gegenuber
Hauptbahnhof)
0152 1923 9663
https://www.facebook.com/
sari1fashionhouse
Frankfurt (Main) Hauptbahnhof முன்பாக 50 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது


New Asialand
ONLINE SHOP NOW
www.newasialand.com
015201954064
மளிகைப்பொருட்கள் மற்றும் மரக்கறி, கடலுணவுப்பொருட்கள்
அனைத்தும் என்றும் சிறந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
FRANKFURT (MAIN) HAUPTBAHNHOF முன்பாக 50 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது



# சிதையப்போகும் செம்மணி



சர்மிலா
வினோதினி
(இலங்கை)






செந்நெல்மணிகள் விளைந்த வனப்புமிக்க பிரதேசமாக விளங்கிய காரணத்தினால் செம்மணி என்கின்ற காரணப்பெயரைப் பெற்ற பிரதேசம்தான் நாவற்குழிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் அமைந்துள்ள செம்மணிப் பகுதி. இது சிறந்த வள வாய்ப்புக்களைக் கொண்ட நிலப்பரப்பாகும்.

பெயருக்கு ஏற்றாற்போல் வானம் பார்த்த வயல் நிலங்கள் வீதியின் இரண்டு மருங்கும் இடையிடையே பனைமர வேலிகளைக் கொண்டு பரந்திருக்கின்றன. யாழ்ப்பாண இராசதானிக் காலத்தின் வரலாற்றோடு தொடர்புபடுகின்ற இவ் வயல் நிலங்கள் வடக்கில் மாரியின் பெருமழை ஆரம்பிக்கின்ற காலத்திலிருந்து, தைமாதத்தில் சந்திக்கின்ற அறுவடைக்காலம் வரை கொடுக்கின்ற அழகும், பொருளாதார நிறைவும் அற்புதமானது.

இவ் வயல் நிலங்களுக்கு அடுத்ததாக செம்மணிக்குளம் என்று அழைக்கப்படுகின்ற சிறிய குட்டை வகைக் குளப்பகுதியும், கண்டற்தாவரப் பரம்பலைக் கொண்ட சதுப்பு நிலப்பகுதிகளும், சிறிய அளவிலான புற்தரைகளும் காணப்படுகின்றன. நாவற்குழிக் கடல் நீரேரியின் செல்வாக்கினைக் கொண்டுள்ள இச் சதுப்பு நிலங்களின் உயிர்ப்பல்வகைக் கோலங்களான கண்டல்கள், உமிரி வகைத் தாவரங்கள், நீர்க்காகங்கள் மற்றும் சிறு பட்சி இனங்கள் ஆகியவை இச் சுற்றுச் சூழலில் காணப்படுகின்ற பெறுமதிக்குரிய வளங்களாகும்.

இவற்றிற்கு அப்பால் செம்மணிச் சந்தியில் கம்பீரமாக நிமிர்ந்து நின்று வரவேற்கின்ற யாழ் வரவும், ஆலயச் சூழலும், அண்மையில்



அமைக்கப்பட்டிருக்கின்ற சிவலிங்கமும், சற்றுத் தொலைவிலும், வயலிடையிலும் அமைந்துள்ள அந்திமக் கிரியை அடக்க இடங்களும் இப்பகுதியின் கலாசார முக்கியத்துவத்தினைப் பிரதிபலிக்கின்றன.

1995 இன் பின் இந்த நிலத்தில் உருவாக்கப்பட்ட இராணுவக் காவலரண்களும் அவற்றின் பின் அரங்கேறிய துயரக்கதைகளும் நீதிமன்ற வழக்குகளாக இன்னமும் நிலுவையிலுள்ளவை.

இப்படியாக, நினைவின் அடுக்குகளில் உறைந்துபோயுள்ள இந்த நிலத்தின் வளங்களும், அவை சுமந்துள்ள கதைகளும் காலத்திற்கும் பாதுகாக்கப்பட வேண்டியவை. ஆனால் அண்மைக்காலமாக இப்பகுதியில் முறையற்ற வகையில் கொட்டப்பட்டு வருகின்ற திண்மக் கழிவுகளின் காரணமாக இப்பகுதியின் பௌதீக வளங்களின் இருப்பும், கலாசார அடையாளங்களும் கேள்விக்கு உள்ளாக்கப்படக் கூடிய நிலை உருவாகியுள்ளது.

முறையான தொடர் அவதானிப்பின் கீழ் இப்பகுதியில் கழிவுகள் கொட்டப்பட்ட வழக்கத்தினை விளங்கிக்கொள்ளலாம். இப்பகுதியில் உள்ள வயல் நிலங்களுக்கு அருகிலும், சதுப்பு நிலச் சூழலை அண்டிய சிறிய மேட்டுப் பகுதியிலும் ஆரம்பத்தில் பொறுப்பற்ற மக்கள் சிலர் கழிவுகளை வீசி வந்தனர், முறையற்ற இச் செயலால் அப்பகுதியில் கழிவுகள் சேர்ந்து, அப்பகுதி தன்நிலை இழக்கத்தொடங்க உரிய நிறுவனங்களின் தலையீட்டினால் முறையற்ற வகையிலான அக் கழிவகற்றல் தடுக்கப்பட்டு கட்டுப்பாடுகள் பேணப்பட்டன. இதனால் செம்மணிச் சூழலின் நிலைத்திருப்பு உறுதி செய்யப்பட்டது. எனினும் இந்நிலை மாற்றமடைந்து இன்றைக்கு இப்பகுதியில் முறையற்ற வகையிலான கழிவுகள் கொட்டப்படுகின்றன. உக்கக்கூடிய காகிதங்களில் இருந்து இலகுவில் பிரிகை அடைந்து உக்கி அழியாத பொலித்தீன் கழிவுகள், பிளாஸ்ரிக் பாவனைப் பொருட்கள், கண்ணாடிப் போத்தல்கள், மற்றும் மதுபானக் கொள்கலன்கள் போன்ற பிரிக்கப்படாத அனைத்து வகையான கழிவுகளும் கொட்டப்பட்டுகின்றன.

உரிய முறையில் பிரித்து, சேகரிக்கப்பட்டு உரிய

18 ஆம் பக்கம் பார்க்க...





# முதுக்குப் பின்னே பேசும் முகங்கள்



சேவியர்
(தமிழ்நாடு)

## நடுப்பக்கம்

விழுப்புண் கண்டவரை மதிக்கும் மரபு தமிழுக்கு உரியது. வீரத்தின் தழலில் போர்க்களத்தில் மார்பில் அம்பு பாய்ந்து இறப்பது ஆண்மையின் அடையாளமாய் போற்றப்படுகிறது. அதே போல முதுகில் ஈட்டி பாய்ந்து இறந்தால் அவன் பின்வாங்கி ஓடியபோது கொல்லப்பட்டவன் எனும் அவமானப் பெயர் கிடைப்பதுண்டு.

**நேருக்கு நேர் என்பது**
**வீரத்தின் அடையாளம்**
**முதுக்குப் பின் என்பது**
**கோழைத்தனத்தின்**
**அடையாளம்.**

வில் வீசும் களம் அன்று. சொல் வீசும் களம் இன்று! நேருக்கு நேராக வார்த்தைகள் பாயும் போது அது நேர்மையின் அடையாளமாகவோ, துணிச்சலின் அடையாளமாகவோ எடுத்துக் கொள்ளலாம். ஆனால் முதுகுக்குப் பின்னால் வீசப்படுகின்ற வார்த்தைகளை போலித்தனத்தின் பிம்பங்களாகத் தான் புரிந்து கொள்ள வேண்டும்.

அலுவலகத்தில் இதை ரொம்ப சாதாரணமாகப் பார்க்கலாம். யப்பா. உனக்கு புரமோஷன் கிடைச்சதுல செம ஹேப்பி. தகுதியில்லாத எவன் எவனுக்கோ குடுத்திட்டிருந்தாங்க. இப்போ தான் ஒரு நல்லவனுக்கு குடுத்திருக்காங்க என சிரித்துக் கொண்டே சொல்லும் போது கேட்பவர்கள் சிலிர்த்துப் போவார்கள். நம்ம மேல எவ்வளவு பாசம் என நெகிழ்ந்து போவார்கள். அதே நபர் கொஞ்சம் அந்தப்பக்கம் போய் இன்னொருவரிடம் அதையே பகடி செய்து பேசுவார்.

இவருக்கெல்லாம் புரமோஷனாம் கம்பெனி உருப்பட்ட மாதிரி தான். என்னிக்கு வேலை செஞ்சிருக்கான் ? ஒரு எழவும் தெரியாது. இப்படிப்பட்டவங்களுக்கு தான் புரமோஷன் கிடைக்குது என திரியைக் கொளுத்தி விடுவார்கள். இப்படி பேசிப் பேசி பொழுதைக் கழிப்பார்கள்.

கிசுகிசு இல்லாமல் எந்த ஒரு ஏரியாவையும் எளிதில் கண்டு பிடிக்க முடியாது. எப்படியோ நாலு பேர் கிசுகிசு பிரியர்களாகத் தான் இருப்பார்கள். ‘உங்க வேலையைப் பாத்துட்டு போங்கப்பா’ என சொல்வதற்கு பெரும்பாலும் யாரும் விரும்புவதில்லை. ‘அப்படியா ? நினைச்சேன்.. அவனோட நடவடிக்கையைப் பாத்தே சந்தேகப்பட்டேன்’ என சொல்லும் மக்கள் தான் அதிகம்.

எல்லோருக்கும் மெல்வதற்கு ஏதோ ஒரு அவல் வேண்டும். அந்த அவல் நாமாக இல்லாதவரை சந்தோசம். ஆனால் அவர்களுக்குத் தெரியாது கிசு கிசு விரும்புபவர்கள் இன்னொருவரின் வாயில் மெல்லப்படுவார்கள் எனும் உண்மை.

கிசுகிசுப் பிரியர்கள் மகிழ்ச்சியானவர்களாக இருக்க மாட்டார்கள் என்கிறது ஆய்வு ஒன்று. ரொம்ப சந்தோசமா இருக்கிறவங்களுக்கு அடுத்தவர்களைப் பற்றி அவதூறு பேசுவதில்



எந்த சிலாகிப்பும் இருப்பதில்லை. ஆனால் உள்ளுக்குள் கவலை இருப்பவர்களுக்கு அதை மறைப்பதற்காக இத்தகைய முகுதுக் குத்தல்கள் பயன்படுகின்றன.

தன்னைப் பற்றி நல்ல மதிப்பீடுகளைக் கொண்டிருக்கும் மனிதர்கள் பெரும்பாலும் கிசுகிசுக்களில் ஈடுபடுவதில்லை. தன்னம்பிக்கை மிகுந்திருக்கும் மனிதர்களிடமும் இத்தகைய கிசுகிசுக்கள் வராது. ஆனால் தன்னைப்பற்றிய உயர்வான மதிப்பு இல்லாதவர்கள் தான் அடுத்தவனை வார்த்தைகளால் வீழ்த்துவதில் தற்காலிக இன்பம் அடைகிறார்கள். ‘நம்மால போர்க்களத்துல வெற்றி பெற முடியாது, அப்போ வெற்றி பெற்றவனுக்கு அந்த தகுதி இல்லை என்று பேசித் திரிவோம்’ என்பதே இவர்களின் மனநிலை.

ஒருவர் மீதான கோபம் நமக்குள் இருந்தால் அது பல நேரங்களில் இத்தகைய கசப்பான உரையாடல்களில் வெளிப்படும். அந்த கோபம் ஏதோ ஒரு காரணத்துக்காக இருக்கலாம். ஒருவேளை அந்த நபர் அடைந்த வெற்றியோ, வாங்கிய ஒரு பொருளோ, அவர் பேசிய வார்த்தையோ, அல்லது பெற்ற பெருமையோ ஏதோ ஒன்றாய் இருக்கலாம். அது ஒரு கோபமாக உள்ளத்தில் வந்தமரும் பின்னர், வேறு ஏதோ ஒரு இடத்தில் வெளிப்படும்.

17 ஆம் பக்கம் பார்க்க...

S.K.SILKS GOLD PARAADISE
Adler Str 33 - 44137 Dortmund | Tel: 0231 9501 647
Mobil: 01705429251
Mr.P.Sritharan.
Proprietor

PANCREAS SUPPORT
கணையக்காவலன்
GMP
MFG License. No .730
HERBAL MEDICINE
இயற்கை இருக்க இன்சுலின் ஊசி இனி எதற்கு?
Insulin Booster ஆலோசனை தொலைபேசியில் இலவசம்
ஔடதம் Aowdatham
ஆரோக்கிய வாழ்வின் ஆரம்பம்
A.B.Thevaraj
Geobiological Expert (Certified)
Natropathy
Councelling & Sales
www.aowdatham.com
+4915214945800
Covid- 19 காலத்தில் உங்கள் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும்.
பக்க விளைவுகள் இல்லாத 48 மூலிகைகளின் கலவை
- நீரிழிவு நோயை சுகப்படுத்த,
- நீரிழிவு நோயால் ஏற்படும் உபாதைகளை தவிர்க்க
- நீரிழிவு நோயை வருமுன் காக்க
- உயர் இரத்த அழுத்தத்தை தவிர்க்க
- புத்துணர்ச்சி பெற
- தாம்பத்திய வாழ்க்கையில் சந்தோசமாய் இருக்க
- கொலஸ்டரோலைக் குறைக்க உடல் எடையைக் குறைக்க
நீங்களும் அருந்தி பயன் பெறுங்கள்
தினமும் காலை, மாலை 5 கிராம் சுடுதண்ணீரில் கலந்து குடிக்கவும்
48 மூலிகைகள் கொண்ட சர்க்கரைக்கொல்லி நீரிழிவு சூரணம்




புயல் மையம் கொள்வதைப் பார்க்கிறோம் இல்லையா ? ஒரு இடத்தில் மையம் கொள்ளும். பின்னர் அது வலுவடையும். ஆனால் அதே இடத்தில் பெரும்பாலும் கரையைக் கடக்காது. இன்னொரு இடத்தில் ஒரு உரையாடலாய், ஒரு நக்கலாய், கிண்டலாய் கசப்பான விமர்சனமாய் மாறிவிடும்.

இன்னும் சிலர் உண்டு, அவர்களுக்கு தங்களை வெளிப்படுத்திக் கொள்ள தேவையான திறமை இருக்காது. அல்லது இருக்கின்ற திறமையை அவர்கள் பயன்படுத்துவதில்லை. அதற்குப் பதிலாக, விஷயம் கேள்விப்பட்டியா. என ஆரம்பித்து இல்லாத ஒரு நபருடைய தலையை உருட்ட ஆரம்பிப்பார்கள். இருட்டின் கதைகளை வெளிச்சத்தில் பரிமாறும் ஒரு குரூர மனநிலை இது.

அவர்களுடைய பேச்சுக்கு நாலு பேர் கூட்டு சேர்வார்கள். அல்லது கிசு கிசு சொல்லாட்டா நம்மளை இந்த குரூப்ல சேத்துக்க மாட்டாங்க போல, என நினைத்தே சிலர் பேசுவதும் உண்டு.

நம்மிடமுள்ள குறைபாடுகளை பிறர் மீதான அவமானங்களைக் கொண்டு இட்டு நிரப்பவே கூடாது. அது மிகப்பெரிய பலவீனம். நாம் குறையற்றவர்களாய் இருக்க வேண்டும் என விரும்புவது நல்லது, ஆனால் குறையற்றவராய்க் காட்டிக் கொள்ள விரும்புவது தேவையற்றது.

சிலருக்கு இப்படிப்பட்ட பெரிய காரணங்களே இருக்காது. போரடிக்குது எவன் தலையையாவது உருட்டுவோம் என யாரையாவது போட்டு கடைவார்கள். அவர்களுக்கு சம்பந்தமே இல்லாத விஷயங்கள் கூட பேசப்படலாம். ஏதாச்சும் பேசு என்று சொன்னால், யாரையாச்சும் பற்றி பேசுவது ஒரு கீழ்த்தரமான பொழுது போக்கு.

அதுக்காக அடுத்தவங்களைப் பற்றியே பேசக்கூடாதென்றில்லை. காரணம் நாம் சமூகத்தின் பாகங்கள். அடுத்தவர்களைப் பற்றிப் பேசுவது தவிர்க்க முடியாதது. ஆனால் பேசுபவை உயர்வானதாக இருப்பது நல்லது. அல்லது முழுமையாகத் தெரிந்த விஷயங்களை ஒரு நன்மை நோக்கில் பகிர்ந்து கொள்ளலாம். உதாரணமாக, ஒரு பையன் ரொம்ப மோசமான பழக்கமுடையவன் என்றால், ‘கல்யாணத்துக்கு வரன் தேடி வருபவரிடம்’ அதைச சொல்வதில் தவறில்லை. காரணம் அது நன்மையை நோக்கிய பகிர்தலே.

அல்லது ஒரு ஆலோசனை [கவுன்சிலிங்] ஒருவருக்குத் தேவைப்படுகிறதெனில் ஆலோசனை வழங்குபவரிடம் எல்லா உண்மைகளையும் மறைக்காமல் சொல்லலாம். அது நல்லதை நோக்கிய தீயற்றின் பகிர்தல் என கருதிக் கொள்ளலாம். இத்தகைய சில குறிப்பிட்ட சூழல்களைத் தாண்டி நாம் பிறருடைய பிழைகளைப் பகிர்வது நல்லதல்ல.

இப்படி முதுகுக்குப் பின் பேசும் பழக்கத்தை நிறுத்த சில எளிய வழிகள் உண்டு.

ஒன்று, நாம் அந்த உரையாடலை எக்காரணம் கொண்டும் ஊக்கப்படுத்தாமல் இருப்பது. ஒருவர் ஒருவரைப்பற்றி பேசிக்கொண்டிருந்தால், அந்த தீயில் எண்ணை ஊற்றாமல் நீரை ஊற்ற வேண்டும். உதாரணமாக, சரி.. இப்போ அவரோட பாயிண்ட் ஆஃப் வியூ ல பாப்போமே இந்த சூழல் ஏன் உருவாச்சு, அவரோட பார்வையில எது நியாயம்ன்னு பாப்போமே என சிந்திக்கத் தூண்டலாம்.

ஹேராம் படத்தில் ஒரு வசனம் வரும்.

**“உங்க குழந்தையை ஒரு ஓநாய்**
**தூக்கிட்டு போனா சும்மா**
**இருப்பீங்களா ?”**
**“ஓநாயா இருந்து பாத்தா தான்**
**அந்த நியாயம் புரியும்”**

பல சிந்தனைகளைத் தூண்டும் ஒரு வசனம் அது. எது சரி, எது தவறு என்பதை ஒரு பக்கத்தை வைத்துக் கொண்டு நாம் தீர்ப்பிட முடியாது. பசிக்காகத் திருடும் ஒருவனையும், பொழுதுபோக்குக்காகத் திருடும் ஒருவனையும் ஒரே தராசில் வைத்து எடை போட முடியாது.

எதிர்மறையாய் பேசிக்கொண்டிருப்பவரிடம், சரி, அதை விடுங்க. பாசிடிவ்வா இந்த உரையாடலை மாத்துவோம் என திசை திருப்பலாம். விழலுக்கு இறைக்கின்ற நீரைப் போல, கிசுகிசுக்களால் பொன்னான நேரத்தை வீணாக்க வேண்டாமே – என சொல்லலாம்.

ஒரு கூடை நல்ல ஆப்பிள்களின் நடுவே ஒரு கெட்ட ஆப்பிள் பழத்தை வைத்தால், அந்த கெட்ட ஆப்பிள் ஒட்டு மொத்த நல்ல ஆப்பிள்களையும் கெட்டுப் போக வைத்துவிடும். எனவே வேறு வழி இல்லாவிட்டால் கிசு கிசுப் பிரியரை கொஞ்சம் வெட்டி விடுவது நல்லது.

ஒரு கோப்பை நிறைய இனிப்பான பானம் இருந்தால் சிந்துவதெல்லாம் இனிப்பாகவே இருக்கும் என்பார் ஏமி கார்மைக்கேல் அவர்கள். நமது இதயத்திலும் நல்ல இனிப்பான சிந்தனைகளை நிறைத்து வைக்கப் பழக வேண்டும். அப்போது நாம் பேசுவது எல்லாமே இனிப்பானவையாகவே அமைந்து விடும். கசப்பான சிந்தனைகளை நிரப்பி நடந்தால் கசப்புகள் வழியெங்கும் சிதறும்.

ஒருவரைப் பற்றி நல்லதா பேச நாலு வார்த்தை இல்லையேல் அவரைப் பற்றி பேசமாட்டேன் என முடிவெடுக்கலாம். அது ரொம்ப சிம்பிள். தொடர்ந்து அத்தகைய ஒரு முடிவை எடுத்தால் கடைசியில் நாம் அந்த இயல்புக்குள் வந்து விடுவோம்.

பிறரைப் பற்றி எப்போதும் நேர்மறையாகவே பேசிப் பாருங்கள். அந்த செய்தியை அந்த நபர் கேள்விப்படும் போது மிகவும் மகிழ்வார். ஒருவர் இல்லாத நேரத்தில் அவரைப்பற்றிப் பேசுகின்ற நேர்மறை விஷயங்கள் அவருக்கு உங்களிடம் ஒரு மரியாதையையும், அன்பையும் உருவாக்கும். நாம் எப்போதும் நம்மைப் பற்றிய நல்ல விஷயங்களைத் தான் கேட்க விரும்புவோம் இல்லையா அதே போல தான் பிறரும் இருப்பார்கள் எனும் சிந்தனை நம்மிடம் இருக்கட்டும்.

ஒருவேளை நம்பிக்கைக்குரிய ஒருவரைப் பற்றி நீங்கள் தவறாய்ப் பேசிய விஷயம் அவருடைய காதுக்குப் போனால் அவர் மனம் உடைந்து போவார். உங்கள் மீதான நம்பிக்கை நீர்த்துப் போய்விடும். அவரிடம் சொல்லும் நபர் இன்னும் நாலு மசாலா சேர்த்து சொல்வார் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

இது தேவையற்ற கால விரையம் ! நம்முடைய கடமையிலிருந்து நமது பார்வையை விலக்கி விடும். எனவே அதை விடுத்து எப்போதும் உண்மையைப் பேசும் மனநிலையை உருவாக்க வேண்டும்.

ஒருவேளை உங்கள் முதுகுக்குப் பின்னால் உங்களைப் பற்றிய செய்திகள் பேசப்படுகிறதெனில் நீங்கள் செய்யவேண்டிய முதல் வேலை, அதை உதாசீனப்படுத்துவது தான். இரண்டாவது, அது எந்த வகையிலும் நம்முடைய இயல்பைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்வது. மூன்றாவது. நம்மிடம் ஏதேனும் தவறுகள் இருந்தால் அதைத் திருத்துவது.

எதையும் நேருக்கு நேராய் சந்தித்தும், சிந்தித்தும், உரையாடியும் மகிழ்வோம். அதுவே ஆறறிவின் அழகு.




பண்டிகைக் காலங்கள் வந்திடும்
வாடகை வாழ்த்துக்கள்
வாட்ஸ் அப்பின் ஊடே
வாசல் தேடி வந்திடும்
வந்த வேகத்தில் சென்றிடும்
எம் மனங்களில் இருந்து

வாட்ஸ் அப்பு வந்ததனால்
வாய்கெல்லாம் ஓய்வு
வாழ்த்துச் சொல்ல- கூசுது நாக்கு
உலகமெங்கும் நடக்குது
நல்லதொரு கூத்து

நல்மனம் கொண்டு
வாயார வாழ்த்துங்கள்
வாழும் காலம்
நமக்கெல்லாம்
நலமாகும்

**அல்வாய் பேரின்பநாதன்**
**(லண்டன்)**



# யேர்மனியில் ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் ஸ்ரீ ஆதிசங்கரருக்கு ஓர் அற்புதத் திருக்கோவில்





யேர்மனி ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் ஸ்ரீ ஆதி சங்கரருக்கு ஓர் அற்புதத்திருக் கோவிலின் திருப்பணிவேலைகள் முடிந்துள்ளன. தமிழகத்தில் மகாப லிபுரத்தில் உள்ள சிற்பக்கலைக்கூ டத்தில் திரு கவிச்சந்திரன் அவர் களால் முழுமையாக கருங்கல்லில் வடிவம் பெற்று, இங்கு வரவழைக் கப்பட்டது. ஐரோப்பாவிலே கருங்கல் லால் அமையப்பெற்ற ஸ்ரீ ஆதிசங்கர் கோவில் இதுவாகும். இக்கோவிலில் ஆதிசங்கரரை பிரதிஷ்டை செய்யப் படவுள்ளது. இதற்கான முக்கியமாக காரணம் குருவழிபாடாகும். மாத, பிதா, குரு தெய்வம். ஆகவே குருவை வழிபட்டு பின் மற்றய வழிபாடுகளைச் செய்வதற்கு இது வழிகாட்டியாக அமையப்பெற்றுள்ளது. 2600 ஆண்டு களுக்கு முன்பாக எங்கள் இந்து சனா தனத்திற்கு வந்த பல சோதனைகளை தனது ஞான வாதத்தினால் வென்று நிலைநிறுத்தியவர் ஆதிசங்கரராவார்.

ஸ்ரீ ஆதிசங்கரரின் பிதிஷ்டை நிகழ்வுகள் 17.05.2021 அன்று நடைபெறவுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

படமும், செய்தியும்:
**ஆன்மிகத்தென்றல்,**
**த.புவனேந்திரன்.**

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# சிதையப்போகும் செம்மணி



இடத்தில் முறையாக அகற்றப்பட வேண்டிய இக்கழிவுகளை இப்பகுதி யில் கொட்டுவதன் ஊடாக அருகி ருக்கும் வயல் நிலங்கள் மாசுபடுவ தோடு, உடையக்கூடிய கண்ணாடிப் போத்தல்கள் மற்றும் ஏனைய கூரிய கழிவுகள் வயல் நிலங்களோடு சென்று சேர்வதற்கான வாய்ப்புக் கள் அதிகம் உள்ளன. இவை விவ சாயிகளுக்கு சிறிய காயங்களையும், விபத்துக்களையும் நாட்கள் கடந்து ஏற்படுத்த வல்லவை.

அத்தோடு கழிவுகளின்பால் ஈர்க்கப்படுகின்ற காகம் மற்றும் இன்னபிற பறவை இனங்கள் கழிவுகளை அலகுகளில் காவிக் கொண்டு வீதிக்கு மேலால் பறந்து திரிவதும், துர்நாற்றம் வீசும் கழிவுகள் அங்கும் இங்குமாக சிதறடிக்கப்பட்டுக் கிடப்பதும் பிரதேசத் தின் அழகியலை பாதிப்பதோடு, வீதியால் செல்லும் பயணிகளையும் முகம் சுளிக்க வைக்கிறது.

வெளித்தெரிகின்ற இவ்வாறான பாதிப்புகளுக்கு அப்பால், இவ்வ கைக் கழிவகற்றல் நடவடிக்கையா னது இப்பகுதியின் அதி முக்கியத் துவம் வாய்ந்த உவர்நிலச் சூழலிலும் நீண்ட காலப் பாதிப்புக்களை உண்டு பண்ணக்கூடியது. சதுப்பு நிலச்சூழ லோடு கலக்கக்கூடிய பொலித்தீன் திண் மக் கழிவுகள் நீண்ட உக்கும் காலம் கொண்டவை என்பதால் மண்ணோடு கலந்து, புதைந்து மண்ணை மாசுபடச் செய்து, மாரிகாலத்தில் நிலத்தின் உள்ளி றங்கும் நீரின் அளவைக் குறைத்து நில வளமிளத்தலைத் தூண்டக்கூடியவை.

உயிரியல் பல்வகைமைச் செறிவைப் பொறுத்தவை சதுப்பு நிலங்கள் கொண் டிருக்கின்ற வளப்பரம்பலானது கடல் கொண்டிருக்கின்ற வளங்களை விட அதிகமானது. இந்நிலையில் இங்கு கொட்டப்பட்டுள்ள கழிவுகள் இப்பகு தியின் அழகிய கண்டற் தாவரச் சூழ லையும் அதனோடு இணைந்த உயிர்ச் சூழலையும் கால ஓட்டத்தில் சிதைத்து அழிக்க வல்லது.

அத்தோடு தொடர்ச்சியாக இப்பகுதில் கழிவுகள் கொட்டப்படுமாக இருந்தால் அவை மெதேன், கரியமிலவாயு போன்ற வாயுக்களின் உருவாக்கத்திற்கு கார ணமாக அமையும். திறந்தவெளியில் கொட்டப்படுகின்ற குப்பைகள் உக்கி அழிவடைவதற்கு சுமார் இருபது வரு டங்கள் தேவைப்படும், இந்நிலையில் இங்கு தேங்கப்போகும் கழிவுகளில் இருந்து வெளியேற்றப்படுகின்ற கசியும் திராவகங்கள் சுமார் இருபது வருடகா லத்திற்கு மேலாக தரைக்கீழ் நீரோடு கலப்பதற்கான வாய்ப்புக்களும் அதி கமாக உள்ளன. இவை நீண்டகாலப் போக்கில் நிகழக்கூடிய செயற்பாடுகள் எனினும் மெல்ல மெல்ல தரைக்கீழ் நீர்வளத்தினையும், அருகிலுள்ள சிறு நீர்ப்பரப்பினையும் பாதிக்கக்கூடியவை. செம்மணியில் அமைந்துள்ள இந்து மயானத்திற்குள் முறையற்ற வகையில் கொட்டப்பட்ட மருத்துவக் கழிவுகளும் நீண்ட காலப்போக்கில் இத்தகைய கெடு தல்களையே மண்ணுக்கும் தரைக்கீழ் நீர் வளத்திற்கும் ஏற்படுத்தக்கூடியவை. இவை சழற்சி அடிப்படையில் மனித ஆரோக்கியத்திற்கு தீங்காகி நோய்களை உருவாக்கக் கூடியவை.

திறந்த முறை கழிவகற்றலுக்கான இடங்களைத் தெரிவு செய்கின்ற போது காணிப்பயன்பாட்டுத் தரவுகளின் அடிப் படையில் முறையான கள ஆய்வுகள் மற்றும் உரிய விற்பன்னர்களின் வழி காட்டுதலின் கீழ் மக்கள் நடமாட்டம் குறைந்த, காற்று ஒதுக்குப்புறமான, சுற்றுச்சூழல் மற்றும் கராசார முக்கியத் துவம் குறைந்த, தரைக்கீழ் நீர்ப்படுக்கை கள் ஆழத்திலுள்ள பகுதிகள் அடையாளப் படுத்தப்பட்டு உரிய முறையில் கழிவுகள் அகற்றப்பட்டு முகாமை செய்யப்படுவதே முறையானது.

இவை தொடர்பாக உரிய வினைத் திறன் அறிவுள்ள சுற்றுச்சூழல் அதி காரிகள், மாநகரசபை மற்றும் பிரதேச சபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிக ளையும் மீறி செம்மணிப்பகுதியில் இவ் வாறான சூழல் நாசகார செயற்பாடுகள் இடம் பெறுகின்றன எனின், இவற்றின் பின் இப்பிரதேசத்தின் இயற்கை அழகிய லைச் சிதைக்கின்ற, அஞ்சலிகள் மற்றும் பொது ஒன்றுகூடல்களை நிகழ்த்தக் கூடிய இணக்கமான செம்மணிச் சுற்றா டலை மறைமுகமாகச் சிதைத்து அழிக் கின்ற நிகழ்ச்சி நிரல் ஒன்று படிப்படியாக அரங்கேற்றப்படுகின்றதா என்கின்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது என் கின்றனர் பொது மக்கள்.






Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)



# மன அழுத்தமும் அதற்கு பின்னால் இருக்கும் அறிவியலும்

இன்றைய விரைவான உலகில் ஆங்கிலத்தில் stress என்று அழைக்கபடும் மன அழுத்தம் எங்கள் வாழ்வில் சாதாரணமான ஒரு விஷயம் ஆகிவிட்டது. கடன், வேலையின்மை, குடும்பத்தில் பிரச்சினைகள், பள்ளியில் பரீட்சை போன்றவற்றை ஒரு பக்கம் இருக்க, இக்கால கட்டத்தில் கொரோனா வைரஸ் நம்மைத் தாக்கி விடுமா என்று பயந்து பயந்து நாம் மன அழுத்தத்திற்கு ஆளாகிவிடுகின்றோம். ஆனால் இந்த மன அழுத்தம் நம்மையும் நமது உடலையும் பயங்கரமாகப் பாதிக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியுமா? அட ஏன் இதனால் நமது உயிருக்கே ஆபத்து இருக்கின்றது என்று சொன்னால் நம்புவீர்களா?

உயிரியல் ரீதியாக மன அழுத்தம் சில வேளைகளில் மிகவும் உபயோகமாக இருக்கும். அது ஏன் என்பதற்கு உங்களுக்கு ஒரு உதாரணத்தைத் தருகிறேன். நீங்கள் ஒரு காட்டில் நடந்து செல்லும் போது ஒரு கரடி உங்களைத் தாக்கினால் என்ன செய்வீர்கள்? உங்கள் உடல் ஒரு விதமான அழுத்த நிலையை அடைந்துவிடும். உங்கள் இருதயம் வேகமாகத் துடித்து, தசைகள் இறுகி அந்த இடத்தை விட்டு உடனடியாக போவதற்கு உங்கள் உடல் தயாராகி விடும். எனவே இப்படி ஆபத்தான நேரங்களில் மன அழுத்தம் நமது உயிரைக் காப்பாற்றுகின்றது.

ஆனால் இதே மன அழுத்தம் தினமும் நமது வாழ்க்கையில் வந்துகொண்டே இருந்தால், அதன் விளைவுகள் விபரீதமாக இருக்க வாய்ப்புகள் உள்ளன. ஜப்பானில் இதற்குக் கரோஷி (Karoshi) என்று கூட பெயர் வைத்திருக்கிறார்கள். இதன் நேரடி மொழிபெயர்ப்பு அதிக வேலைப்பளு மரணம் ஆகும். மிகவும் ஆரோக்கியமானவர்கள் என்று கருதப்பட்டவர்கள் திடீரென்று மாரடைப்பு அல்லது பக்கவாதம் போன்ற நோய்கள் காரணமாக இறந்து விடுகிறார்கள். இதை அவதானித்தவர்கள் இந்த நோய்களுக்கும் மன அழுத்தத்திற்கும் தொடர்பு இருக்கின்றது என்பதைக் கண்டுபிடித்தார்கள்.

சரி, மன அழுத்தம் இருக்கும் போது உண்மையில் நமது உடலில் என்ன தான் நடக்கிறது என்பதைப் பார்ப்போமா? பொதுவாக கோர்ட்டிசோல் (Cortisol) எனப்படும் இயக்குநீர் (hormone) தான் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி உடலின் எந்த உறுப்புகளுக்குச் சக்தி தேவையோ அந்த இடங்களுக்குச் சக்தியை அனுப்ப உதவுகிறது. ஆனால், மன அழுத்தம் தொடர்ந்திருந்தால் அதனால் பல பிரச்சினைகள் ஆரம்பித்துவிடும். மனித உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பு முற்றிலும் தனது பணியை நிறுத்திவிடும், அத்துடன் வெண்குருதியணுக்களின் (white blood cells) எண்ணிக்கை குறைந்துவிடும், மேலும் நோய்கள் வருவதன் வாய்ப்பு அதிகரித்துவிடும். மேலும் புற்றுநோய் வருவதற்குக் கூட



வாய்ப்புகள் இருக்கின்றது என்று கூறப்படுகிறது.

அது மட்டும் இல்லை, நமது உடலில் இருக்கும் ஒவ்வொரு உயிரணுவிலும் அடங்கி இருக்கும் ஒவ்வொரு நிறப்புரியின் (chromosome) நுனியிலும் டெலோமீர்ஸ் (telomeres) எனப்படும் ஒரு பகுதி இணைந்திருக்கிறது. இந்த டெலோமீர்ஸின் அளவு, வயது போகப் போகக் குறைந்துகொண்டே போய் ஒரு கட்டத்தில் முற்றிலும் நீங்கி விடும். அத்துடன் அந்த உயிரணுவும் இறந்துவிடும். ஆகவே, அந்த டெலோமீர்ஸ் இல்லாமல் போகும்போது நாமும் இறந்து விடுகிறோம். இதில் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், மன அழுத்தத்திற்கும் இந்த டெலோமீர்ஸின் அளவு குறைவதற்கும் தொடர்பு இருக்கிறது. அழுத்தம் கூடக் கூட டெலோமீர்ஸின் அளவு குறைவதின் வேகமும் அதிகரித்து விடுகிறது. ஆகவே, மன அழுத்தத்தின் காரணத்தால் நாம் மரணத்தை நோக்கி வேகமாகச் செல்கிறோம்!

ஆனால், பயப்படாதீர்கள் நண்பர்களே! மன அழுத்தம் உருவாக்குவதற்கு ஒரு இயக்குநீர் இருக்கிறது என்றால், அதைக் குறைப்பதற்கும் ஒரு இயக்குநீர் இருக்கத் தானே வேண்டும்? ஆமாம், அப்படி ஒரு இயக்குநீர் இருக்கிறது தான். அது வேறு ஒன்றுமே இல்லை, காதல், அன்பு, சந்தோஷம் போன்ற உணர்வுகளுக்குக் காரணமாக இருக்கும் ஒக்சிடோசின் (Oxytocin) எனும் இயக்குநீர் தான். எனவே, மன அழுத்தம் உள்ள நேரம் நீங்கள் உங்களுக்குப் பிடித்தவர்களுடன் நேரத்தைச் செலவிடுங்கள், அத்துடன் மன அழுத்தமும் குறைந்து நீண்ட காலம் உயிர் வாழலாம்.

இனி நீங்கள் கூறுங்கள் நண்பர்களே, உங்களுக்கு மன அழுத்தம் இருக்கும் பொழுது என்ன செய்வீர்கள்? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) பதிவு செய்யவும்.



நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகளின் மொத்தவியாபாரிகள் எம்மிடம் நகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

2021 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்கள், கலைநயம் மிளிரும் தரமான தங்க நகைகள் எம் கையிருப்பில்.



திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்




ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425



# இக்கணத்தில் வாழ்ந்துவிடு!

காலம் பொன் போன்றது. கடந்து விட்ட நொடித்துளிகளை விலைகொடுத்து வாங்கும் அளவிற்கு யாரும் இவ்வுலகில் செல்வந்தர்கள் இல்லை. உயிர்வாழ்தலின் ஒவ்வொரு மணித்துளியுமே கடந்து கொண்டிருக்கும் எம் வாழ்நாட்கள்.

கடந்துவிட்ட பொழுதுகளை மாற்றி அமைக்க முடியாது. இனி வரப்போகும் பொழுதுகளையும் இக்கணமே உணர்ந்து பார்க்க இயலாது. இதோ இப்போது தோன்றுவதே வாழ்வு. அடுத்தடுத்த பொழுதுகளில் ஏற்படுகின்ற சுவாரசியமே அந்த வாழ்வின் சுவை. இறக்கப்போகும் நாள் எதுவென தெரிந்துவிட்டால் வாழ்கின்ற நாட்கள் நரகமாகிவிடும். மனம் இறக்க இருக்கும் நாட்களுக்கு இன்னும் எத்தனை நாட்கள் நெருங்கி சென்றுகொண்டிருக்கிறோம் என்பதை கணக்கு பார்க்க தொடங்கிவிடும். இனிமையாக கொண்டாடப்படும் பிறந்ததினம் காலாவதியான திகதியை நெருங்கும் பயத்தை ஏற்படுத்தும். இவையெல்லாமே எதிர்காலத்தை பற்றிய நிகழ்கால பயம்.

மனக்குப்பைகள் முதற்கொண்டு உடல் உழைப்புக்கள் பலவற்றையும் சேகரித்து அதனை பாதுகாக்கவென இருக்கின்ற பொழுதுகளையும் வீணடிக்க கூடாது. அனுபவித்தல் அந்தந்த தருணங்களில் நிகழ வேண்டும். வியர்வை சிந்தி உழைத்து தானும் உண்ணாமல் அனுபவிக்காமல், தான தருமங்களும் செய்யாமல் பிற்காலத்துக்கு என சேர்த்து வைக்கும் செல்வம் பல தருணங்களில் மருத்துவ செலவுக்கே சென்றுவிடுகின்றன. அதனதனை அன்றே அனுபவிப்பதால் உடல்நிலை மற்றும் மனநிலையாவது பாதுகாக்கபடும். திருடர்கள் செல்வத்தை திருடலாமே தவிர உடல் உள நலனை திருட




கரிணி (யேர்மனி)

முடியாது. கிடைக்கின்ற சூழலில் உருவாகின்ற மனநிலை மற்றும், மணித்துளிகள் அடுத்த நிமிடமே மாறிவிடும். அவ்வப்போது கிடைக்கும் அனுபவங்களே அந்தப் பொழுதுகளுக்கான சிறப்பு.

மனிதனை தவிர்த்து உலகம் பிரபஞ்சம் பால்வெளி என அனைத்தும் நிகழும் கணத்திலே நகர்ந்து கொண்டிருக்கின்றன. மனிதன் மட்டும் உடலியல் இன்பத்தை நிலையெனக்கருதி இன்பத்தை பற்றாகவும் பற்றை அகங்காரமாகவும் மாற்றி எதிர்பார்ப்பு, தேவை, இலக்கு, வெற்றி என தனது அகங்காரத்தை திருப்திபடுத்தும் நோக்கில் நிகழும் கணத்தை[நிகழ்கின்ற காலத்தை] இறந்த காலமாகவும் எதிர்காலமாகவும் தனது மனவிம்பத்தை உருவாக்கி அதிலிருந்து வெளியேற முடியாதபடி ஒரு சிறையை உண்டாக்கி பிறவி பிறவியாக மீளாத் துன்பத்தில் அமிழ்ந்தவாறு கால வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றான்.

மனதிற்கு ஒரு பழக்கம் இருக்கின்றது எதிலாவது உடனே பற்றிக்கொள்வது. நிகழ்காலத்தில் நிகழ்கின்ற அனைத்து அதிர்வுகளினையும் மனம் பற்றிப்பிடிப்பதால் இறந்த காலம் உண்டாகின்றது. எப்போது மனம் பற்றிப் பிடித்தவாறு இறந்த காலத்திற்குள் நகர்கின்றதோ அப்போழுதே அந்த கண வாழ்க்கையும் மரணமடைந்து விடுகிறது. உண்மையான வாழ்க்கையானது எதையும் பற்றாது இருப்பதிலிருந்தே ஆரம்பமாகின்றது. அதாவது எதையும் பற்றாது இருந்தால் நிகழ்காலத்தில் கவனம் செலுத்தி வாழ முடியும்.

வாழ்வில் தினமும் புதுபுது விடயங்களை சந்திக்கிறோம். எம்மை நாம் நம்புவதன் மூலமும், எம் செயலை நாம் விரும்புவதன் மூலமும் சூழ்நிலைகளை எமதாக்கி கொள்ள முடியும். சூழ்நிலைகள் எமதாகும்போது சுவாரசியமாக அடுத்து வருகின்ற பொழுதுகளை எதிர்கொள்ள முடியும். நிகழ்காலம்தான் உயிரோட்டமிக்க வாழ்வாக இருக்கின்றது. கணத்திற்கு கணம் எம்மை புத்துணர்ச்சி மிக்கவர்களாக மாற்றி புதுமைமிக்க மனிதராக மாற்றுகின்றது. நிகழ்காலத்தின் வாழும் மனிதன் ஒவ்வொரு கணமும் இந்த பேரண்டத்தின் சக்தி தன்னை ஆட்கொள்வதை உணர்ந்து எதையும் பற்றாது பேரானந்தவெளியில் மிதந்தவாறு இருப்பான். இயற்கையின் கட்டமைப்பை கணத்துக்கு கணம் அனுபவிப்பான்.

கடந்துவந்த அனுபவச் சேர்க்கைகள் விழிப்புணர்வை விட எதிர்காலம் குறித்த பயத்தை ஏற்படுத்தும் போது நிகழ்காலம் குறித்த கவனம் இன்றிப் போய்விடும். கற்பனையில் பயம் என்பது ஒரு உணர்வுதான் அது நிஜமல்ல. எண்ணத்தை கவனித்தாலே போதும். நிஜமான சம்பவங்களை விட அவை சார்ந்த பயமே அதிக சோர்வைத் தரும்.

தீராத ஆசை எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் போது எதிர்கால கற்பனைகள் அதிகம் தோன்றும், அவை நிகழ்காலத்தை அதிகளவில் கரைத்துவிடும். எந்த நிபந்தனையுமின்றி கண்முன் விரிவடைந்து செல்லும் வாழ்வை நிதானத்துடன் அனுபவிப்பதே திறமை. வாழ்வில் அமைதியும், நிதானமும் மிக முக்கியம். ஒவ்வொரு சூழ்நிலையிலும் முக்கியம். தன்னைத்தானே முழுமையாக ஏற்றுக் கொள்ளுவதால் அமைதி இலகுவாக ஏற்படும். அமைதியான மனநிலையில் தான் கிரகித்தலும் அனுபவித்தலும் சாத்தியம்.

நிலையான மாற்றத்தை எதிர்நோக்கியுள்ளது தான் வாழ்க்கை. எல்லாம் கலந்தே வாழ்வு அரவணைக்கும். அதில் தேவையானவற்றை மட்டும் வாழ்வில் அனுமதிக்க வேண்டும். எதிலும் பற்றாது அனுபவிக்க வேண்டும். ஒரு பிளாஸ்டிக் போத்தல் கடலின் அலைகளுக்கு மேலாக மிதப்பதைப்போல அதாவது அலைகளில் உயர்ந்து தாழ்ந்தாலும் அது கடலினுள் அமிழாது. அதேபோல வாழ்க்கை எம்மை எங்கு கொண்டு சென்றாலும் பற்றற்ற நிலையில் நிகழ்காலத்தின் துணையுடன் மிதந்து வாழ்க்கையின் அர்த்தத்தை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.






15 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

புதினைந்து ஆண்டுகள் சென்றாலும் தினம்
உன் நினைவு மட்டும் என்றும் எம்முடனேயே
அம்மா என்றும் அன்பே என்றும் சொல்ல
நீயில்லை!
உன் நினைவால் வாடி வதங்குகின்றோம்
இதயத்தில் உன்னால் விதைக்கப்பட்ட அன்புகள்
இப்போ செழித்து பூத்து குலுங்குகின்றன
நினைவெல்லாம் நீயே தாயே!

என்றும் உன்னை மறக்காமல் வாடும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

திருமதி ஞானேஸ்வரி
சிவஞானசுந்தரம்

தோற்றம் : 25.09.1942
மறைவு : 09.05.2006

தகவல்: சு.சிவஞானசுந்தரம் 0176 69 366 433



கனகசபேசன் அகிலன்
(இங்கிலாந்து)




# Enjoy எஞ்சாமி...

இணைக்கப்பட்டுள்ள படத்தில் இருப்பது போல் தான் எனது வீட்டை அண்மித்த வீதிகள் மாலை நேரங்களில் இருக்கும். நான் எனது நாயை கூட்டிக் கொண்டு நடந்து செல்கையில், இதைப் போல் இருபது இருபத்தைந்து நாய்களை யாவது காணுவேன். அன்றொருநாள் நடந்து போகும் போது 'நாயுடன் நான் இப்படி இலங்கையில், எனது கிராமத்து வீதிகளில், நாயும் கயிறுமாக நடந்து சென்றால் எப்படியிருக்கும்?' என சிறிதாக கற்பனை செய்து பார்த்தேன்...என் காதில் கேட்காமல் பலர் 'இவனுக்கு பயித்தியம்... இரண்டு நாய்களுக்கும் வேறை வேலை யில்லை...' என்று இப்படி சொற்களை விட்டெறிந்திருப்பார்கள், சிலர் ஒழித்து நின்று கற்களையும் விட்டெறியலாம்...

இங்கிலாந்தில் இதை சாதாரணமாக செய்யும் நான் ஏன் அதையே எனது கிராமத்து வீதிகளில் செய்யலாமா என எண்ணித் தயங்குகிறேன்? இங்கிலாந்து நாய்க்கு மிகவும் தேவையான அந்த நடை ஏன் இலங்கையில் உள்ள நாய்களுக்கு [தெரு நாய்களுக் கல்ல] தேவைப்படுவதில்லை? அந்த விவாதத்தை உங்களிடம் விட்டு விடுகின்றேன்...

நாய், பூனை, நான், நீ என எல்லோரும் சுதந்திரமாக அனுபவித்த இந்தப் பூமியில் இன்று நாய்க்கு நடப்பதற்கென நேரம் குறித்து நடப்பது கவலைக்குரிய விடயம் தான் !

சரி, விடயத்துக்கு வருகின்றேன்... எனக்கு நேரமில்லாத போது எனது மகன் நாயை நடக்க கொண்டு செல்வான், ஒவ்வொரு தடவையும் அவன் வெளியே போகும் போது 'தம்பி, போனை மறக்காமல் கொண்டு போங்கோ, ஏதாவது பிரச்சனை வந்தால் என்னை கூப்பிடவாவது வசதியாக இருக்கும்' என்று நான் கூறுவது வழக்கம், அதற்கு அவன் 'அப்பா, நீங்களென்ன ஸ்ரீலங்கன் நாய்கள் மாதிரி இதை நினைக்கிறீங்களோ, நான் ஈஸியா சமாளிப்பன்' என்று எதிர்த்து சொல்லிவிட்டு செல்வான். அன்றொருநாள் வெளியே போனவன் ஒரு மணித்தியாலம் ஆகியும் வரவில்லை, நானும் மறந்துவிட்டேன், சிறிது நேரம் கழித்து நாயும் அவனும் வீடு வந்து சேர்ந்தார்கள், அவனது முகம் கோபத்தில் சிவந்திருந்தது – சோபாவில்[sofa] சாய்ந்தவன் கன நேரமாக எழுந்திருக்கவேயில்லை, காரணம் கேட்டதற்கு 'நாயை இணைந்திருந்த கயிறு அறுந்து போனதாகவும், தான் நாயை கையில் காவிக்கொண்டு [25 கிலோ எடையிருக்கும்] அரை மணித்தியாலமாக நடந்து வந்ததால் தனது நாரி மிகவும் நோவதாகவும்' முறைப்பாடு வைத்தான். எனக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை...நான் சொன்னது போல் போனை கொண்டு போயிருந்தால் ஏன் இந்தப்பாடு? பல விடயங்கள் எவ்வளவு சொன்னாலும் விளங்காது, தாமாக பட்டு தெளிந்தால் தான் வெளிச்சம் !

யோசித்து பார்த்தேன், அவன் சொன்னது போல ஸ்ரீலங்கன் நாயாக இருந்திருந்தால் அது தானாகவே வீடு வந்து சேர்ந்திருக்கும்... இதை எண்ணிய போது தான் நான் சிறுவனாக இருக்கும் போது நடந்த ஒரு நிகழ்வு ஞாபகம் வந்தது... எனது ஆரம்ப பாடசாலைக்கு பல நண்பர்கள் ஒன்றாக சேர்ந்து நடந்து போவது வழக்கம், எனது நாயும் சில நேரங்களில் என்னுடன் நடந்து வரும்...ஒரு நாள் அப்படி போகும் போது வழியில் தெருநாய் ஒன்றுடன் சண்டை பிடித்து, அதை துரத்தி செல்கையில், அருகில் இருந்த தோட்டக்கிணற்றில் தவறி விழுந்துவிட்டது[சிலதோட்டக் கிணறுகள் நிலத்தோடு சேர்ந்திருக்கும், கட்டுகள் இருக்காது, மாரி காலங்களில் நீர் நிரம்பியிருக்கும் போது கிணற்றிற்கும் நிலத்திற்கும் வித்தியாசம் தெரியாது,மிகவும் ஆபத்தானவை...இன்றும் அப்படி பல...சிலர் விழுந்து இறந்திருக்கின்றார்கள்]. 'நாயின் கதை முடிந்துவிட்டது' என்று பதைபதைப்புடன் ஓடிச்சென்று கிணற்றுக்குள் பார்த்தேன், நாய் நீந்திக் கொண்டிருந்தது, 'பள்ளிக்கூடம் போவதா, நாயுடன் நிற்பதா' என்ன செய்வதென்று தெரியவில்லை, போன் பண்ணி எவரையும் அழைக்க போனும் இல்லை, நண்பர்களிடம் 'நான் இண்டைக்கு பள்ளிக்கூடம் வரேல்லை' என்று சொல்லிவிட்டு, கிணத்தருகில் இருந்துவிட்டேன், நன்றியுள்ள நண்பனை தனியே தவிக்கவிட்டு எப்படிச் செல்வது? இதை பார்த்த, என்னை விட வயது கூடிய சில நண்பர்கள் எனக்கு உதவ வந்தார்கள் – வாளியுடன் இணைந்திருந்த கயிற்றை கழற்றி அதில் உருவுதடம் போட்டு, சிரமப்பட்டு ஒரு மாதிரி நாயை வெளியே எடுத்து வீட்டுக்கு துரத்தி விட்டேன். அதுவும் தானாகவே வீடு சென்று விட்டது...

அந்த காலங்கள் விலங்குகள் மனிதர்கள் எல்லோரும் இயற்கையோடு இணைந்திருந்த காலங்கள், பள்ளிக்கூடம் போகும் போதும் வரும் போதும் கூட இயற்கையை கற்றோம், அதனுடன் பின்னிப் பிணைந்திருந்தோம். இன்று இயற்கையை பற்றி கற்பதற்கென்று பிள்ளைகளை பிரத்தியேகமாக, அதற்கென்று தனியாக பாடசாலைக்கு அனுப்புகின்றார்கள். இயற்கையுடன் இணைந்திருந்த காலம் போய் இப்போது இணையத்தளங்களூடாக இயற்கையை இரசிக்கும் காலம் வந்துவிட்டது... நினைத்த நேரமெல்லாம் நடந்த நேரம் போய், நேரம் ஒதுக்கி நடக்கும் நிலையில் இருக்கின்றோம்...நாய்கள் மட்டுமல்ல, நாமும் தான் !

13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

சென்னை கலாஷேத்திராவில் இருந்து திரு தீபு நாயர் அவர்களும், திரு ஹரிபத்மன் அவர்களும் வருகை தந்தனர். 2007 இல் கொழும்பு ராமகிருஷ்ணா மண்டபத்தில் முதன் முறையாக மேடையேற்ற பட்ட பின், சர்வதேச இலக்கிய மகாநாடு, தமிழ் சங்க மேடை , என பல்வேறு நிகழ்வுகளில் மேடையேற்றப்பட்டது. பலரது பாராட்டைப் பெற்ற படைப்புகளில் இதுவும் ஒன்றெனினும், பார்வையாளர்களின் உணர்வோடு கலந்து சபையைக் கட்டிபோடவல்ல வல்லமை கொண்டதாய் அமைய காரணமானது நாட்டியத்தின் மகிமையா?, இசையின் விசையா? ஆடல் கலைஞனின் அபிநயமா? பாடல் வரிகளின் ஆழமா?? இல்லை பெண்ணறமா?? பெண்களுக்கு இந்த சமுதாயம் கொடுத்த பரிசு மன்றாடியும் பயனில்லை , ஆனால் அறம் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.

**மாதவிடாய் என்றும் பாராது மன்றுள்**
**இழுத்து வரப்பட்ட மாதரசி மன்றாடுகிறாள்**

**தருமத்தின் வாழ்வதனைச்**
**சூது கவ்வும் தருமம் மறுபடி வெல்லும்**


# வெற்றிமணி திருமண சேவை



## நீங்களே பேசிக்கொள்ளுங்கள்

**மணமகள் தேவை**

இந்து மதத்தைச் சேர்ந்த யேர்மனியில் பிறந்து கல்விற்று (Machinenbau) என்ஜினியராக கடைமையாற்றும் 30 வயது உடைய ஆண்மகனுக்கு யேர்மனியில் Nordrhein-Westfalen இல் மணமகள் தேவை. பெற்றோர் மட்டும் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு இலக்கம்: 0175 850 1489

**மணமகள் தேவை**

யேர்மனியில் Nordrhein-Westfalen இல் பிறந்து கல்விகற்று சுவிஸ் நாட்டில் சிறந்த பதவிவகிக்கும் 31 வயது உடைய மணமகனுக்கு நற்குணமுடைய கல்விகற்ற கிறிஸ்தவ மணமகளைத் தேடுகின்றோம். (யேர்மனி அல்லது சுவிஸ் நாட்டில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது ) 2 அல்லது 3 வயது குறைந்தவர்கள் விரும்பத்தக்கது. பெற்றோர் உறவினர்கள் மட்டும் தொடர்பு கொள்வும்.
தொடர்பு இலக்கம்: 0049 152 1051 2973

**மணமகன் தேவை**

யேர்மனியில் Nordrhein-Westfalen இல் பிறந்து கல்விகற்று யேர்மனியில் நல்லபதவியில் இருக்கும் 29 வயது நிரம்பிய மணமகளுக்கு நற்குணமுடைய கல்விகற்ற கிறிஸ்தவ மணமகளைத் தேடுகின்றோம். 1 அல்லது 3 வயது கூடியவர்கள் விரும்பத்தக்கது. யேர்மனியில் வசிப்பவர்கள் மட்டும் விணண்பிக்கவும். பெற்றோர் தொடர்பு கொள்ளவும். தொடர்பு இலக்கம்: 0049 163 5166 298

மணமகள், மணமகன் தேவைகளை பிரசுரிக்கலாம்.3 தடவை பிரசுரிக்க குறைந்த கட்டணமே அறவிடப்படும்.



# அந்தக் கணத்தில் இருத்தலும், நிகழ்காலத்தில் வாழ்தலும்

கடந்த காலத்தை மறுபரிசீலனை செய்வதில் அல்லது எதிர்காலத்தைத் திட்டமிடுவதில் எங்களை அறியாமலே எங்களின் மனம் பரபரத்துக்கொண்டிருப்பதை நாங்கள் அனைவரும் கவனித்திருப்போம். அவை சந்தோஷமான நினைவுகளாகவோ அல்லது நேர்மறையான சிந்தனைகளாகவோ இல்லாமல், எங்களைத் திணறடிக்கச்செய்யும் உணர்ச்சிகளாக அல்லது நினைவுகளாக இருக்கும்போது அல்லது தொடர்பற்ற அல்லது உணர்ச்சியற்ற ஒரு நிலையை எங்களில் தோற்றுவிக்கும்போது கவலை, வலி, மனவழுத்தம், மனச்சோர்வு போன்ற எதிர்மறையான நிலைகள் எங்களுக்கு வரக்கூடும்.

அப்படியான எதிர்மறை நினைவுகளில் உழலும் அல்லது எதிர்காலம் பற்றிய கவலைகளில் ஆழ்ந்துபோகும் நிலையை மேவுவதற்கு, அலைபாய்ந்து கொண்டிருக்கும் எங்களின் மனத்தைக் கவனித்து, மீளவும் அதனை அந்தக் கணத்தில் இருக்கச்செய்தல் [Mindfulness] மிகவும் முக்கியமாகும். அந்தக் கணத்தில் இருக்கும் திறனை நாங்கள் வளர்த்துக்கொள்வதற்கு நிகழ்காலத்தில் வாழும் உத்தி [Grounding] எங்களுக்கு உதவுகிறது என்கிறார், Harvard பல்கலைக்கழகத்தின் மருத்துவ நிபுணரான Westbrook.

எங்களின் உடலில் அல்லது சூழலில் என்ன நடக்கிறது என்பதில் கவனம்செலுத்தலே அந்தக் கணத்தில் இருத்தல் எனப்படுகிறது. குறித்த அந்தச் சூழல் எங்களுக்குப் பாதுகாப்பானதாக இருக்கிறது என்பதை எங்களின் மொழித் திறனைப் பயன்படுத்தி எங்களுக்கு நாங்களே நினைவுபடுத்துவதன் மூலம், போராட்டத்துக்கு அல்லது தப்பி ஓடலுக்குத் தயாராகும் எங்களின் உடலின் எதிர்வினையை இல்லாமல் செய்வதே நிகழ்காலத்தில் வாழ்தலின் நோக்கமாகும்.

உணர்ச்சிரீதியான அல்லது உடல்ரீதியான வலி ஒன்றினால் நாங்கள் திணறடிக்கப்பட்டிருக்கும்போது, எங்களின் அந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், பாதுகாப்பை நாங்கள் உணர்வதற்கும் எங்களுக்கு ஒரு வழி தேவைப்படுகிறது. எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் எங்களுக்கு அது கிடைப்பதற்கும், சமநிலை ஒன்றை நாங்கள் உணர்வதற்கும் நிகழ்காலத்தில் வாழ்தல் உத்தி உதவுகின்றது.

எங்களின் மனதில் கவனத்தைச் செலுத்துதல், எங்களின் புலன்களில் கவனம் செலுத்துதல் எங்களை அமைதிப்படுத்தல் ஆகிய மூன்று வழிகளில் எங்களுக்குப் பொருத்தமான ஒரு வழியில் நிகழ்காலத்தில் வாழ்தலை முயற்சிக்கலாம் என்கின்றனர் உளவியலாளர்கள்.

ஸ்ரீரஞ்சனி
(கனடா)



எங்களின் மனதில் கவனம்செலுத்துவதைப் பின்வரும் வழிகளில் நாங்கள் செய்யமுடியும்:

✸ பொருள்கள், ஒலிகள், இழையமைப்புகள், நிறங்கள், வாசனைகள், வடிவங்கள், இலக்கங்கள், வெப்பநிலை ஆகியவற்றை எங்களின் புலன்கள் அனைத்தையும் பயன்படுத்தி எங்களின் சூழலை விரிவாக விபரிக்கலாம். உதாரணத்துக்கு, இந்தச் சுவர்கள் வெண்மையானவை அங்கே ஐந்து இளஞ்சிவப்பு நாற்காலிகள் உள்ளன் அந்தச் சுவருக்கு எதிரே மரத்தாலான புத்தக அலமாரி ஒன்று உள்ளது.

✸எங்களின் மனதுக்குள் விளையாடல். உதாரணத்துக்கு 'க' என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் நகரங்கள், எழுத்தாளர்கள், பாடல்கள் அல்லது பொருள்களின் பெயர்களைச் சொல்லலாம்.

✸அன்றாடச் செயல்பாடுகளை விபரித்தல். உதாரணத்துக்கு, முதலில் நான் உருளைக்கிழங்கைத் தோல் உரித்து நான்கு துண்டுகளாக வெட்டுகிறேன். பின்னர், தண்ணீரைக் கொதிக்க வைக்கிறேன்.

✸மிகவும் ஆறுதலாக 10 வரை எண்ணுதல் அல்லது அகரவரிசையைச் சொல்லல்.

எங்களின் உடலில் கவனம்செலுத்துவதைப் பின்வரும் வழிகளில் நாங்கள் செய்யமுடியும்

✸குளிர்ந்த அல்லது இளம்சூடான நீரை எங்களின் கைகளுக்கு மேல் ஓடவிடல்.

✸முடிந்தவரை கதிரை ஒன்றை இறுக்கமாகப் பிடித்துக்கொள்ளல், பின்னர் கதிரையில் இருக்கும் கைகளின் தொடுகை உணர்வை உணரல்.

✸எங்களைச் சுற்றியுள்ள பொருள்களைத் தொடல். அந்தப் பொருட்களை முதல்முறையாகப் பார்ப்பது போல் ஆர்வத்துடன் ஆராய்தல்.

✸கைகளை மூடி மூடித் திறத்தல்.

✸இடம், வலம் என்று சொல்லியபடி ஒவ்வொரு அடியையும் கவனித்து, மெதுவாக நடத்தல்.

✸சுவைகளை விரிவாக விபரித்தபடி, எதையாவது சாப்பிடுதல்.

✸உட்சுவாசம் மற்றும் வெளிச்சுவாசங்களை ஒவ்வொரு முறையும் கவனிப்பதன் மூலம் சுவாசத்தில் கவனம்செலுத்தல்.

எங்களை அமைதிப்படுத்தலைப் பின்வரும் வழிகளில் நாங்கள் செய்யமுடியும் நண்பர் ஒருவருடன் பேசுவதைப்போல் எங்களுடன் நாங்களே இரக்கத்துடன் கதைத்தல். உதாரணத்துக்கு, கஷ்டமான ஒரு நேரத்தை கடந்து வந்திருக்கிறன், இதையும் கடந்திடுவேன்.

நாங்கள் கரிசனைவைத்திருக்கும் நபர்களைப் யோசித்துப்பார்த்தல், [உ+ம்., பிள்ளைகள் அல்லது பெற்றோர்] அத்துடன் அவர்களின் நிழல்படங்களைப் பார்த்தல்.

நல்லதொரு உணர்வை ஏற்படுத்தும் அல்லது உத்வேகம் தருமொரு பாடலைக் கேட்டல்.

மிகவும் ஆறுதல்தரும் ஒரு இடத்தைக் கற்பனைசெய்தல் [கடற்கரை அல்லது பூங்கா].

Steven F.Hick என்பவரின் கருத்தின்படி, அந்தக் கணத்தில் இருத்தல் என்பது முறைசார்ந்தும் முறைசாராமலும் செய்யக்கூடிய ஒரு பயிற்சியாகும். இதனை நாளாந்தம் நாங்கள் செய்யும் பின்வரும் செயல்பாடுகளுடனும் இணைத்துக்கொள்ளவும் முடியும். இப்படிப் பழகிவிட்டால் திணறடிக்கச்செய்யும் நிகழ்வுகள் நிகழும்போது நிகழ்காலத்தில் வாழும் உத்தியைப் பயன்படுத்தல் இலகுவானதாக இருக்கும்.

**பற்களைத் துலக்குதல்:** எங்களின் பாதங்கள் தரையில் ஊன்றியிருப்பதை, கையில் பற்தூரிகை இருப்பதை, கை மேலும் கீழும் அசைவதை அவதானித்தல்.

**பாத்திரங்களைக் கழுவுதல்:** கைகளில் வெதுவெதுப்பான நீர் படுவதை, சவர்க்காரக் குமிழிகளின்

28 ஆம் பக்கம் பார்க்க...

'சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"



Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com
finma : 34598
cicero : 25605
aaDaa Finance 0798000100






# பனைமடலால் ஒரு மிரட்டல்

அன்பு, காதல், பாசம், பரிவு, இரக்கம், விட்டுக்கொடுப்பு இவையெல்லாம் மனம் சம்பந்தப்பட்ட விடயம். இரு மனங்கள் இணையாத உறவு பொய்யான உறவாகவே அமையும் என்பது உண்மை. அது காதலுக்கு மட்டும் விதிவிலக்கல்ல. அண்மையில் தமிழர்கள் மத்தியில் நடந்த இரு சம்பவங்கள் என் மனதை ஆட்டிப்படைக்கின்றன. இரு மனங்கள் இணையவில்லையென்றால், மறந்து போகின்ற மனதை வளர்த்து கொள்ளாத இளமை பித்துப்பிடித்தது போலாகிவிடுகின்றது.

காதலியை அடைய காதலர்கள் பல யுத்திகளை கையில் எடுப்பார்கள். எவ்வாறான ஈர்ப்பு அவளிடம் தன்னை இழுத்து எடுக்கின்றது என்பதை செயலாலும் சொற்களாலும் உணர்த்துவார்கள். இதைவிட கைகளைக் கிழித்து இரத்தத்தைக் காட்டி நீ இல்லையென்றால், என்னால் வாழமுடியாது என்று பயமுறுத்துதல், கிடைக்காத வேதனையை சிகரெட் புகையால் அனுபவதாக வெளிக்காட்டுதல் போன்ற மிரட்டல்கள் மூலமும் காதல் தோன்றுகின்றது. இவ்வகைக் காதல் ஒருவகை மன அழுத்தத்தை ஏற்படுத்தி தியாகத்தால் துளிர்த்து காதலாய் மலர்கின்றது.

உயிருக்குயிராகக் காதலித்த ஒரு பெண் சில கசப்பான காரணங்களால் வேண்டாம் என்று விட்டுப் பிரிந்தால் பிடிக்கவில்லை, போய்விட்டால் என்று மனதைத் தேற்ற வேண்டிய பெறுமதி மிக்க இளமையானது, அவளை குத்திக் கொலை செய்து விட்டு சிறையில் வாசம் செய்கிறது.

இன்னுமொரு இளமையானது உயிருக்குயிராகக் காதலித்த பெண் கிடைக்கவில்லையே என்று தன்னுடைய நாடி நரம்பை வெட்டி இரத்த வெள்ளத்தில் தன்னுடைய உயிரை மாய்த்துக் கொள்ளுகிறது. இவை இரண்டும் இன்று நேற்று தமிழர்கள் மத்தியிலும் திரைப்படங்களிலும் கண்ட காட்சிகள் அல்ல.

இதேபோன்று சங்ககால இலக்கியங்களிலே மடல் ஏறுதல், வரை பாய்தல் என்னும் பெருந்திணை இலக்கியங்களிலே இவ்வாறான ஒரு அழுத்தத்தை பெண்வீட்டாருக்கு அல்லது பெண்ணுக்கு ஆண் வர்க்கம் கொடுத்த தன்மையினைக் காணக் கூடியதாக இருக்கின்றது. பெருந்திணை என்பது பொருந்தாக்காமம் எனப்படுகின்றது. அன்பினைந்திணைக்கு[புணர்தல்,பிரிதல்,இருந்தல், இரங்கல், ஊடல்] அப்பால் ஏற்படும் புற ஒழுக்கங்களாகிய கைக்கிளை, பெருந்திணை என்னும் இரண்டு பகுதியிலே பெருந்திணைக்குள் அடங்குகின்ற மடலேறுதல், வரை பாய்தல் என்பன விரும்பாத பெண்ணை வலுக்கட்டாயமாக அடைய எடுக்கும் செயல்களாகும். இது இராக்கதம் என்று அழைக்கப்படும். இதேபோல் உறக்கத்தில் இருக்கும் பெண்ணிடமும் மது மயக்கத்தில் இருக்கும் பெண்ணிடமும் உடலுறவு கொள்வது பேய்நிலை என்றும் அழைக்கப்படுகின்றது.

ஆண்மகனானவன் உடல் முழுவதிலும் சாம்பல் பூசி, எருக்கம்பூ, ஆவரம்பூ மாலை அணிந்து பனை மடலால் செய்யப்பட்ட குதிரையிலே ஏறி அம் மடல்மாவை நண்பர்கள் அல்லது சிறுவர்கள் இழுத்து வர மன்றத்திற்கு வருவார்கள். அப்போது அப்பெண்ணிடம் காதல் கொண்ட விடயத்தைக் கூறியபடி தம் இருவருடைய படங்களையும் கீறி கையில் எடுத்துக்கொண்டு வருவான். இக்காதலை ஊரார் அறிந்து கொண்டார்கள் என்று வெட்கப்பட்ட பெற்றோர்கள், அவர்களுக்குத் திருமணம் செய்து வைப்பார்கள். இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டும் பெண்ணைப் பெற முடியாத நிலையில் வரைபாய்ந்து[ மலையில் இருந்து பாய்தல்] தம்மை மாய்த்துக் கொள்வார்கள். இது ஒரு தற்கொலை முயற்சியாகவும் பெண்ணுக்கும் அவளின் பெற்றோருக்கும் ஒரு மிரட்டலைத் தருகின்ற நிகழ்வாகவும் நடைபெற்றது.



**அகநானூறு 322 ஆவது பாடலிலே**
**ஆராக் காமம் அடூஉ நின்று**
**அலைப்பஇறு வரை வீழ்நர்**

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறுந்தொகை 182 ஆவது பாடலிலே மாதங்கீரனார் இவ்வாறு பாடுகின்றார்.

**விழுத்தலைப் பெண்ணை விளை**
**யல் மாமடல்**
**மணி அணி பெருந் தார்**
**மரபிற் பூட்டி**
**வெள் என்பு அணிந்து,**
**பிறர் எள்ளத் தோன்றி**
**ஒருநாள் மருங்கில் பெருநாண்**
**நீங்கி**
**தெருவின் இயலவும்**
**தருவது கொல்லோ?**
**கலிழ் கவின் அசை நடைப் பேதை**
**மெலிந்திலள் நாம் விடற்கு**
**அமைந்த தூதே!**


அழகு ஒழுகும் அசைந்த நடையையுடைய தலைவி நெஞ்சம் நெகிழவில்லை. நான் அவளிடம் விடுவதற்கு அமைந்த தூது என்னவென்றால், சிறந்த உச்சியையுடைய பனையின் முதிர்ந்த பெரிய மடலால் செய்யப்பட்ட மணிகள் அணிந்த குதிரையின் மேலேறி பெரிய மாலை முறைப்படி அணிந்து வெள்ளை எலும்பையும் அணிந்து ஒருநாளிலே பிறர் இகழும்படியாக நாணத்தை விட்டு தெருவிலே செல்வேன். அப்படிச் சென்றால், அவளை அடைய முடியும் என்பதாக இப்பாடல் அமைந்திருக்கின்றது.

இவ்வொழுக்கமானது எக்காலத்திலும் ஒரு பெண்ணை அடக்குமுறைக்குள் கொண்டு வருவதாகவே அமைகின்றது. இறுதியில் ஒத்துக் கொண்டால், ஆவதும் பெண்ணால், ஒத்துக் கொள்வில்லையானால் அழிவதும் பெண்ணால் என்னும் தீர்ப்பை வழங்கிவிடுவது இயல்பாகப்படுகின்றது.



மே தின வாழ்த்துக்கள்

# குமரிக்கடலில் மூழ்கிக்கிடக்கும் தமிழர் வரலாறு




தமிழர்களின் சிறப்புமிகு தொன்ம வரலாற்றை அறியவேண்டும் என்றால் அச்சடிக்கப்பட்ட காகிதங்களில் தேடிக்கொண்டிராமல் கடலுக்குள் தேடினால்தான் முழுமையாகக் கிடைத்தறியப் பெறும்.

தமிழ்நாட்டின் துறையூரில் பிறந்து தமிழ்நாட்டில் கல்வி கற்று வளர்ந்திருந்தாலும்கூட ஒரிசா மாநிலத்தில் நான் பணியாற்றிய ஆண்டுகளில் தமிழ், தமிழர்களுக்கும் ஒரிசாவுக்கும் இடையே பல ஒற்றுமைகள் இருப்பதைக் கண்டு என் தேடலை, ஆய்வைத் தொடங்கினேன். என் அந்தத் தேடல்ப் பயணம் இறுதியில் தென்குமரிக்கடலை நோக்கிச் சென்றது.

தமிழர்களின் பல்லாயிரம் ஆண்டுகள் வரலாறும், பண்பாடும், கட்டுமானங்களும், மாட மாளிகை கோபுரங்களும், வாழ்ந்த தரவுகளும் தென்குமரிக்கடலுக்குள் மூழ்கிக் கிடப்பதை மீனவர்கள் உதவியுடன் நீருக்குள் மூழ்கி உறுதி செய்தேன். பொருளுதவியும், ஆதரவும், ஒத்துழைப்பும் இருந்தால் மூழ்கிப்போன, மறைந்துபோன தமிழ், தமிழர் வரலாற்றை முழுவதுமாக மீட்டெடுக்க முடியும் என்ற மலைப்பு ஏற்பட்டாலும் என்றாவது இது நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கை மட்டும் என்னிடம் இருந்து விலகவில்லை.

லெமூரியா, குமரிக்கண்டம், தென்நாடு, தென்குமரி எனப்பலப் பெயர்களில் அறியப்படும் இந்நிலப்பரப்பு தமிழர்களின் வரலாற்றைக் கொண்டிருக்கும் பரப்பாக உள்ளது. இதனைப் புரிந்து கொள்வதற்கு நாம் முதலில் உலக இயக்கத்தை, புவியியலை, கடல்சார் மாற்றத்தைப் புரிந்து கொள்வது அவசியம். அதாவது, உலக நிலப்பரப்பு தற்போது எப்படி நம் கண்களுக்குத் தெரிகிறதோ அதனை வைத்தே அந்த நிலப்பரப்பின் நீள, அகலம், சுற்று எல்லாம் கணக்கிடுகிறோம்.



ஓரிசா பாலு (V) சி.பாலசுப்பிரமணி
கடல்சார் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வாளர்

ஆனால் சூரியக்குடும்பத்தின் செயல்பாடு என்பது நம் கணக்கீடுகளையெல்லாம் பல வேளைகளில் பொய்யாக்கிவிடுகிறது. நாம் வாழும் இந்தப் பூமி, சூரியனை தன் நீள்வட்டப் பாதையில் சற்று சாய்ந்த நிலையில் 1 லட்சத்து 7 ஆயிரத்து 300 கிலோ மீட்டர் வேகத்தில் சுற்றிவருகிறது. அதேபோல தன்னைத்தானே சுமார ஆயிரத்து 600 கிலோ மீட்டர் வேகத்தில் சுற்றிக்கொண்டே, சூரியனையும் சுற்றிவருகிறது. இந்த சூழற்சி கடற்கரைகளில் மாற்றத்தை உண்டாக்குகின்றன. இதுதவிர, அடிக்கடி ஏற்படும் நிலஅதிர்வுகள், பூமிக்கு 100 கிலோ மீட்டர் ஆழத்திலும், கடலுக்குள் 40 கிலோ மீட்டர் ஆழத்திலும் உள்ள நெருப்புக்குமிழ்கள் இருப்பதாலும் பூமியின் அச்சில் மாற்றம் ஏற்பட்டும் கடல்சார்ந்த நிலப்பரப்பில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இந்த சுழற்சி காரணமாக, பூமி, சூரியனுக்கு அருகில் செல்லும்போது கடல் மட்டம் அதிகரிப்பதும், பூமி சூரியனுக்கு வெகுதொலைவில் செல்லும்போது கடல்மட்டம் உள்வாங்குவதும் அவ்வப்போது நிகழ்வதுண்டு. இதுபோன்ற பல காரணங்களால், உலகம் முழுவதிலும் உள்ள பலநிரப்பரப்புகள் கடலில் மூழ்கும் நிலை உருவாகிறது. இந்தக்காரணங்கள் தவிர, பூமியின் மீது எரிகற்கள் விழும்போதும் நிலப்பரப்பு மற்றும் கடல் பரப்புகளில் மாற்றங்கள் நிகழ்கின்றன. எரிகற்கள் பூமியின் மீது விழுந்த விளைவாகவே லெமூரியா என்றும் குமரிக்கண்டம் கடலில் மூழ்கியதாக கடல்சார் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதில் குறிப்பாகப் பசிஃபிக் கடலில் மேலே உள்ள கனடா கடலுக்குள் ஆயிரத்து 500 கிலோ மீட்டர் நீளமும், 2300 மீட்டர் உயரமும் உள்ள மலை உள்ளதாக கருதப்படுகிறது. அப்படிப்பார்த்தால 3 ஆயிரம் கிலோமீட்டர் அளவுக்கான அந்தக் கடற்பரப்பில் இருந்த நீர் 2300 மீட்டர் உயரத்தில் இருந்த கடல்நீர் பின்வாங்கி எங்கே சென்றது என்ற கேள்வி எழுகிறது. அதேபோல, தற்போது உலகின் மிக உயரமான சிகரத்தைக் கொண்டிருக்கும் இமயமலை கடலாக இருந்த காலநிலையையும் நாம் ஆராயவேண்டியது அவசியம். ஒரு இடத்தில் பின்வாங்கும் கடல் நீர் பூமியைவிட்டு வெளியே எங்கும் ஓடிவிடாது, பூமியின் மற்றொரு பகுதிக்கே செல்லும் என்பது இயற்கை விதி என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

உலகிலேயே முதன் முதலாக,ஹெக்கல் என்பவர் மடகாஸ்கர் முதல் இந்தியா வரையிலான நிலப்பரப்புகள் குறித்து 1863ம் ஆண்டு விளக்கும் போது நில வழிப் பாலம் இருந்திருக்கலாம் எனக் கருத்து தெரிவித்துள்ளார். இதில், சிலேட் என்பவர் 1864 ம் ஆண்டு மடகாஸ்கர் முதல் இந்தியா வரையிலான இரு பகுதிகள் கொண்ட நிலப்பரப்பை லெமுரியா என பெயரிட்டார். அதாவது மடகாஸ்கரில் லெமு என்ற தேவாங்கு உள்ளது. அதேபோன்று, தமிழ்நாட்டின் ஊட்டியில் லெமு என்ற தேவாங்கு உள்ளது. மனிதன் குரங்கில் இருந்து வந்தான் என்ற கருத்தாக்கத்திற்கு முன்னோடியாக, குரங்கு தேவாங்கில் இருந்து வந்தது என்ற கருத்தாக்கம் உள்ளது. இதனை முன்னோட்டமாக கொண்டு, இரு பகுதிகளுக்கும்

26 ஆம் பக்கம் பார்க்க...




மே தின வாழ்த்துக்கள்

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...





இடைப்பட்ட பகுதியை லெமுரியா என குறிப்பிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1922ம் ஆண்டு தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி, லெமுரியா என்ற ஐரோப்பியர்கள் சூட்டிய பெயர் குறித்து விரிவான ஆலோசனை நடத்திப் பின்னர் குமரிக்கண்டம் என பெயர் மாற்றினார்கள்.

1916ம் ஆண்டு லெமூரியாக் கண்டம் குறித்து ஆய்வு செய்த ஆல்பட் வெஜ்னர் உள்ளிட்ட வரலாற்று அறிஞர்கள் லெமூரியாக் கண்டத்தை ‘கண்டத்திட்டு’ என அழைத்தனர். உலகில் பல லட்சம் ஆண்டுகளுக்கு முன் கடலால் பிரிந்த நிலம் என வர்ணித்தனர். இதனையடுத்து, ரஷ்யா, ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட 40 நாடுகள் 1959ம் ஆண்டு முதல் 1964ம் ஆண்டு வரை இந்தியப் பெருங்கடலுக்குள் மூழ்கிய நிலப்பகுதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டதில், முதல் கட்ட ஆய்வு வெளியிடப்பட்டது.

இதில், அந்தமான் முதல் ஆஸ்திரேலியா வரையிலும், தமிழ்நாடு முதல் மடகாஸ்கர் வரையிலும் உள்ள கடல் பகுதியில் ஏராளமான மலைகள், தீவுகள் உள்ளது எனப் பதிவு செய்தனர். பின்னர், அலெக்சாண்டர் கோந்தர தேவ் என்பவர் 1971ல் ‘மா கடல் மர்மங்கள்’ என்ற பெயரில் லெமூரியாக் கண்டம் குறித்து ஒரு நூலை வெளியிட்டார். இதில், இந்திய பெருங்கடல் தீவுப் பகுதிகளில், கடலில் மூழ்கிய நிலப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் உலக அளவில் நாகரீகத்தின் முன்னோடியாக இருந்தனர் என்ற குறிப்பை முன்வைத்தார்.

இது ஒரு புறம் இருக்க, சுப்பிரமணிய சாஸ்திரி என்பவர் 1917ம் ஆண்டு மடகாஸ்கர், ஆஸ்திரேலியா, தமிழ்நாடு எல்லை பகுதியில் வெறும் 49 நகரங்கள் மட்டும் கடலில் மூழ்கியிருந்தது என அறிவியல் தன்மையற்ற அளவில் பதிவிட்டிருந்தார். அதுபோல், சுமதி ராமசாமி என்பவர் 1990ம் ஆண்டில் லெமூரியாக் கோட்பாட்டை மறுத்து, லெமூரியாக் காலநிலையின் 150 வருடம் குறித்து நூல் வெளியிட்டார். இவர்களின் இதுபோன்ற கருத்தியல் காரணங்களால், குமரிக்கண்டம் என்பது இருந்ததா என்ற கேள்வி பலரிடம் எழுந்தது. ஆனால், லெமூரியாக் கண்டம் குறித்த இவர்களது ஆய்வுகள் மேலோட்டமாக உருவாக்கியதே தவிர, கடலில் இறங்கி ஆய்வு செய்தது இல்லை. அதனால், லெமூரியாவைக் குறுகிய பகுதிகளாக, குறுகிய கால ஆண்டுகளோடு ஒப்பிடுவது சரியான ஆதாரமாகவும், சரியான பதிவாகவும் இருக்காது. அதன் காரணமாகவே, லெமூரியாக் கண்டம் எனப்படும் குமரிக்கண்டத்தை பற்றிய சரியான ஆய்வுக்கு கடலில் இறங்கி ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அதனை அடிப்படையாக கொண்டு, தமிழகத்தின் கன்னியாகுமரியில் கடந்த 2007ம் ஆண்டு முதல் 10 ஆண்டுகளாக கடலில் இறங்கி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கன்னியாகுமரி முதல் மடகாஸ்கர் வரையிலான இந்த ஆய்வில் 72 கடல்சார் துறையிடம் தொடர்பு கொண்டு, ஆழ்கடல் மீனவர்கள் உதவியுடன், நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு மேற்கொண்டதில், கன்னியாகுமரி முதல் தென்பகுதியின் 130 கிலோ மீட்டர் தொலைவில் 12 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் வரை நிலப்பரப்புகள் இருப்பது உறுதி செய்யப்பட்டன. அத்துடன், கிரேக்கர்களால் ‘மரிக்கானா’ என அழைக்கப்படும் துறைமுகமானது, கன்னியாகுமரியில் இருந்து 53 கிலோ மீட்டர் தொலைவில் 44 சதுரக் கிலோ மீட்டர் நீளம், 22 சதுர கிலோ மீட்டர் அகலத்துடன் இருப்பது கண்டறியப்பட்டது. முக்கியமாக, தமிழகத்தின் தென் முனை கடல்ப் பகுதியில் மாலத்தீவு, மொரீசியஸ், அந்தமான், காசிமோஸ், லட்சத்தீவு போன்ற தீவுகளில் ஆய்வு செய்ததில், இந்திய பெருங்கடல் பகுதியில் 6 லட்சத்து 50 ஆயிரம் சதுரக் கிலோ மீட்டர் வரையில் சிறு, சிறு தீவுகள் வெறும் 20 மீட்டர் முதல் 130 மீட்டர் ஆழத்தில் மூழ்கி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கியங்களில் உள்ள குறிப்புகளை அடிப்படையாக கொண்டும் லெமூரியாக் கண்டம் குறித்த தகவல்களை அறிய முடிகிறது. குறிப்பாக, சிலப்பதிகாரம், கலித்தொகை, புறநானூறு, அகநானூறு, மார்க்கண்டேய புராணம், சைவ ஆகமம் போன்றவற்றில் மிகத் தெளிவாக லெமூரியா எனப்படும் குமரிக்கண்டம் குறித்த அரிய தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன. இதில், சிலப்பதிகாரத்தில் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் இறக்கும் போது, ‘மண்பதை காக்கும் தென்புலம் காவல்’ என்று சொல்லுவதில் இருந்து, தென் கடலுக்குள் இருக்கும் தீவுகள் குறித்து குறிப்பிட்டுள்ளார். அதனுடன், திருவள்ளுவர் வாழ்ந்த கிமு 31ம் ஆண்டு காலக் கட்டத்தில் லெமூரியாக் கண்டம் நிலப்பகுதியாக இருந்திருப்பதற்கான அடையாளங்கள் வள்ளுவரின் குறளிலும் உள்ளது. அதாவது,

> ‘‘தென்புலத்தார் தெய்வம் விருந்து
> ஒக்கல் தானென்றாங்கு
> ஐப்புலத்தாறு ஒம்பல் தலை’’



என்ற குறளில் தென்புலத்தார் என தமிழகத்தின் தென் திசையில் வாழ்ந்தவர்களையும், அங்கிருந்து வந்த ஏதிலியர்களையும் குறிப்பிடுகிறார். இதிலிருந்து, லெமூரியா எனப்படும் குமரிக்கண்டம் குறித்த இத்தகைய ஆய்வில் தமிழர்கள் தடம் பதித்துள்ளனர் என்பது அறிய முடிகிறது. குறிப்பாக, லெமூரியாக் கண்டத்தில் வாழ்ந்த மக்கள் தமிழர்கள் என்பதும் தமிழ் இலக்கியங்கள் மூலம் தெளிவாக அறிய முடிகிறது. அத்துடன், கன்னியாகுமரியில், குமரி என்ற கடல்முனை இருப்பது போன்று, மடகாஸ்கருக்கு அருகில் குமரோஸ் என்ற தீவு உள்ளது. அந்த மக்கள் குமரி என்ற மொழி பேசுகின்றனர். மடகாஸ்கரில் உள்ள பழங்குடியினரிடையே 30 சதவிகிதம் தமிழ் மொழி கலந்துள்ளது. அவர்களது திருமண முறை தமிழர் பண்பாட்டை ஒத்து அமைகிறது. மடகாஸ்கரில் மனக்கரை, சாம்பவன், தென்கரை எனத் தமிழ் மொழியில் ஊர்கள் இன்று வரை இருந்து வருகின்றன. இங்கு, ஆற்று மணலில் இருந்து தங்கம் பிரிக்கும் முறை, தமிழர்களின் முறையைப் போன்றே உள்ளது. தமிழகத்தில் கடல் பயணத்தில் திறன் கொண்ட திரைமீளர்கள் 1,024 திசை அறிந்து பயணம் செய்யும் திறன் கொண்டவர்கள். இவர்கள், தமிழகத்தில் இருந்து மடகாஸ்கர் பயணம் செய்யும் வகையில் ஆமை வழித்தடம் அமைந்துள்ளது.

இதில், குமரி மாவட்டத்தில் உள்ள ஆழ்கடல் மீனவர்கள் சீசெல்ஸ் என்ற தீவு முதல் லட்சத்தீவு வரை சென்று மீன் பிடிப்பதால், அவர்கள் மூலம் கடலில் மூழ்கியுள்ள நிலங்கள் பற்றிய ஆய்வில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முக்கியமாக, மனிதர்கள் வாழ்ந்து இருக்கக்கூடிய மூழ்கிய கட்டடப்பரப்புகள் பல இடங்களில் அடையாளப்படுத்த முடிகிறது. அதனுடன், தமிழகத்தில் இருந்து மடகாஸ்கர் வரையிலான 5 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவில் செய்த ஆய்வில் கடலில் மூழ்கிய கட்டடங்கள், தமிழகத்தின் அரிக்கம்மேடு பகுதியில் கிடைக்கக்கூடிய செம்பூரான் போன்ற கற்களை கொண்டு கட்டப்பட்டுள்ளது அறிய முடிகிறது. இதேபோன்ற கட்டட அமைப்புகள் சுமேரியா, சிந்து சமவெளி நாகரீகத்திலும் உள்ளன. இவை, இங்கிருந்தே அங்கு சென்றிருக்கும் என்பதற்கான தடயங்களும் லெமூரியா ஆய்வில் அறிய முடிகிறது.

உலகம் முழுவதும் தமிழரின் அடையாளங்கள் பரவி உள்ளது போல், வேறு எந்த அடையாளமும் பரவவில்லை. இதுபோன்ற ஒற்றுமைகளில் இருந்து, லெமூரியா எனப்படும் குமரிக்கண்டத்தில் தமிழர்கள் வாழ்ந்திருப்பார்கள் எனக் கூற முடியும். ஆதலால், தமிழக அரசு தமிழர்களின் சிறப்புகளை உலகிற்கு அறிமுகம் செய்ய குமரிக்கண்டம் குறித்த கடல் ஆய்வை குமரி பெருங்கடலில் தொடர்ந்து செய்ய வேண்டும். இதன் மூலம், தமிழர்களின் நாகரீகம், வணிகம், வீரம்,பண்பாடு உள்ளிட்ட தொன்மை வரலாற்றை உலக அரங்கிற்குக் கொண்டு சேர்க்க முடியும்.







மே தின வாழ்த்துக்கள்

# என் இனிய கதைநாயகிகள்!



**இயக்குனர் சிகரம் கே.பாலச்சந்தர். அவர்கள் தான் இயக்கிய திரைப்படங்களின் கதை நாயகிகள் குறித்து சொன்னவை.**

'என் கதைநாயகிகள் ஒவ்வொருவரையும் கதைக்காக நான் உருவாக்கியிருந்தாலும், அவர்கள் அனைவரும் அழுத்தமான சிந்தனைகளை சமூகத்தில் பதித்தவர்கள்.

'அச்சமில்லை அச்சமில்லை' – 'தேன்மொழி', என் மரியாதைக்குரியவள். அச்சம், கோபம், வெறுப்பு, ஆக்ரோஷம் என்று 'தேன்மொழியி'ன் அத்தனை உணர்ச்சிகளையும் திரையில் கொண்டுவந்தவர், சரிதா.

தேன்மொழி, தைரியமான பெண். நேர்மையும், சத்தியமும் முக்கியம் என்று நினைப்பவள். அப்படி ஒருவனான 'உலகநாதனை' [ராஜேஷ்] விரும்பி திருமணம் செய்துகொள்வாள். காலப்போக்கில் கட்சியில் வளரும் அவன், கொஞ்சம் கொஞ்சமாக தன் சுயத்தை இழந்து, நேர்மையில்லாதவனாக மாறிவிடுவான். இதைத் தாங்க இயலாதவளாக கணவனை கண்டித்துக்கொண்டே இருப்பாள்.

ஒரு கட்டத்தில் கணவன் செய்யும் அட்டூழியங்கள் எல்லை மீற, 'உம்மட அழகப் பாத்தும் உம்மட பல்லு வரிசையைப் பாத்தும் கட்டிக்கிறலைய்யா... உம்மட சொல்லுக்கும் உண்மைக்கும்தான் உமக்கு பொஞ்சாதியா ஆனேன்யா...' என்பாள். 'பொஞ்சாதிங்கிறவ அடுப்பங்கறையிலதான் இருக்கோணும். இன்னும் பச்சையா சொல்லணும்னா, நான் படுன்னா படுக்கணும்' என்பான். இறுதியாக கணவனைப் பிரிந்துவிடுவாள் தேன்மொழி. அதன் பிறகும் அவனுடைய அட்டூழியங்கள் தொடரும். ஒரு விழாவில், கணவனுக்கு மேடையில் மாலை போட்டு, மாலைக்குள் மறைத்து வைத்திருந்த கத்தியால் அவனைக் குத்தி கொலை செய்துவிட்டு ஜெயிலுக்குப் போவாள். படத்தின் கடைசிக் காட்சியில் காந்தி சிலைக்கு கீழ் 'சுதந்திரம்' என்ற பெயர் கொண்ட ஒருவன் அழுது கொண்டிருப்பான். 'சுதந்திரம் அழுது கொண்டிருக்கிறது' என்று படத்தை முடித்திருப்பேன்.

கணவனாகவே இருந்தாலும், அவனால் பிறர் பாதிக்கப்படக் கூடாது என முடிவெடுத்து அந்தக் குற்றவாளியைக் களையெடுக்கும் தேன்மொழி, நேர்மைக்கும் துணிவுக்கும் முன்னோடி. இன்று பெண் பிள்ளைகளுக்கான பாதுகாப்புக்கு, ஆண் பிள்ளைகளை வீட்டில் கண்டித்து வளர்க்க வேண்டியது பற்றி வலியுறுத்தப்படுகிறது. அதைத்தான் அன்றே சொன்னாள் என் 'தேன்மொழி'!

'அரங்கேற்றம்' படத்தின் நாயகி 'லலிதா', என்னால் மறக்க முடியாதவள். லலிதா பாத்திரத்தை பிரமீளா, ஏற்றிருப்பார்.'நாம் இருவர் நமக்கு இருவர்' என்கிற பிரசாரத்தை அரசாங்கம் முன்வைத்த தருணத்தில் எடுத்த இப்படத்தில், அதிகப் பிள்ளைகள் பெறும் குடும்பங்கள் படும் பாட்டை முன்வைத்திருப்பேன். ஒரு பிராமண புரோகிதருக்கு 8 பிள்ளைகள். லலிதா, மூத்தவள். அடுத்த தம்பி, கமல்ஹாசன். குடும்பத்தின் பசியைக்கூட முழுமையாக போக்க இயலாத புரோகிதரின் பிள்ளைகளுக்கு டாக்டராக வேண்டும், பாடகியாக வேண்டும் என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கனவு. தம்பி, தங்கைகளின் ஆசைகளை நிறைவேற்றத் தவிப்பாள் லலிதா. தம்பிக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் வாங்கித் தருவதற்காக சென்னைக்கு வருபவள், அரசியல்வாதி ஒருவனின் காமப்பசிக்கு பலியாகிவிடுவாள். நியாயம் கேட்க முடியாமல் அழுது தீர்த்து, ஒருவழியாக போராடி தம்பிக்கு இடம் வாங்கித் தந்துவிடுவாள். ஆனால், வீட்டினரை சந்திக்கும் தைரியம் இல்லாதவளாக, ஹைதராபாத்தில் வேலை கிடைத்துவிட்டதாகச் சொல்லி, குடும்பத்தைப் பிரிவாள்.

'இனி, இந்த உடல் எனக்குத் தேவையில்லை' என்பவள், ஒரு கட்டத்தில் விலை மாது என்று மாறி நிற்பாள். முன்பு தான் காதலித்த 'தங்கவேலு' [சிவகுமார்] எதிர்பாராதவிதமாக, இவள் இருக்கும் இடத்துக்கு வந்து அதிர்ச்சியில் உறைந்து நிற்பான். 'இது தப்புனு தெரியும். ஆனா, நீயும் என்னைத்தானே விலை பேச வந்திருக்கே?' என்று லலிதா கேட்க, கூனிப்போவான் தங்கவேலு.

இடையில் தங்கையின் திருமணத்துக்காக வீட்டுக்கு வரும் லலிதா, அவள் அம்மா நிறைமாத கர்ப்பிணியாக இருப்பதைக் கண்டு அதிர்ச்சியாவாள். கோபம் வந்தவளாய் சுவரில் வரைந்த முக்கோண சின்னத்தை காட்டும் இடத்தில், சமூகத்துக்குப் பாடம் சொல்லும் லலிதா, அந்த விழிப்பு உணர்வு இல்லாததால்தான் தனக்கு இந்நிலை என்பதை பரிதாபமாக உணர்த்துவாள். தன் மாராப்பு விலகியதைக்கூட கவனிக்காமல் இருப்பவளிடம், தங்கை அதை சுட்டிக்காட்ட, 'ஆம்பளை என்பதே மரத்துப் போச்சு!' என்பாள். உண்மை எல்லோருக்கும் தெரிய வரும்போது வாய்க்கு வந்தபடி பேசி விரட்டி அடிப்பார்கள். தங்கவேலு அவளைத் திருமணம் செய்துகொள்ள, அவளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக மனநிலை பாதிக்கப்பட்டு, கடைசியாக கடலை நோக்கி ஓடுவாள்.

சூழ்நிலையாலும் சமூகத்தாலும் அணைந்துபோன மெழுகுவத்தியாக இருந்தாலும், நாம் வாழும் சமூகம் குறித்து நம்மை யோசிக்க வைத்தவள் லலிதா.

நான் நேசிக்கும் சமகாலத்து கதாபாத்திரம், 'கல்கி'. இதில் ஸ்ருதி நடித்திருப்பார். தன்னைத் தானே செதுக்கிக்கொள்வது போல் படத்தில் வரும் சிலைதான், 'கல்கி'யின் இயல்பும். தான் சிந்திப்பதுதான் சரி என்று நினைப்பவள். அதேநேரத்தில், அவள் சிந்தனை புதுமையானதாகவும் தைரியமானதாகவும் இருக்கும். கற்பு என்பது உடம்பு சம்பந்தப்பட்டது அல்ல... மனதில் இருப்பது என்பாள். இப்போது பரவலாக இருக்கும் ரெடிமேடு இட்லி மாவு தொழிலை அப்போதே அறிமுகப்படுத்திய அறிவுக்குரியவள்.

படத்தில் நடித்த கீதா, ரேணுகா என்று இரண்டு பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் 'பிரகாஷ்' [பிரகாஷ்ராஜ்], இருவரையுமே கொடுமைப்படுத்துவான். கீதாவுக்கு குழந்தையில்லாத குறையை மனதில் வைத்து, பிரகாஷை திருமணம் செய்துகொள்ளும் கல்கி, அவன் பாணியிலேயே அவனை பாடாய்ப் படுத்துவாள். அவனால் கர்ப்பமாகி குழந்தையையும் பெற்று, கீதாவிடம் தருவாள். குழந்தை பெற்றுக்கொள்ள முடியாத ஒரு பெண்ணுக்கு, இன்னொரு பெண் எப்படி வாடகைத் தாயாக இருக்கிறாளோ, கிட்டத்தட்ட அதேமாதிரிதான் கல்கியும் தன் செயலால் நிரூபித்திருப்பாள். ஏற்கெனவே கல்கியைக் காதலித்த ரஹ்மான், அவள் ஒருவனுக்கு மனைவியாகி, ஒரு குழந்தைக்குத் தாயாகி திரும்பி வரும்போதும் புரிந்துகொண்டு முழுமையாக ஏற்றுக்கொள்ளும் நேசமுடைய பாத்திரம். முற்போக்கு சிந்தனைகள் குறைவாக இருந்த காலத்தில் வந்த படம். சமூகக் கட்டுப்பாடு அவசியம்தான். அதேநேரத்தில் தனிமனித சுதந்திரம் தேவையானதும்கூட. கல்கி, சமூகத் துக்கு புதிய சாட்டையடி தந்தவள். நான் எடுத்த படங்களை 'பார்ட் 2' எடுக்கச் சொன்னால், 'கல்கி'தான் என் சாய்ஸ்!

எந்நாளும் பெண்மையின் அறிவையும், துணிவையுமே பேசுபவர்கள்தான் என் கதைநாயகிகள்!'

**நன்றி: விகடன்.**



03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## முதலமைச்சர் பதவிக்காக ஆரம்பமாகியுள்ள போட்டி

தலைவர்கள் அனைவரும் அதன் கூட்டங்களில் கலந்து கொள்கின்ற போதிலும் விக்னேஸ்வரன் ஒரு தடவை கூட அதில் கலந்து கொள்ளவில்லை. தன்னுடைய பிரதிநிதி ஒருவரை அவர் அதற்கு அனுப்பி வைத்தார். அதேவேளையில் மாவை சேனாதிராஜாவிற்கு எதிராகவும் அவர் தொடர்ச்சியாக காய்களை நகர்த்திக் கொண்டிருந்தார்.

10 கட்சி கூட்டணிக்கு தலைமை தாங்கக்கூடிய தகுதியே ரெலோ அமைப்பில் இருந்து பிரிந்து தமிழ் தேசிய கட்சி என்ற பெயரில் ஒரு அமைப்பை தற்போது உருவாக்கி செயல்படுத்தி வரும் ஸ்ரீகாந்தாவுக்கு இருக்கிறது என சர்ச்சைக்குரிய கருத்து ஒன்றை விக்னேஸ்வரன் வெளியிட்டார். ஆனால் இதற்குத்தான் பொருத்தமானவர் அல்ல என்பதை ஸ்ரீகாந்தா பின்னர் விக்னேஸ்வரனிடம் நேரடியாக தெரியப்படுத்தவும் தகவல் உள்ளது. அதேபோல் கடந்த வாரம் மற்றும் ஒரு சர்ச்சையை அவர் வெளியிட்டார். வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக களத்தில் இறங்க பொருத்தமானவர் வேலன் சுவாமிகள் என்ற கருத்தை அவர் முன்வைத்தார். அத்துடன் மாவை சேனாதிராஜா அந்தப் பதவிக்கு பொருத்தமானவர் எனவும் அவர் தெரிவித்தது பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தி இருந்தது.

வேலன் ஸ்வாமிகளை பொருத்தவரையில் அண்மைக் காலத்தில் தான் அவர் அரசியல் அரங்கில் பேசப்படும் ஒருவராக முன்னுக்கு வந்திருக்கின்றார். மக்கள் போராட்டங்கள் மூலமாகவும் குறிப்பாக பொத்துவில் முதல் பொலிகண்டி வரை என்ற பெயரில் நடத்தப்பட்ட பேரணியில் முன்னணியில் இருந்ததன் மூலமாகவும் அவருடைய பெயர் தமிழ் மக்கள் மத்தியில் பிரபலமடையத் தொடங்கியது. சின்மயா மிஷனின் சேர்ந்த வேலன் சுவாமிகள் திடீரென அரசியலில் பிரவேசித்தது அவருடைய பெயர் பிரபலமடைந்தது கேள்விகளை ஏற்படுத்தியிருந்த பின்னணியில்தான் முதலமைச்சர் பதவிக்கு அவர்தான் பொருத்தமானவர் என்று கருத்து விக்னேஸ்வரனால் முன்வைக்கப்பட்டது.

வேலன் ஸ்வாமிகளை விக்னேஸ்வரன் முன்மொழிந்தமைக்கு காரணம் அவர் பொருத்தமானவர் என்பதால் அல்ல. முதலமைச்சர் பதவியில் கண் வைத்திருக்கும் மாவை சேனாதிராஜாவிற்கு எதிரான ஒரு காய் நகர்த்தல்லாகவே அதை அவர் முன்னெடுத்திருந்தார். விக்னேஸ்வரனின் இந்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த சர்ச்சைகளுக்கு மத்தியில் முதலமைச்சர் பதவிக்கு தான் இலக்கு வைத்து செயற்படவில்லை என்றும் அரசியலில் களம் இறங்கும் திட்டம் எதுவும் தன்னிடம் இல்லை எனவும் வேலன் சுவாமிகள் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார். அதை விட பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மக்கள் இயக்கத்தில் சம்பந்தப்பட்ட எவருமே அரசியலில் பிரவேசிக்கும் திட்டத்துடன் இல்லை எனவும் அவர் உறுதியாக கூறியிருக்கின்றார். அந்த வகையில் மாவை சேனாதிராஜாவிற்கு எதிராக விக்னேஸ்வரன் முன்னெடுத்திருந்தார் இரண்டாவது காய் நகர்த்தல் தோல்வியடைந்து இருப்பதாக தெரிகின்றது.

மாவைக்கு எதிராக விக்னேஸ்வரன் காய் நகர்த்துவது பார்த்துக்கொண்டு சுமந்திரன் தரப்பினர் இப்போது மௌனமாகவே இருப்பதாக தெரிகின்றது. தாங்கள் செய்ய வேண்டிய பணியை விக்னேஸ்வரன் திறம்பட செய்கிறார் என அவர்கள் நினைத்திருக்கலாம்.

ஆனால் மாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்படும் நிலையில் வேறு திட்டத்துடன் சுமந்திரன் தரப்பு இருப்பதாக தெரிகிறது. குறிப்பாக வட மாகாணசபையில் அமைச்சர் பதவியில் இருந்த ஒருவருடைய பெயரும் முதலமைச்சர் பதவிக்காக அடிபடுகின்றது.

இதனைவிட யாழ் மாநகர சபையின் மேயர் மணிவண்ணன் உடைய பெயரும் முதலமைச்சர் பதவிக்காக பேசப்படுகின்றது. அண்மையில் கைது செய்யப்பட்டு விடுதலையாகி இருப்பதன் மூலம் மணியின் பெயர் மேலும் பிரபலம் அடைந்து இருக்கிறது. விக்னேஸ்வரன் கூட மணிவண்ணனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தலாம் என்ற ஒரு கருத்தை வெளியிட்டு இருந்தார். தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து வெளியேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கும் மணிவண்ணனுக்கு இதுவரையில் ஒரு கட்சி இல்லை. ஆனால் அவருக்கு ஆதரவாளர்கள் நிறைய இருக்கிறார்கள். அதேவேளையில் சுமந்திரன் தரப்பினருடனும் மணிவண்ணன் அண்மைக் காலத்தில் நெருக்கமாக பழகி வருகிறார். அதனால் மணிவண்ணனை பொது வேட்பாளராக களமிறங்குவது தொடர்பிலும் ஆராயப்பட்டு வருவதாக தெரிகிறது.

கேள்விக்குறியாகி இருக்கும் விஷயம் என்னவென்றால் மாவை சேனாதிராஜாவிற்கு முதலமைச்சர் பதவி கிடைக்குமா என்பதுதான். அதே வேளையில் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இந்த தடவை தேர்தலில் முதல் தடவையாக போட்டியிட போகி;றது. மணிவண்ணன் பிளவு அவர்களுக்கு பாரிய ஒரு பின்னடைவாக இருக்கும் என்பது உண்மைதான். நடைபெறப்போகும் மாகாண சபைத் தேர்தல்களில் மூலம் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். ■

23 ஆம் பக்கத் தொடர்ச்சி...




தோற்றத்தை, கழுவும்தொட்டியின் அடிப்பகுதியில் சட்டிகள் மோதும் சத்தத்தை அனுபவித்தல்.

**உடுப்புத் தோய்த்தல்:** சுத்தமான துணிகளின் வாசனையை முகர்தல் மற்றும் துணிகளின் இழையமைப்பில் கவனம்செலுத்தல். உடுப்புக்களை மடிக்கும்போது சுவாசத்தை எண்ணுதல்.

**உடற்பயிற்சி:** எங்களின் சுவாசத்திலும், நகரும்போது எங்களின் கால்கள் இருக்கும் இடத்திலும் கவனம்செலுத்தல்.

இதேபோல வீட்டுக்கு வெளியில் இருக்கும்போதும் அந்தக் கணத்தில் இருத்தலுக்கான நிகழ்காலத்தில் வாழும் உத்தியை நாங்கள் பயிற்சி செய்யமுடியும். தேவையற்ற எண்ணங்கள் மனதில் எழும்போது, அவற்றைக் கவனித்து மெதுவாக அவற்றை ஒரு கரையில் ஒதுக்கிவிட்டு, எது எங்களை நன்றாக உணரச்செய்கிறதோ அதைச் செய்ய முயற்சிக்கலாம். எங்களின் பாதங்களுக்குக் கீழேயுள்ள தரையைக் கவனித்து காலால் தாளம் போடலாம். எங்களின் சுவாசத்தை உள்ளெடுத்து வெளிவிடும்போது அதன் வெப்பநிலையில் ஏற்படும் மாற்றத்தைக் கவனிக்கலாம். எங்களின் உடையை வருடுவதில், வெளிமூச்சின் கால அளவில், அல்லது எங்களின் கையில் இருக்கும் ஒரு கோப்பையின் சூட்டில் கிடைக்கும் சௌகரியத்தைக் கவனிப்பதாகக்கூட அது இருக்கலாம்.

இந்து சமயத்திலும் புத்த சமயத்திலும் உள்ள தியானம் என்ற கருத்துருவிலிருந்து உருவாக்கப்பட்ட மையக் கருவான அந்தக் கணத்தில் இருக்கும் திறனை வளர்த்துக்கொள்வது, திருப்திகரமான ஒரு வாழ்க்கையை நாங்கள் வாழ உதவுகிறது, வாழ்க்கையில் எங்களுக்குக் கிடைக்கும் மகிழ்ச்சியை நிறைவாக அனுபவிக்க வைக்கிறது, எங்களின் செயல்பாடுகளில் நாங்கள் முழுமையாக ஈடுபடுவதற்கு வழிகாட்டுகிறது. அத்துடன் பாதகமான நிகழ்வுகளைச் சமாளிப்பதற்கான திறன்களை வழங்குகிறது என்கிறார், மேற்கத்தைய நாடுகளில் இதனைப் பிரபல்யப்படுத்திய JonKabat Zinn. ■

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...




உடைந்தாலும், மாமிக்கு மனதுக்குள் ஒரு வித புழுகம், தனக்கு சொல்ல பறந்து வந்தே மருமகள் விழுந்தாள் என்று.

எனக்கு எழுத்தாளரின் குரலில் இருந்த மகிழ்ச்சி என்னையும் என் நினைப்பையும் ஓங்கி அறைந்து கொண்டு இருந்தது. ஒருவரின் நேரம் எவ்வளவு முக்கியம், அதனை அவர்கள் எதற்கு, எதற்கு, ஒதுக்குவது என்பதனை இன்னொருவர் தீர்மானிக்க கூடாது. என்ற உண்மை புரிந்தது. இந்தப் புரிதல் நிலைக்கும், என்பதில் எனக்கு துளியும் நம்பிக்கை இல்லை.

இருந்தாலும் இப்போது புரிந்ததே நான் மீண்டும் மனிதனாக வைத்தது.

ஒருவரை சுகம் கேட்க தொலைபேசியில் அழைத்தால், பதில் இல்லை என்றால் குறைந்தது பத்து நிமிடங்களின் பின் எடுத்துப் பாரர்க்வேண்டும். அடித்துக்கொண்டே இருத்தல் கூடாது. முதல் அடித்தது ஒரு சிக்கனல் போல் அவர்களை தயார்படுத்த உதவும். இல்லையேல் சுகம் கேட்டு சுகம் கெடுப்பதாகமுடியும். ■






# நான் நடிக்க ஆரம்பித்தால்...



இசையமைப்பாளராக உச்சம் தொட்ட ஏ.ஆர்.ரகுமான் ஒஸ்கார் விருதையும் வென்றார். தற்போது இன்னொரு பரிமாணமாக ‘99 சாங்க்ஸ்’ என்ற படத்துக்கு கதாசிரியராகவும் தயாரிப்பாளராகவும் மாறி உள்ளார். அடுத்து படம் இயக்கவும் சினிமாவில் நடிக்கவும் முடிவு செய்து இருப்பதாக தகவல் பரவி உள்ளது. இதற்கு பதில் அளித்து ஏ.ஆர்.ரகுமான் கூறும்போது, ‘இயக்குனராக மாறுவதற்கு இன்னும் பல காலம் ஆகலாம். அதற்கு இப்போது எனக்கு நேரமும் இல்லை. ஆனால் படம் தயாரிப்பதும், கதை எழுதுவதும் எளிமையாக உள்ளது. நான் நிறைய கதைகள் எழுதி வைத்து இருக்கிறேன். தற்போது எனது கதையில் தயாராகி உள்ள 99 சாங்ஸ் படத்துக்கு கிடைக்கும் வரவேற்பை பொறுத்து அடுத்த படத்துக்கு கதை எழுதுவது பற்றிய முடிவை எடுப்பேன். சினிமாவில் நடிப்பீர்களா? என்று கேட்கிறார்கள். எனக்கென்று சொந்த உலகம் இருக்கிறது. அதில் இருக்கவே விரும்புகிறேன். நடிக்க ஆரம்பித்தால் இன்னும் பிரபலம் ஆகி விடுவேன். இசை மற்றும் கதை எழுதும் பணியை செய்யவே விரும்புகிறேன் என்றார்.



# தயாராகும் ‘விக்ரம்’




இயக்குனர் லோகேஷ் கனகராஜ் தேர்தலுக்குப் பின்னர் கமல்ஹாசனை சந்தித்த புகைப்படத்தை பதிவேற்றியுள்ளார்.

இயக்குனர் லோகேஷ் கனகராஜ் மிகப்பெரிய கமல் ரசிகர். அவரின் கைதி படத்தை விருமாண்டியின் தொடர்ச்சி என்றும் மாஸ்டர் படத்தில் நம்மவர் படத்தை நினைவுபடுத்தும் காட்சிகளும் உள்ளன.

இந்நிலையில் லோகேஷ் கமலை வைத்து விக்ரம் என்ற படத்தை இயக்க உள்ளார்.

இதற்கான போட்டோஷட் எல்லாம் நடந்து முடிந்திருந்தாலும், கமல் தேர்தலில் பிஸியாக இருந்ததால் படப்பிடிப்பு தள்ளிப்போனது.

இந்நிலையில் இப்போது தேர்தல் முடிந்துள்ள நிலையில் கமல்ஹாசனை அவரது ஹெலிகொப்டரில் சந்தித்த லோகேஷ் கனகராஜ் ‘ஆரம்பிக்கலாங்களா சூவிக்ரம்’ என குறிப்பிட்டுள்ளார். இதனால் விரைவில் விக்ரம் படத்தின் படப்பிடிப்பு தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# விஜய் 65

மாஸ்டர் படத்தை அடுத்து நெல்சன் திலீப் குமார் இயக்கும் தனது 65 ஆவது படத்தில் நடிக்கிறார் விஜய். தமிழக சட்டசபை தேர்தலில் வாக்களித்து விட்டு ஜோர்ஜியா பறந்தார் விஜய்.

இவரை தொடர்ந்து நாயகி பூஜா ஹெக்டேவும் அங்கு சென்றுள்ளார். இந்நிலையில் அங்கு படப்பிடிப்பு துவங்கி உள்ளது. படப்பிடிப்பு தளத்தில் விஜய்யும், நெல்சனும் நின்று கொண்டிருக்கும் போட்டோவை தயாரிப்பு நிறுவனம் வெளியிட்டுள்ளது.

# கர்ணன் இயக்குநருடன் சூர்யா?

இயக்குநர் ராமிடம் உதவி இயக்குனராக பணியாற்றியவர் மாரி செல்வராஜ். இவர் கடந்த 2018ஆம் ஆண்டு வெளியான பரியேறும் பெருமாள் படம் மூலம் இயக்குனராக அறிமுகமானார்.

இப்படத்திற்கு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து, தனுஷ் படத்தை இயக்கும் வாய்ப்பை பெற்றார். அதன்படி தனுஷை வைத்து இவர் இயக்கி உள்ள கர்ணன் படம், அண்மையில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.இதையடுத்து இயக்குனர் மாரி செல்வராஜ், அடுத்ததாக விக்ரம் மகன் துருவ் நடிக்கும் படத்தை இயக்க உள்ளார்.



பா.இரஞ்சித் தயாரிக்கும் இப்படம் கபடி விளையாட்டை மையமாக வைத்து உருவாக உள்ளதாம்.இந்நிலையில், இயக்குநர் மாரி செல்வராஜ், சூர்யாவை வைத்து படம் இயக்க உள்ளதாக சமூக வலைதளங்களில் தகவல் பரவி வருகிறது.

ஆனால் இதுகுறித்து இருவர் தரப்பில் இருந்தும் எந்தவித தகவலும் வெளியாகவில்லை.



Deutsche Bank

# Willkommen in Ihrer Filiale Duisburg.



Janagran Mahendran
Berater Private Banking

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com


Deutsche Bank
Mehr Wünsche erfüllen.
Möglich mit dem PrivatKredit, der Ihnen finanziellen Spielraum gibt.
#PositiverBeitrag
Jetzt mit 1,75 % effektivem Jahreszins.*
Nettodarlehensbetrag 1.000 EUR
Effektiver Jahreszins* 1,75%
Fester Sollzinssatz p. a. 1,74%
Monatliche Rate 84,12 EUR
Laufzeit in Monaten/Anzahl Raten 12
Zu zahlender Gesamtbetrag 1.009,43 EUR
Das Angebot entspricht dem repräsentativen Beispiel gemäß § 6a Absatz 4 PAngV.
*Gilt für einen Kreditbetrag von 1.000 bis 50.000 Euro bei 12 Monatsraten (gilt nur für Kunden ohne bestehenden Deutsche Bank PrivatKredit). Diese Kondition erhalten mindestens 2/3 der Kunden bei Abschluss eines Deutsche Bank PrivatKredits. Laufzeit in Abhängigkeit vom Ratenzahlungsbeginn: 12 bis 16 Monate. Das Angebot ist gültig bis 31. März 2021. Bonität vorausgesetzt.
Darlehensgeber: Deutsche Bank AG, Theodor-Heuss-Allee 72, 60486 Frankfurt am Main


EurAsian-Tour
VALUTRANS MONEY TRANSFER
EurAsian-Tour Further Str.146 41462 Neuss
Rishi Ganeshamoorthy | Rishi 0174 96 44 965
Tel:02131 7387 83 Fax:02131 73 87 84 | info@eurasian-tours.com


Jasmine Silk House
என்றும் எம்முடன் இணைந்து
இருங்கள். உங்களுக்கு சேவை
செய்ய காத்திருக்கிறோம்.
தொடர்பு இலக்கம்: 01731937325
ஆடைகளின் ராணி
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House"
Fester Str.50- 40882 Ratingen


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
Ria Money Transfer
VALUTRANS MONEY TRANSFER
MoneyGram
உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Ludwig str.87a
70197
Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்றேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Stuttgart நகரில்...
Tel: 0711 615 8976/ 0170 334 4059


Shakthy Foundation
துவாரகமாய் முதியோர் இல்லம்
SHAKTHY FOUNDATION
தொடர்புகளுக்கு:-
Dwarakamal Senioren WG
Alpenroder Str.59 65936 Frankfurt am Main, Germany
Tel: 0152-14069504 Mrs.Nava (Resha)
சீரடி பாபாவின் அருளால் ஜேர்மனி பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் திகதி துவாரகமாய் முதியோர் இல்லம் உருவாகியுள்ளது. எமது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே உங்களுக்கு ஓர் நற்செய்தி. உங்கள் பெற்றோரை உங்களைப் போலவே அன்பாக அரவணைத்து பராமரிப்போம் கவலையை விடுங்கள் பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் தகதி முதல் துவாரகமாய் முதியோர் இல்லம் அமைந்துள்ளது. இங்கு தமிழில் உரையாடி நமது தமிழ் உணவுடன் முதியவர்கள் பராமரிக்கப்படுகின்றார்கள். இதற்கு அருகாமையில் அழகான பூங்கா மற்றும் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம் மற்றும் சித்தி விநாயகர் ஆலயம் அமைந்தள்ளது. இல்லத்தினால் பெறும் வருமானங்கள் 28.03.2018 திரு. திருமதி. நவநீதன் நிஷாந்தியாவினால் இலங்கையில் உருவாக்கப்பட்ட மாணவர் விடுதிக்கு செலவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விடுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள பல மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள்.
Shakthy Foundation
Acc No:
173020027815
HATTON
NATIONAL BANK
Trincomale,
Srilanka
Shakthy Foundation T/M/Chennaiyoor, Central College, Mutur, Trincomale, Srilanka. | S.Rajathurai: +94 77 338 4637


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main
புதிய இடத்தில்!! புதிய பொலிவுடன்!!
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K France Germany Australia South Africa Canada U.S.A


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அ.க.ம
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698

மே தின வாழ்த்துக்கள்